


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:288 | 03-05-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# 13 மொழிகளில் இன்று 'நீட்' நுழைவுத் தேர்வு
# 22.80 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர்

**சென்னை, மே 3:**

இந்தியா முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவை நீட் தேர்வு மூலம் நிரப்பப்படுகின்றன. அதேபோல, ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மருத்துவப்படிப்புகளில் சேருவதற்கான 'நீட்' நுழைவுத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. அதன்படி, 2026-27-ம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது. இந்த தேர்வை இதுவரை இல்லாத வகையில் 22.80 லட்சம் மாணவ-மாணவிகள் எழுத உள்ளனர்.

## "உயிரைவிட எந்தத் தேர்வுகளும் முக்கியமில்லை:" தேசிய தேர்வு முகமை அறிவுரை



தேர்வு பிற்பகல் 2 மணி முதல் மாலை 5.20 மணி வரை அதாவது 3 மணி நேரம் 20 நிமிடம் தேர்வு நடைபெற இருக்கிறது. தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் இந்த தேர்வை எழுத முடியும்.

இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடப்பிரிவுகளில் இருந்து 180 கொள்குறி வகை வினாக்கள் கேட்கப்பட்டு ஒவ்வொரு வினாவுக்கு 4 மதிப்பெண் வீதம் 720 மதிப்பெண்ணுக்கு இந்த தேர்வு நடைபெறுகிறது. தவறான விடைக்கு ஒரு மதிப்பெண் கழிக்கப்படும்.நீட் தேர்வுக்கு வரும் தேர்வர்கள் கடும் சோதனைக்கு பிறகே தேர்வறைக்கு உள்ளே அனுப்பப்படுவார்கள்.

அந்த வகையில் தேர்வை நடத்தக் கூடிய தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.) தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் விதிமுறைகளை வெளியிட்டு இருக்கிறது.


உதவி மையங்கள் அறிவிப்பு: மேலும் தேர்வு மையம் இருக்கும் இடத்தை முன்கூட்டியே வந்தடையும் வகையில் பயணங்களை மேற்கொள்ள வேண்டும். உங்கள் மனநலமும் ஆரோக்கியமும்தான் எங்களுக்கு முன்னுரிமை. உங்கள் உயிரைவிட எந்தத் தேர்வுகளும் முக்கியமில்லை. நீங்கள் மன அழுத்தம், கவலை அல்லது வேறு ஏதேனும் அதிக அழுத்தத்தில் இருந்தால், தயவுசெய்து உதவி மையங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் தனியாக இல்லை, உங்களுக்கு நிச்சயம் உதவி கிடைக்கும். உங்களை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் உங்களை நம்புகிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், 24X7 நேரமும் செயல்படும் தேசிய மனநல உதவி மைய எண்களான 14416 அல்லது 1-800-891-4416 என்ற எண்களில் இலவச, ரகசிய ஆலோசனை பல மொழிகளிலும் கிடைக்கும் என்றும் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் 'நட்புடன் உங்களோடு' திட்டத்தில் மனநல ஆலோசனைப் பெற கட்டணமில்லா - தொலைபேசி எண் 14416 அல்லது 104ஐ அழைக்கலாம்.

# சத்தீஷ்கார்: கண்ணிவெடி அகற்றும்போது சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்து 3 வீரர்கள் பலி

**கான்கேர், மே 3:**



சத்தீஸ்கர் மாநிலம் கான்கேர் மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை) நடைபெற்ற கண்ணிவெடி அகற்றும் பணியின்போது, ஐஇடி வெடிபொருள் வெடித்ததில், டிஆர்ஜி மாவட்டக் காவல் படையை சேர்ந்த மூன்று வீரர்கள் உயிரிழந்தனர், ஒருவர் படுகாயமடைந்தார்.

கான்கேர் - நாராயண்பூர் எல்லைக்கு அருகே உள்ள பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக சோட்டேபேத்தியா காவல் நிலையத்திலிருந்து ஒரு குழு அங்கு அனுப்பப்பட்டது. அங்கே மாவோயிஸ்டுகளால் முன்னரே புதைக்கப்பட்ட ஒரு ஐஇடி வெடிபொருளை செயலிழக்கச் செய்யும் முயற்சியின்போது அது தற்செயலாக வெடித்து சிதறியது. இந்தத் தீவிர வெடிப்பில் 4 டிஆர்ஜி வீரர்கள் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில், ஆய்வாளர் சுக்ராம் வட்டி, காவலர்கள் கிருஷ்ணா கோம்ரா மற்றும் சஞ்சய் கத்வாலே ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த மற்றொரு காவலரான பரமானந்த் கோம்ராவுக்கு தற்போது மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து பேசிய பாஸ்டர் சரகக் காவல் துறைத் தலைவர் பி.சுந்தர்ராஜ் கூறும்போது, "கடந்த சில மாதங்களாக, உளவுத் துறை தகவல்கள் மற்றும் சரணடைந்த மாவோயிஸ்ட் தொண்டர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஐஇடி-களை வெற்றிகரமாகக் கண்டெடுத்துச் செயலிழக்கச் செய்தனர். இருப்பினும், இப்பகுதியை மேலும் பாதுகாப்பானதாக மாற்றும் தொடர் முயற்சியின்போது இந்த துயரமான விபத்து நடந்தது" என்று தெரிவித்தார்.

இந்த பகுதியை பாதுகாப்பதற்காக நடந்து வரும் ஒரு முயற்சியில் ஏற்பட்ட இந்த சம்பவம் சோகத்திற்குரியது என கூறியுள்ளார்.

# செட்டிநாட்டு குமாரராணி முனைவர் மீனா முத்தையா மறைவு – முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, மே 3:**

முதல்வர் ஸ்டாலின் அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், "செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சேர்ந்த குமாரராணி முனைவர் மீனா முத்தையா மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். கலைச் சேவை, கல்விச் சேவை இரண்டையும் தமது வாழ்வின் இருபெரும் லட்சியங்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் மீனா முத்தையா.

தஞ்சாவூர்க் கலைக்குப் புத்துயிர் கொடுத்து, அதற்காகவே குமார ராஜா முத்தையா கலை மற்றும் கைவினைக் கலைப் பள்ளியின் மூலம் பயிற்சியும் அளித்து வந்த அவரது பணிகள் என்றென்றும் நினைவுகூரப்படும். தனிப்பட்ட முறையிலும் எங்களது குடும்பத்துடன் இனிய நட்புறவைப் பேணி வந்த அவர், எனது துணைவியாரின் நூல் வெளியீட்டு விழாவிலும் 2018-ஆம் கலந்துகொண்டு உரையாற்றியதைஇவ்வேளையில் நினைவுகூர்கிறேன். மீனா முத்தையா மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர்கள், உறவினர்கள், நண்பர்கள், நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய பஞ்சாங்கம்

ஞாயிற்றுக்கிழமை
(03–05–2026)
பராபவ ஆண்டு,
சித்திரை–20

சூரிய உதயம் 5.50

திதி:
துவிதியை பின்னிரவு 2.39 வரை பிறகு திருதியை,

நட்சத்திரம்:
விசாகம் காலை 6.59 வரை பிறகு அனுஷம்

யோகம் :
மரண யோகம்.

நல்ல நேரம்
காலை 7.00 – 8.00.
மாலை 3.00 – 4.00.

இராகு காலம்
மாலை 4.30–6.00 மணி.

எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி.

குளிகை
மாலை 3.00 – 4.30 மணி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிய... புதிய இணையதள முகவரி!




**புதுடெல்லி, மே 3:**

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்காக தேர்தல் ஆணையம் பிரத்யேக இணையதள முகவரியை வெளியிட்டுள்ளது.

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்குவங்கம் மற்றும் அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களின் முடிவுகள் திங்கள்கிழமை (2026, மே 4) காலை 8 மணி முதல் அனைத்து வாக்கு எண்ணிக்கை மையங்களிலிருந்து கீழ்காணும் இணையதளங்களில் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள https://results.eci.gov.in/ என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் பிரத்யேகமான இணையதளத்தில் ஒவ்வொரு தொகுதியின் சுற்று வாரியான நிலவரங்களும், முடிவுகளும் நொடிக்கு நொடி புதுப்பிக்கப்பட்டு, வெளியிடப்படும்.

இது தவிர ECINET மற்றும் வாக்காளர் உதவி Voter Helpline என்ற செயலியின் வாயிலாகவும் நிலவரங்களையும், முடிவுகளையும் பொது மக்கள் உடனுக்குடன் அறிந்துக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்ட வாக்கு எண்ணிக்கை மையங்களில் உள்ள தேர்தல் பொறுப்பு அதிகாரி வழங்கும் தகவல்கள், இணையதளத்திலும், செல்பேசி செயலியிலும் வெளியிடப்படும்.

# நாளை முதல் கத்தரி வெயில்! கோடை மழைக்கு வாய்ப்பு?

**சென்னை, மே 3:**

தமிழ்நாட்டில் கோடை காலம் மார்ச் மாதம் தொடங்கி சுட்டெரித்து வருகிறது. நேற்று முன்தினம் வேலூரில் 108 டிகி ரியை தாண்டி வெயில் பதிவாகியது. இதுபோல் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் 105 டிகிரியை கடந்தும், சில இடங்களில் 100 டிகிரியை தாண்டியும் வெப்பம் கோர முகத்தை காட்டி வருவதை பார்க்க முடிகிறது.

இதன் தொடர்ச்சியாக கோடை காலத்தின் உச்சம் என்று கூறப்படக் கூடிய அக்னி நட்சத்திரம் என அழைக்கப்படும் கத்தரி வெயில் காலம் வருகிற 4-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை நீடிக்கும். இந்த காலகட்டத்தில் வெப்பம் கோரத்தாண்டவம் ஆடும். பகலில் கொளுத்தும் வெயிலால் இரவில் கடும் உஷ்ணத்தை உணர முடியும். பகலில் 110 டிகிரி வரை கூட வெப்பத்தின் தாக்கம் பதிவாகும்.



அந்த வகையில் நாளை (திங்கட்கிழமை) தொடங்க இருக்கும் கத்தரி வெயில் காலம் இந்த ஆண்டு எப்படி இருக்கும்? என்பது குறித்து தனியார் வானிலை ஆய்வாளர் டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்தர் விளக்கம் அளித்தார்.

முதல் 2 வாரங்கள் கடல் சார்ந்த அலைவுகள் இந்திய பெருங்கடல் பகுதிகளுக்கு வருகிறது. வெப்பமண்டல காற்று குவிதல் வடக்கு நோக்கி பயணிக்க இருக்கிறது. இதனால் இந்த ஆண்டு கத்தரி வெயில் காலம் வெப்பமும், கோடை மழையும் கலந்த கலவையாகவே இருக்கும். கோடை மழை இயல்பைவிட அதிகமாகவே பதிவாகும்.

இதுமட்டுமல்லாமல், தென்மேற்கு பருவமழை நடப்பாண்டில் முன்கூட்டியே வருகிற 23-ந்தேதி முதல் 25-ந்தேதிக்குள் கேரளம் மற்றும் அதனையொட்டிய கர்நாடகா, தெற்கு ஆந்திராவில் தொடங்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது. பருவமழைக்கு முந்தைய மழைப்பொழிவும் கோடை காலத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது பருவக்காற்றை கொண்டு வரக்கூடிய காற்று சுழற்சி, காற்றழுத்த தாழ்வுப் பகுதி, புயல் போன்ற அமைப்புகள் உருவாகி மழையை கொடுக்கும்.

அதாவது, இம்மாதத்தின் முதல் வாரத்தில் மேற்கு, உள்மாவட்டங்களில் மழையும், 2 மற்றும் 3-வது வாரத்தில் தமிழ்நாட்டில் பரவலாக மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. அதுவும் இடி மின்னலுடன் கூடிய மழையாகவே இருக்கும். அதிலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 4-வது வாரத்தில் பருவமழை தொடங்கிய பிறகு தமிழ் நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் மழை பெய்யக் கூடும்.

ஆக கத்தரி வெயில் காலத்தில் கோடை மழை என்ற சாதகமான சூழலே தற்போதுவரை இருக்கிறது.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களுடன் மே மாத கணிப்பை ஒப்பிடுகையில் வெப்பம் காணப்பட்டாலும், கோடை மழை அதிகம் பதிவாகும் என்றே தெரிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice
➤ Legal Notice
➤ Tender Notice
➤ Society Notice
➤ Loss of Share
➤ Merger
➤ Acquisition
➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# திருக்குறள் குறள்-608

மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்



சோம்பல் நல்ல குடியில் பிறந்தவனிடம் வந்து பொருந்தினால், அஃது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமையாகுமாறு செய்துவிடும்.

## சிந்திக்க ஒரு நொடி



எதிர்த்து நிற்போர்
எல்லாம் எதிரிகள்
இல்லை உடன்
இருப்போர் எல்லாம்
உறவுகள் இல்லை
காலமே நிர்ணயிக்கிறது
எதிரி யார் உறவு யார்
என்று

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## சித்ரா பௌர்ணமி சிறப்பு கருடசேவை..!



**வந்தவாசி, மே 03:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் சித்ரா பௌர்ணமி இரவு கருடசேவை வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் உற்சவ மூர்த்தி மேளதாளத்துடன் வெள்ளி கருட வாகனத்தில் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார். வந்தவாசி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## அன்னை ஸ்ரீ சந்தன மாரியம்மன் திருத் தேரோட்டம்

**தூத்துக்குடி, மே 03:** தூத்துக்குடி மாவட்டம், விளாத்தி குளம் தாலுகா விற்கு உட்பட்ட நாகலாபுரம் பள்ளிவாசல் தெரு நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு அன்னை ஸ்ரீ சந்தன மாரியம்மன் திருத் தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது. பக்த கோடிகள் அனைவரும் கலந்து கொண்டு அன்னை யின் திருத்தேரை வடம்பிடித்து இழுத்து அன்னையை தரிசனம் செய்தனர் .



**செய்தியாளர் கோவில்பட்டி கோ. சுரேஷ்குமார்.**

## சித்ரா பௌர்ணமி சிறப்பு வழிபாடு

**விழுப்புரம், மே 03:** விழுப்புரம் மாவட்டம் மே1 விக்கிரவாண்டி அருள்மிகு புவனேஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள புவனேஸ்வரி அம்மனுக்கு சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடை பெற்றது.ஏராள மான பக்தர்கள் புவனேஸ்வரி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.



தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




திருப்புல்லாணி தீர்த்தவாரி நேற்று நடந்தது.

# காட்பாடி ரெட் கிராஸ் சங்கம் சார்பில் 2வது நாளாக நீர் மோர் வழங்கல்!



**வேலூர், மே 03:** கடும் கோடை வெயிலை முன்னிட்டு காட்பாடி ரெட் கிராஸ் சங்கம் சார்பில் 2வது நாளாக நீர் மோர் வழங்கி பொதுமக்களை குளிர வைத்தனர்.

வேலூரில் கடும் வெயிலை முன்னிட்டு பொதுமக்களுக்கும், பாதசாரிகளுக்கும் காட்பாடி ரெட் கிராஸ் சங்கமும், காந்திநகர் புத்து மாரியம்மன் ஆலய நிர்வாகிகளும் இணைந்து 2வது நாளான இன்றும் கத்திரி வெயில் முடிவடையும் நாளான மே 28ஆம் தேதி வரை தினமும் நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரை நீர் மோர் வழங்கும் நிகழ்வு 2வது நாளாக நடைபெற்றது.

காட்பாடி காந்திநகர், தனபாக்கியம் திருமண மண்டப பேருந்து நிறுத்தம் புத்து கோயில் அருகில் நீர் மோர் வழங்கும் நிகழ்வு 2வது நாளாக நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு காட்பாடி ரெட் கிராஸ் சங்கத்தின் அவைத் தலைவர் முனைவர் செ.நா.ஜனார்த்தனன் தனது 63வது பிறந்தநாளை முன்னிட்டு தொடங்கி வைத்தார்.மேலாண்மைக்குழு உறுப்பினர் தணிகைசெல்வம், அமுதா, செயலாளர் எஸ். எஸ்.சிவவடிவு, பொருளாளர் வி.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட மேலாண்மை குழு உறுப்பினர் முனைவர். ஆர். சீனிவாசன், காட்பாடி அவை துணைத்தலைவர் ஆர். விஜயகுமாரி, மருத்துவக் குழு தலைவர் டாக்டர். வீ.தீனபந்து, மேலாண்மை குழு உறுப்பினர்கள் நாராயணா தங்கவேல் நாடார், எஸ்.ரமேஷ்குமார் ஜெயின், ஆர். ராதாகிருஷ்ணன், ஏ.ஸ்ரீதரன் ஜெயின், ஆனந்தகுமார், ஆர். சுதாகர், எஸ்.தன்வின், எஸ். தைவிக், செ.ஜ.சோமசுந்தரம்,எம். டீக்காராமன், எஸ். பன்னீர்செல்வம், மனோகர், லக்ஷ்மணன், குமரவேல், பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர். நகர பேருந்து ஓட்டுநர், நடத்துநர், பொதுமக்கள், நடைபாதையில் செல்வோர், வியாபாரிகள் உள்ளிட்ட இந்த சாலையை கடந்து சென்ற அனைவருக்கும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தொடர்ந்து இடைவிடாது நீர் மோர் வழங்கினர்.

# நரசிம்ம பெருமாளுக்கு ஹோம பூஜைகள்..!



**வந்தவாசி,மே 03:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாயகி தாயார் சமேத ஸ்ரீ ரங்கநாதர் பெருமாள் கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லஷ்மி நரசிம்ம பெருமாளுக்கு நேற்று சுவாதி நட்சத்திரத்தன்று சிறப்பு ஹோம பூஜைகள் நடைபெற்றது. மேலும் மூல மூர்த்திகளுக்கு விசேஷ ஆராதனை நடந்தேறியது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# 42ம் ஆண்டு வஸந்த உற்சவம்



**தஞ்சாவூர், மே 03:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் நான்காவது திருவிழான நேற்று (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் தாயார் சமேதராய் பெருமாள் வஸந்த மண்டபத்தில் எழுந்தருளி தடாக சிறப்பு திருமஞ்சனம், அதனைத் தொடர்ந்து மதியம் 1 மணியளவில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இரவு 7 மணிக்கு தாயார் சமேதராய் பெருமாள் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், வஸந்த உற்சவம் சபை மற்றும், உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

# முப்பெரும் விழா



**திருச்சி, மே 03:** "அகிலம் வெல்வோம் அறக்கட்டளை - முப்பெரும் விழா " திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத்தில் நேற்று 02.05.26 நடைபெற்றது.

முதலாம்ஆண்டு விழா, அன்பு சேவகர் விருதுகள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை திரு. Eye God தமிழரசு, வழக்கறிஞர் கோபால்சாமி இருவரும் தொகுத்து வழங்கினர்.

சிறப்பு விருந்தினராக பாரதிதாசன் பல்கலைக் கழக கலைப்புலத் தலைவர் மகளிரியல் துறை பேராசிரியர் முனைவர் ந.முருகேஸ்வரி கௌரவ விருந்தினராக திருச்சி மாவட்ட சிறப்பு நீதிபதி சி.கார்த்திகா ஆகியோர் பங்கேற்றனர்.

முனைவர் சாத்தம்மைப் பிரியா வாழ்த்துரை வழங்கினார். சங்கத்தமிழ் அமைச்சர் தமிழவேள் பெ.உதயகுமார், தமிழ்ச் செம்மல் நாவை சிவம் , திரு.வீ. கோவிந்தசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மா.ஹன்சிகா நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

# தமிழ்ச்சங்கத்தில் பாவேந்தர் விழா



**திருச்சி, மே 03:** திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத்தில் பாவேந்தர் விழா நேற்று முன்தினம் (01.05.26) நடைபெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய 3 வது சொற்பொழிவான இதில் "புரட்சிக்கவிஞர் பாவேந்தர் வாழ்வில் திருச்சிராப்பள்ளி" என்ற தலைப்பில் மாநில அரசின்" பாவேந்தர் விருது" பெற்ற செந்தலை ந.கவுதமன் சிறப்புரையாற்றினார்.

70வது ஆண்டில் இருக்கும் தமிழ்ச்சங்கம் 1956 ல் தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்களுக்கு " முத்தமிழ் காவலர் " பட்டம் வழங்கப்பட்டதையும் 3ம் ஆண்டில் அப்போது தேவர் மேடையாகஇருந்தஇந்தஇடத்தில் பாவேந்தர் உரையாற்றியதையும் நினைவுகூர்ந்தார்.

பாவேந்தர் படைப்பு, கொள்கை, குடும்பம் புகழ் என 4 வகையில் இந்த திருச்சியில் வாழ்ந்தார் என்றார்.

அவரது படைப்புகள் மணவை திருமலைச்சாமியின் நகரத்தூதன் இதழில் வெளிவந்தது, அதில் இடம் பெற்ற 13 கவிதைகள் பின்னர் 1938ல் அவரின் முதல் தொகுப்பு நூலில் வெளியானது, முத்தமிழ்காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதத்தின் பாராட்டுக்கடிதம் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார்.

1914ம் ஆண்டு முதன்முதலாக பாரதியார், சுப்பு ஒரு "வியாஸம்" எழுதிக் கொடுங்கோ என பாவேந்தரிடம் கேட்டு, அதனை சுதேச மித்திரன் இதழில் வெளியிட்டது.

பாரதி இறந்த 3 ம் நாள் பிறந்த தன் மூத்த மகளுக்கு பாவேந்தர், சரஸ்வதி எனப் பெயரிட்டது.அண்ணாவின் ஓரிரவு நாடகத்தின் 25 வது நிகழ்வில் அவருக்கு அறிஞர் அண்ணா எனப் பட்டம் சூட்டியது.

தற்போதைய திருவள்ளுவர் படத்தை வேணுகோபால் சர்மா வரையவும், பாரதி படத்தை ஆர்யா வரையவும் பாவேந்தரே காரணம் என பல தகவல்களை திரு.கவுதமன் கூறினார்.

முதன்முதலாகஇயற்கையைப் பற்றி " அழகின் சிரிப்பு", குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என "குடும்ப விளக்கு" எப்படி இருக்கக் கூடாது என " இருண்ட வீடு" கடைசியாக அவர் எழுதி முடித்தது"பாண்டியன் பரிசு" அதை நடிகர் திலகம் சிவாஜியை வைத்து படமாக்க நினைத்தது பற்றியும் தெரிவித்தார்.

'முன்னதாக பாவேந்தரின் நூலைப் படி பாடலின் பாணியில் சங்க அமைச்சர் திரு.பெ.உதயகுமார் உங்களை யெல்லாம் வரவேற்ற படி வணங்கிய படி கவுதமன் உரையை கேட்கும்படி பின் உணவருந்திச் செல்லும்படி எனச் சொன்னபடி உரையாற்றியதோடு, இது மே (டே) தினம் ஆகவே இந்த மேடையில் அரங்கத்தை சிறப்பாக நிர்வகிக்கும் ஊழியர்களை சிறப்பு விருந்தினர் கௌரவிக்கும் படி கேட்டுக் கொண்டார் .

துணை அமைச்சர் முனைவர் செயலாபதி தந்தை பெரியார்தான் சிறப்புரை ஆற்றியவருக்கு கவுதமன் என பெயர் சூட்டியதாகச் சொன்னார்.

துணைத்தலைவர் வரதராஜன் தாம் பயின்ற அதே திருவையாறு கல்லூரியில் தமக்கு பின்னே விருந்தினர் பயின்றதையும் பாரதிதாசன் குடும்பத்தினருடன் இன்றளவும் தனக்கு உள்ள தொடர்பையும் எடுத்துரைத்தார்.

துணை அமைச்சர் திரு. சையத் ஜாகிர் ஹசன் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## 3-ஆவது பிரசவத்திற்கும் ஓராண்டு மகப்பேறு விடுப்பு! சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, மே 3:**

விழுப்புரம் மாவட்டம், திண்டி வனம் மோட்டார் வாகன விபத்து வழக்கு களுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் பணியாற்றும் சாய் நிஷா என்பவர், மூன்றாவது பிரசவத்திற்காக 2026 பிப்ரவரி முதல் 2027 பிப்ரவரி வரை ஓராண்டு மகப்பேறு விடுப்பு கோரி விண்ணப்பித்திருந்தார். ஆனால், மூன்றாவது பிரசவத்திற்கு 12 வாரங்கள் மட்டுமே விடுப்பு என்ற அரசாணையை முன்வைத்து அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், என். செந்தில்குமார் அடங்கிய அமர்வு, மூன்றாவது பிரச வமும் முதல் இரு பிரசவங்களைப் போலவே வலியும் வேதனையும் அடங்கி யதுதான் என்றும், இதில் பாகுபாடு காட்ட முடியாது என்றும் தெரிவித்தது. தற்போதைய அரசாணை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளுக்கு எதிரானது என்று கூறிய அமர்வு, மனுதாரருக்கு ஓராண்டு மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் என விழுப்புரம் மாவட்ட முதன் மை அமர்வு நீதிபதிக்கு உத்தரவிட்டது.

## மின்சார மானியம் ரூ.17 ஆயிரம் கோடி: ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு

**சென்னை, மே 3:**

நடப்பு நிதியாண்டில் மின் நுகர்வோருக்கான மானியக் கட்டணமாக ரூ.17,307 கோடியைத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கத் தமிழக அரசுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தர விட்டுள்ளது. இந்த மானியத் தொகையில் அதிக பட்சமாக, வீட்டு உபயோக நுகர்வோருக் கான முதல் 100 யூனிட் இலவச மின்சாரத்திற்காக ரூ.8,428.16 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்திற்கு ரூ.7,317 கோடியும், விசைத்தறிகளுக்கு ரூ.564.41 கோடியும், குடிசை வீடுகளுக்கு ரூ.370 கோடியும் மானியமாக வழங்கப்பட உள்ளது. மேலும், சிறு தொழில்களுக்கான மின் கட்டணக் குறைப்பிற்காக ரூ.394.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மானியத் தொகையை ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்கூட்டியே விடுவிக்க வேண்டும் என மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, முதல் காலாண்டிற்கான ரூ.4,326 கோடியை அரசு உடனடியாக வழங்க வேண்டும். மின்சார வாரியத்தின் அன்றாடச் செயல்பாடுகளில் எவ்வித சுணக்கமும் ஏற்படாதவாறு, தமிழக அரசு இந்த மானியத் தொகையைத் துரிதமாக வழங்கி வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மூதாட்டி கொலை வழக்கில் வாலிபர் கைது

**சென்னை, மே 3:**

கரூர் மாவட்டம், ராய னூரில் கடந்த ஏப்ரல் 26-ஆம் தேதி தாயாரம் மாள் (79) என்ற மூதாட்டியைக் கொலை செய்து நகைகளைக் கொள்ளையடித்த வழக்கில், தலைமறைவாக இருந்த பாண்டீஸ்வரன் (19) என்பவரைச் சென்னை சென்ட்ரல் ரயில் நிலை யத்தில் போலீஸார் கைது செய்தனர். தன்பாத் எக்ஸ்பிரஸ் ரயிலில் அவர் சென்னை வருவதாகக் கிடைத்த ரகசியத் தகவலின் பேரில், ரயில்வே போலீஸார் அவரை மடக்கிப் பிடித்தனர். ஏற்கனவே இருவர் கைதான நிலையில், பிடிபட்ட பாண்டீஸ்வரன் மேல் விசாரணைக்காகக் கரூர் போலீஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டார்.

## மெட்ரோவுடன் இணையும் பறக்கும் ரயில் திட்டம்

**சென்னை, மே 3:**

சென்னை கடற்கரை முதல் வேளச்சேரி வரை இயங்கும் பறக்கும் ரயில் திட்டத்தை, மெட்ரோ ரயில் நிர்வாகத்துடன் இணைப்பதற்கான பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்த வரைவு அறிக்கை, இறுதி ஒப்புதலுக்காக ரயில்வே வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த இணைப்பு நடைமுறைக்கு வரும் போது, பறக்கும் ரயில் நிலையங்கள் மெட்ரோ தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு மின்தூக்கிகள் மற்றும் நகரும் படிக்கட்டுகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், பயணிகள் ஒரே பயண அட்டையைப் (ஸ்மார்ட் கார்டு) பயன்படுத்தி மெட்ரோ மற்றும் பறக்கும் ரயில் இரண்டிலும் தடையின்றிப் பயணம் செய்யும் வசதி அறிமுகம் செய்யப்படும். வருவாய் பகிர்வு மற்றும் சொத்து மேலாண்மை குறித்த விவாதங்கள் முடி வடைந்ததும், ரயில்வே வாரியத்தின் பச்சைக்கொடி கிடைத்தவுடன் இந்த நிர்வாக மாற்றம் அதி காரப்பூர்வமாக நடை முறைக்கு வரும்.

## எகிறும் எரிபொருள் விலை: சரக்குப் போக்குவரத்து கடும் சரிவு - சிறு, குறு ஏற்றுமதியாளர்கள் பாதிப்பு

**கோவை, மே 3:**




ஈரான் - இஸ்ரேல் இடையே நிலவி வரும் போர்ப் பதற்றம் காரணமாக, விமான எரிபொருள் விலை கடுமை யாக உயர்ந்துள்ள நிலையில், கோவை சர்வதேச விமான நிலைய த்தில் சரக்கு கையாளுதல் கட்டண மும் அதிரடியாக 80 சதவிகிதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால் கோவையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் சரக்கு போக்குவரத்து பாதியாகக் குறைந்து, ஏற்றுமதித் தொழில் முடங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர்ச் சூழலைக் கார ணம் காட்டி, எண்ணெய் நிறுவனங் கள் எரிபொருள் விலையை உயர்த்தி யுள்ளன. இதன் விளைவாக, விமான நிறுவனங்கள் தங்களின் சரக்குக் கை யாளுதல் கட்டணத்தையும் வரலாறு காணாத வகையில் உயர்த்தியுள்ளன.

இதனால் கோவையிலிருந்து ஷார்ஜாவிற்கு இயக்கப்படும் சரக்கு விமான சேவைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

கோவை மற்றும் அதன் சுற்று வட்டார மாவட்டங்களிலிருந்து ஷார்ஜா உள்ளிட்ட வளைகுடா நாடு களுக்கு வாரந்தோறும் டன் கணக்கில் சரக்குகள் அனுப்பப்பட்டு வந்தன.

தற்போது கட்டண உயர்வு காரண மாக சரக்கு முன்பதிவுகள் மிகக் கடு மையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன.


குறிப்பாக இயந்திர உதிரிபாகங் கள், ஜவுளிப் பொருட்கள் போன்ற அழுகாத பொருட்களின் ஏற்றுமதி முற்றிலும் சரிந்துள்ளது. ஏற்கெனவே ஆர்டர் பெற்ற சிறு, குறு ஏற்றுமதி யாளர்கள், இந்த கூடுதல் கட்ட ணத்தைச் செலுத்த முடியாமல் நஷ்டத்தைச் சந்தித்து வருகின்றனர்.

கோவை - ஷார்ஜா இடையிலான மாதாந்திர சரக்கு போக்கு வரத்து செயல்பாடுகள் கடந்த சில வாரங்களாகவே மந்தமடைந்துள் ளன. வான்வழிப் பாதையில் நில வும் பதற்றம் மற்றும் கூடுதல் எரிபொ ருள் தேவை ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி விமான நிறுவனங்கள் கட்ட ணத்தைக் குறைப்பதற்கு மறுத்து வருகின்றன.

ஏகாதிபத்திய நாடுகளின் அதி காரப் போட்டியால் ஏற்படும் இந்த விலை உயர்வின் சுமையை, உழைக் கும் மக்கள் மீதும் சிறு தொழில்கள் மீதும் சுமத்துவதற்கு வேதனை தெரி வித்துள்ள கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில்கள் சங்கத்தி னர் (COSSIA) மற்றும் ஏற்றுமதி யாளர்கள், இப்பிரச்சனையில் ஒன்றிய அரசு தலையிட்டு கட்டண உயர்வைத் தடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

குறிப்பாக, ஒன்றிய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தலையிட்டு, இந்த கட்டண உயர்வை முறைப்படுத்த வேண்டும் என்பதே கோவை தொழில்முனைவோரின் கோரிக்கையாக உள்ளது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 தொகுதிகளிலும் எத்தனை சுற்று வாக்கு எண்ணிக்கை: ஆட்சியர் விளக்கம்



**தஞ்சாவூர், மே 3:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவை தொகுதிகளிலும் எத்தனை சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் விளக்கமளித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பதிவான வாக்குகள் அனைத்தும் மே 4 ஆம் தேதி மூன்று மையங்களில் எண்ணப்பட உள்ளன.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கவுள்ளது.

இதில் தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரியில் தஞ்சாவூர், திருவையாறு, ஒரத்தநாடு ஆகிய தொகுதிகளுக்கும், பட்டுக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பட்டுக்கோட்டை, பேராவூரணி தொகுதிகளுக்கும், கும்பகோணம் அரசு ஆடவர் கலைக் கல்லூரியில் பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

இதில் திருவிடைமருதூர் தொகுதியில் 14 பேர் போட்டியிட்ட நிலையில், 326 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 24 சுற்றுகளாகவும், கும்பகோணம் தொகுதியில் 13 பேர் போட்டியிட்ட நிலையில், 301 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 22 சுற்றுகளாகவும், பாபநாசம் தொகுதியில் 13 பேர் போட்டியிட்ட நிலையில் 315 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாகவும் எண்ணப்படவுள்ளது.

திருவையாறு தொகுதியில் 13 பேர் போட்டியிட்ட நிலையில், 340 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 25 சுற்றுகளாகவும், தஞ்சாவூர் தொகுதியில் 11 பேர் போட்டியிட்ட நிலையில், 311 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாகவும், ஒரத்தநாடு தொகுதியில் 9 பேர் போட்டியிட்ட நிலையில் 314 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாகவும் எண்ணப்படவுள்ளது.

பட்டுக்கோட்டை தொகுதியில் 11 பேர் போட்டியிட்ட நிலையில், 310 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாகவும், பேராவூரணி தொகுதியில் 10 பேர் போட்டியிட்ட நிலையில், 284 வாக்குச்சாவடி மையங்களில் பதிவான வாக்குகள் 21 சுற்றுகளாக எண்ணப்படவுள்ளது.

## சுங்கச்சாவடியில் தானாகவே கட்டணம் வசூலிக்கும் முறை.. குஜராத்தில் அறிமுகம்

**புதுடெல்லி, மே 3:**



தேசிய நெடுஞ்சாலைகளில் சுங்கச்சாவடிகள் மூலம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அந்த நெடுஞ்சாலைகளை கட்டுவதற்கும், பராமரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் ஆகும் செலவுகளை ஈடுகட்ட இக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில், ரொக்கமாக கட்டணம் வசூலிக்கப்பட்டது. பின்னர், மின்னணு பரிமாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு, கார் கண்ணாடியில் ஒட்டப்படும் 'பாஸ்டேக்' வில்லைகள் மூலம் கணக்கில் இருந்து பணம் வசூலிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் அடுத்தகட்டமாக, இந்தியாவிலேயே முதல் முறையாக தானாகவே கட்டணம் வசூலிக்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம் தேசிய நெடுஞ்சாலை-48 ல் சூரத்-பருச் பிரிவில் உள்ள சோராராயாசி சுங்கச்சாவடியில் இந்த தடையற்ற சுங்க கட்டண முறை அறிமுகம் செய்யப்பட்டதாக மத்திய சாலை போக்குவரத்து மந்திரி நிதின் கட் காரி அறிவித்துள்ளார்.

இதன்படி சுங்கச்சாவடிகளில் இனி வாகனங்களை நிறுத்த வேண்டியது இல்லை. கேமராக்கள், சென்சார்கள் ஆகியவை மூலம், வாகன எண்பலகை மற்றும் 'பாஸ் டேக்' வில்லையை அடையாளம் கண்டு கட்டணம் வசூலிக்கப்படும்.

இதுகுறித்து நிதின் கட்காரி தனது 'எக்ஸ்' பக்கத்தில், "நெடுஞ்சாலை சுங்க கட்டண முறையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்திய சுங்கச்சாவடிகளை டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தேசிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பை நவீனப்படுத்துதல் ஆகியவற்றை உலகத்தரத்துக்கு ஏற்ப மாற்றியதில் இது மிகப்பெரிய மைல்கல்.

இதன்மூலம் பயண நேரம் குறையும். நெரிசல் குறையும். எரிபொருள் பயன்பாடு, வாகனமாசு ஆகியவை குறையும். கட்டண வசூலில் மனித தலையீடு குறையும்" என்று பதிவிட்டிருந்தார்.

மூலப்பொருட்களின் விலை உயர்வால் புதிய ஆர்டர்கள் எடுக்க தயக்கமாக உள்ளது. இதன்காரணமாக கடந்த 1 மாதமாக உள்நாட்டு ஆடை உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளது. அதுபோல் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு 25 சதவீதம் ஆர்டர்கள் வருகை குறைந்துள்ளது.' என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## திருவள்ளுவர் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை

**வேலூர், மே 3:**

காட்பாடி திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் 2026-2027 ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலை, முதுநிலை மற்றும் பட்டயப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடங்கியுள்ளது. கலை, வணிகம் மற்றும் அறிவியல் சார்ந்த பல்வேறு முதுநிலைப் படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு அடிப்படையிலும், 5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்புகள், 3 ஆண்டு இளநிலை பி.எஸ்.சி. மற்றும் ஓராண்டு பட்டயப் படிப்புகளுக்கு நேரடி முறையிலும் சேர்க்கை நடைபெறவுள்ளது. இப்பயிற்சிகளில் சேர விருப்பமுள்ள தகுதி யுள்ள மாணவர்கள் WWW. TVU.EDU.IN என்ற பல்கலைக் கழக அதிகாரப்பூர்வ இணையதளம் வாயி லாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் எனப் பதிவாளர் செந்தில் வேல்முருகன் தெரி வித்துள்ளார். கூடுதல் விவரங்களை இணைய தளத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

## மெட்ரோவில் இன்று முதல் 'சிங்கார சென்னை அட்டை' மட்டுமே செல்லும்!

**சென்னை, மே 3:**

ஒன்றிய அரசின் 'ஒரே நாடு ஒரே அட்டை' திட்டத்தின் கீழ், சென்னை மெட்ரோ ரயில்களில் மே 1 முதல் பழைய பயண அட்டைகள் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இனி 'சிங்கார சென்னை அட்டை' (தேசிய பொதுப் போக்குவரத்து அட்டை) வைத்திருப்பவர்கள் மட்டுமே மெட்ரோவில் பயணிக்க முடியும். இந்த புதிய அட்டையை அனைத்து மெட்ரோ நிலையங்களிலும் உள்ள கவுண்ட்டர்களில் பெற்றுக்கொள்ள லாம்.

அட்டைக்குத் தனிக் கட்டணம் கிடையாது என்றாலும், 100 ரூபாய் ரீசார்ஜ் செய்து ஆக்டிவேட் செய்ய வேண்டும். பழைய கார்டு வைத்துள்ள வர்கள், அதிலுள்ள மீதத் தொகையை புதிய அட்டைக்கு மாற்றிக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு அட்டையை வைத்தே இந்தியா முழுவதும் உள்ள மெட்ரோக்கள் மற்றும் மாநகரப் பேருந்துகளில் பயணிக்க லாம் என்பதுடன், வழக்கமான 20 சதவீதக் கட்டணத் தள்ளுபடியும் தொடரும் என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு

**சென்னை, மே 3:**

சென்னையில் சாலை மற்றும் நடைபாதைகளில் விதிமீறி நிறுத்தப்படும் வாகனங்களை அப்புறப் படுத்தக் கூடுதல் 'டோவிங்' வாகனங்களைப் பயன்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழு மம் மற்றும் காவல் துறை இணைந்து காலக் கெடுவுக்குள் ஆக்கிர மிப்புகளை அகற்ற வேண்டும் என நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம் மற்றும் கே. சுரேந்தர் அமர்வு அறிவுறுத்தியுள்ளது. தொடர்ச்சியாக ஆக்கிர மிப்பில் ஈடுபடுவோர் மீது கிரிமினல் வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு அந்தந்தப் பகுதி அதிகாரிகளே பொறுப் பேற்க வேண்டும் என்றும் நீதிபதிகள் எச்சரி த்துள்ளனர்.

## கடும் வறட்சியால் 10 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் கருகின நிவாரணம் வழங்க கோரிக்கை

**திருவண்ணாமலை, மே 3:**

திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சா புரம் ஒன்றியத்தில் நிலவும் கடும் நீர் பற்றாக்குறையால், அறுவடைக்குத் தயாராக இருந்த சுமார் 10,000 ஏக்கர் நெற்பயிர்கள் கருகிச் சேதமடைந்துள்ளன. வெளுங்கனந்தல், சொரகொளத்தூர், பாலானந்தல், கார்குணம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் நவரை சாகுபடியாக குண்டு நெல் மற்றும் ஏடிடி-31 போன்ற ரகங்களைப் பயிரிட்டி ருந்தனர்.

கடந்த மூன்று மாதங்களாக ஏக்க ருக்குச் சுமார் 35,000 ரூபாய் வரை செலவு செய்து பராமரித்து வந்த நிலையில், தற்போது நிலவும் கடும் வறட்சியால் நீர் பாசனமின்றி நெற்பயிர்கள் முற்றிலுமாக காய்ந்துவிட்டன.

பாதுகாத்து வளர்த்த பயிர்கள் கண் முன்னே கருகியதால், வேதனையடைந்த விவசாயிகள் வேறு வழியின்றி நிலத்தில் மாடுகளை விட்டு மேய்க்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உழைப்பும் முதலீடும் வீணாகியுள்ள சூழலில், தமிழக அரசு பாதிக்கப்பட்ட விளை நிலங்களை நேரில் கள ஆய்வு செய்து, பயிர் காப்பீடு மற்றும் உரிய வறட்சி நிவாரணத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று அப்பகுதி விவசாயி கள் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயில் சித்திரை பெருவிழா திருத்தேரோட்டம் கோலாகலம்

**கும்பகோணம், மே 3:**

கும்பகோணம் வட்டம் சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயிலில் சித்திரை பெருவிழாவையொட்டி திருத்தேரோட்டம் நடைபெற்றது. இந்த கோயிலில் இந்தப் பெருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். நிகழாண்டு இந்த விழா கடந்த ஏப்.24-ம் தேதி முதல் மே 4-ம் தேதி வரை நடைபெறுகிறது. பிரதான விழாவான கொடியேற்றம் கடந்த ஏப்.24-ம் தேதி நடைபெற்றது. தொடர்ந்து விநாயகர், வள்ளி- தேவசேனா உடனாய சுப்ரமணிய சுவாமி, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உற்சவர் மண்டபத்துக்கு எழுந்தருளினர். ஏப்.25-ம் தேதி முதல் மே 1-ம் தேதி வரை சுவாமிகள் பல்வேறு வாகனங்கள் வீதியுலா புறப்பாடு நடைபெற்றது. பிரதான விழாவான நேற்று (மே 2-ம் தேதி) திருத்தேரோட்டம் நடைபெற்றது. முன்னதாக காலை 7:00 மணி அளவில் சுவாமிகள் படிச்சட்டத்தில் விசாக நட்சத்திரத்தில் திருத்தேரில் எழுந்தருளினர். தொடர்ந்து காலை 8.30 மணிக்கு திருத்தேரோட்டம் நடைபெற்றது.

தேரில் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வடம்பிடித்து இழுத்துச் சென்றனர். இதில் தக்கார் சுவாமிநாதன், அறநிலையத்துறை துணை ஆணையர் உமாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மே 3-ம் தேதி சபாபதி பாகுலேய சுப்பிரமணியர் (நடராஜர் பெருமான்) சிவகாமி அம்பாள், மாணிக்கவாசகர் தேர்தல் பார்த்தல் திருவீதி வைபவம் ஊடல், மே 4- ம் தேதி சுவாமி யதாஸ்தானம் செல்லுதல் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.


## சித்திரை முழுநிலவு விழா: பச்சை பட்டில் காட்சியளித்த மங்கலதேவி கண்ணகி

**குமுளி, மே 3:**

தேனி மாவட்டத்தின் தமிழக எல்லையான விண்ணேற்றிப்பாறை எனும் இடத்தில் மங்கல தேவி கண்ணகி கோயில் அமைந்துள்ளது. மதுரையை எரித்துவிட்டு வைகை ஆற்றங்கரை வழியே தலைவிரி கோலமாக வந்த கண்ணகிக்கு, கோவலன் மங்கல நாண் பூட்டி இங்கிருந்து விண்ணுக்கு அழைத்துச் சென்றதாக ஒரு நம்பிக்கை. இதனால், கணவனை இழந்தாலும் மங்கலதேவி கண்ணகி என்ற பெயரிலேயே இத்திருத்தலம் அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு தமிழகத்தின் கூடலூர் அருகே உள்ள பளியன்குடி வழியாக 6.6 கி.மீ. தூரம் நடைபாதை வழியாகவும், கேரளாவின் குமுளி, கொக்கரகண்டம் பகுதியில் 14 கி.மீ. ஜீப் பாதை வழியாகவும் செல்லலாம். கோயில் அமைந்துள்ள இடம் வனப்பகுதி என்பதால் சித்திரை மாத முழுநிலவன்று ஒரு நாள் மட்டும் வழிபாட்டுக்காக பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதன்படி, கோலாகலமாக நேற்று விழா நடைபெற்றது. கையில் சிலம்பு, வளையல், மங்கலநாணுடன் கண்ணகி காட்சியளித்தார். பச்சைப் பட்டுடன் அருள்பாலித்த மங்கலதேவியை பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

## திருப்பதியில் 3 மாதங்களுக்கு விஐபி தரிசனம் ரத்து!

**திருமலை, மே 3:**



திருமலை திருப்பதியில் மூன்று மாதங்களுக்கு வி ஐபி தரிசனம் ரத்து செய்யப்படுவதாகக் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கோடைக்காலம் துவங்கியுள்ளதாலும், பள்ளிகளுக்கு விடுமுறை என்பதாலும் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்குப் படையெடுத்து வருகின்றனர்.

வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 31 அறைகளும் நிறைந்து வெளியே பாட்ட கங்கம்மா கோயில் அருகில் உள்ள தரிசன வரிசையில் பக்தாகள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனா. தாம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவாகள்) 24 மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் வழங்குவதை வெள்ளிக்கிழமை முதல் கோடை விடுமுறை முடியும் வரை தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தாகளும், அவாகளின் பெற்றோாகளும், இரவு 10 மணி வரை அனைத்து பக்தாகளும் அனுமதிக்கப்படுகின்றனா. எனினும் அலிபிரி வழியில் திவ்ய தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது.

இனி தரிசன டிக்கெட்டுகள் இல்லாமல் ஏழுமலையான் தரிசனத்துக்காக திருமலைக்கு வரும் பக்தாகள் காத்திருப்பு அறைகளில் காத்திருந்து மட்டுமே தரிசனத்துக்குச் செல்ல முடியும். எனவே பக்தாகள் தங்கள் பயணத்தை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

இதனால், கோடைக்காலம் முடியும் வரை, மூன்று மாதங்களுக்கு விஐபி தரிசனம் ரத்து செய்யப்படுவதாகவும், அதோடு திருப்பதியில் சர்வ தரிசன டோக்கன் வழங்குவதையும் ரத்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கோடைக்காலம் முடியும் வரை இந்த தரிசனங்கள் ரத்து செய்யப்படுவதாகக் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமியையொட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம்

**திருவண்ணாமலை, மே 3:**



திருவண்ணாமலை: சித்ரா பவுர்ணமியையொட்டி திருவண்ணாலையில் 2-வது நாளாக லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.

சித்ரா பவுர்ணமியையொட்டி பக்தர்கள் கிரிவலம் செல்ல ஏப் .30-ம் தேதி இரவு 9.52 மணி முதல் மே 1-ம் தேதி இரவு 11.08 மணி வரை உகந்த நேரம் என கோயில் நிர்வாகம் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, சித்ரா பவுர்ணமி நேற்று முன்தினம் இரவு தொடங்கியதை அடுத்து நேற்று அதிகாலை கோயில் திறக்கப்பட்டு மூலவர் மற்றும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், மகா தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து, அம்மன் சன்னதி எதிரே உள்ள சித்திர குப்தன் சன்னதியில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர், சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த அண்ணாமலையார் மற்றும் உண்ணாமுலை அம்மன் மற்றும் சித்திர குப்தரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர். பவுர்ணமியையொட்டி சுமார் 3 மணி நேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

கோயிலில் பக்தர்களுக்கு தர்பூசணி, வெள்ளரி, தண்ணீர் பாட்டில், நீர்மோர் உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டன. தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். தொடர்ந்து, 2-வது நாளாக நேற்றும் கிரிவலம் வந்தனர். கடந்த 2 நாட்களாக 20 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் வந்துள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் சித்திரை பிரம்மோற்சவ விழா கோலாகல தொடக்கம்

**சென்னை, மே 3:**

: திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயில் பிரம்மோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. மே 3-ம் தேதி (நாளை) கருட சேவை, மே 7-ம் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது.

சென்னையின் ஆன்மிக அடையாளமாகவும், 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயில் திகழ்கிறது.

இத்தலத்தில் வீற்றிருக்கும் மூலவர் பார்த்தசாரதி பெருமாளுக்கு சித்திரை மாதத்திலும், மேற்கு நோக்கி அருள்பாலிக்கும் நரசிம்ம பெருமாளுக்கு ஆனி மாதத்திலும் ஆண்டுதோறும் பிரம்மோற்சவ விழாக்கள் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான பார்த்தசாரதி பெருமாள் சித்திரை பிரம்மோற்சவ விழா, நேற்று அதிகாலை கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது. விழாவின் முதல் நாளன்று திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

இரவு 7.45 மணி அளவில், பார்த்தசாரதி பெருமாள் புன்னை மர வாகனத்தில் மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான கருட சேவை நாளை (மே 3) அதிகாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

அன்று மதியம் 12 மணிக்கு ஏகாந்த சேவை நடைபெறும். மே 4-ம் தேதி காலை சூரிய பிரபை, இரவு சந்திர பிரபையில் பெருமாள் எழுந்தருளி வீதிஉலா நடைபெறவுள்ளது.

விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வான தேரோட்டம் மே 7-ம் தேதி நடைபெறுகிறது. அன்று அதிகாலை 4.30 மணிக்கு பெருமாள் திருத்தேரில் எழுந்தருள, காலை 7 மணிக்கு தேரோட்டம் தொடங்கும்.






## நலம் தரும் மருத்துவம்

## பனையின் நன்மைகளும், நுங்கின் மருத்துவ குணங்களும்

கோடை காலங்களில் நுங்கு சாப்பிடுவதால் எண்ணற்ற நன்மைகள் கிடைக்கும். நுங்கு மிகவும் சுவையாக இருப்பது மட்டுமின்றி, எண்ணற்ற மருத்துவ குணங்கள் கொண்டவை.

நுங்கு சாப்பிடுவதால் நம் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து பார்க்கலாம், சாதாரணமாக நுங்கு சாப்பிடுவதே சுவாரசியமான ஒன்று. அதுவும் கிராமங்களில், பனை மரத்தடியில் அமர்ந்து புதிய நுங்கை சுவைப்பது அனைவருக்கும் விருப்பமான ஒன்று. அந்த மகிழ்ச்சியை கிராமத்தில் அனுபவித்தவர்களுக்கே புரியும். தண்ணீரை அடிக்கடி குடிப்பது பலருக்கு சலிப்பை ஏற்படுத்தும். நுங்கு சாப்பிட சுவையாகவும் இருக்கும், சிற்றுண்டி போலவும் சாப்பிடலாம். அப்படிப்பட்ட நுங்கை சாப்பிடுவது உடலுக்கு பல நன்மைகள் தரக்கூடியது.

கோடை காலங்களில் உடலில் உள்ள நீரின் அளவு விரைவாக குறைந்து, நாம் சோர்வடைந்து விடுவோம். நுங்கில் உடலுக்குத் தேவையான நீர்ச்சத்து அதிகம் உள்ளது. உடலின் கனிமச்சத்து மற்றும் சர்க்கரையின் அளவை சீராக வைத்து, சுறுசுறுப்புடன் செயல்படுவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். அதுமட்டுமின்றி, இதில் வைட்டமின் பி, இரும்புச்சத்து, கால்சியம், ஜிங்க், பொட்டாசியம் போன்ற பல்வேறு சத்துக்களும் உள்ளது.

அதிலும் கோடையில் அதிகப்படியான வெப்பத்தினால் சின்னம்மை வரும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அப்போது நுங்கு சாப்பிட்டால், சின்னம்மையினால் ஏற்படும் அரிப்புக்களை தடுத்து, உடலை குளிர்ச்சியுடன் வைத்துக் கொள்ளலாம். சின்னம்மை வராமல் தடுக்க வேண்டுமானாலும் சரி, வந்த சின்னம்மையை விரைவில் குணப்படுத்தவும் சரி, நுங்கு பெரிதும் உதவியாக இருக்கும். சிலருக்கு வெயிலில் செல்லும் போது அடிக்கடி மயக்கம் ஏற்படும். அத்தகையவர்கள் நுங்கு அதிகம் சாப்பிட்டால், உடலின் நீர்ச்சத்து அதிகரித்து, மயக்கம் ஏற்படுவது குறையும். கர்ப்பிணிகள் நுங்கு சாப்பிட்டால், செரிமானம் அதிகரிப்பதுடன், மலச்சிக்கல் மற்றும் வாயு தொல்லை போன்ற பிரச்னைகளில் இருந்து விடுபடலாம். நுங்குவில் உள்ள சரியான கனிமச்சத்துக்களும், ஊட்டச்சத்துக்களும், உடலின் குளுக்கோஸ் அளவை சீராக வைத்து, உடலை சுறுசுறுப்புடன் வைத்துக் கொள்ள உதவும்.

வறட்சியான இடங்களிலும் வளரக்கூடிய, இவ்வளவு மருத்துவகுணங்கள் நிறைந்த பனை மரங்கள் தமிழகத்தில் குறைந்து வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. முன்பெல்லாம் பேருந்தில் செல்லும் போது தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் பனை மரங்களை பார்க்க முடியும். ஆனால் தற்போது பார்க்க முடியவில்லை என்பதிலிருந்தே பனை மரங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு விட்டதை தெரிந்துகொள்ள முடிகிறது. பனை மரங்கள் மண் அரிப்பை தடுக்கும் என்பது கூடுதல் தகவல்.

## நிலா(சந்திரன்) மறைந்துவிட்டால் பூமி என்னாகும்? என்ன ஆபத்துகள் வரும்?

பூமியின் துணைக்கோள் தான் நிலா என்று அழைக்கப்படும் சந்திரன். சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று இரவு நேரத்தில் சந்திரன் பூமிக்கு வெளிச்சத்தை தருகிறது. பூமிக்கு பல்வேறு வகைகளில் பாதுகாப்பையும் பல நன்மைகளையும் சந்திரன் வழங்கி வருகிறது. பொதுவாக நாம் அதை அறியாவிட்டாலும் , சந்திரன் தான் பூமியை பாதுகாக்கும் ஒரு கவசமாக செயல்படுகிறது.

2010 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து நிலவின் அழிவைப் பற்றி பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நிலா சிறிது சிறிதாக சுருங்கி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஒரு கட்டத்தில் சுருங்குவதன் விளைவாக அது மெல்ல மெல்ல அழிவுப் பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆனால் நிலா இப்பொழுது முழுமையாக மறைந்து விடப் போவது இல்லை.

நிலா அழிந்தால் பூமி என்ன ஆபத்துகளை சந்திக்கும்?

அண்டவெளியில் பல விண்கற்கள் வேகமாக பூமியை மோத வரும்போது, பலமுறை நிலா தன் மேல் அந்த மோதலை தாங்கியுள்ளது. இது எதேச்சையாக நடைபெறும் சம்பவம் என்றாலும் , இதுவும் பூமிக்கு ஒரு பாதுகாப்பு கவசமாக இருக்கிறது. பலமுறை விண்கற்கள் மோதியதால் தான் நிலவின் மேல் பகுதியில் ஏராளமான மேடு பள்ளங்களை கொண்டுள்ளது.

ஒருவேளை சந்திரன் மட்டும் இல்லாவிட்டால் அந்த விண்கற்கள் நேரடியாக பூமியை தாக்கக்கூடும். அதன் பேரழிவு நிச்சயமாக பல அணுகுண்டுகளின் வெடிப்புகளை விட பல ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கும். நிலவின் ஈர்ப்பு விசை காரணமாக கடலில் அலைகள் தோன்றுகின்றன. தொடர்ச்சியான கடல் அலைகள் கடல் வாழ் உயிரினங்களுக்கு தேவையான



ஆக்ஸிஜனையும் அவற்றின் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதில் பங்கு வகிக்கின்றது.

நிலவின் ஈர்ப்பு விசையால் பூமி தனது அச்சில் சுமார் 23.5 டிகிரி சாய்ந்து சுழல்கிறது. இந்த பாகையில் சுற்றுவதால் தான் பூமி நிலையாக உள்ளது. நிலவின் ஈர்ப்பு விசை இல்லாவிட்டால் பூமியின் சுழற்சியில் மாற்றம் ஏற்பட்டு, எந்த உயிரினங்களும் வாழ முடியாத அளவிற்கு மோசமான சுழற்சியை கொண்டிருக்கும். பூமியின் வேகமும் அதிகரித்து ஒரு நாள் என்பது 6 மணி நேரமாக சுருங்கி விடும்.

கால நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு அடிக்கடி மிகப்பெரிய சூறாவளிகள் ஏற்பட்டு பூமி பேரழிவை சந்திக்கும். மேலும் பல உயிரினங்களின் வாழ்வியல் முறைகளுக்கும், தாவரங்களையும் இனச்சேர்க்கைக்கும் சந்திரனின் ஒளி இன்றியமையாததாக உள்ளது. நிலா மறைந்து போவது பூமி அழிவதற்கான தொடக்கமாக இருக்கும்.

900 ஆண்டுகளுக்கு முன்னர் சந்திரன் மறைந்தது போன்ற ஒரு நிகழ்வு நடைபெற்றது. லைவ் சயின்ஸ் பத்திரிகையில் வெளியான தகவலின்படி, 1110 ஆம் ஆண்டில் பீட்டர்பரோ குரோனிக்கிள் என்ற கையெழுத்து பிரதியில் "மே மாதத்தின் 5 நாள் இரவில் சந்திரன் பிரகாசமாக இருந்தது . அதன் பின்னர் அதன் பிரகாசம் வெகுவாக குறைந்து போனது. நாடு முழுக்க கனமழை ஏற்பட்டு பயிர்கள் அழிந்துபோனது அதனால் பஞ்சம் ஏற்பட்டு பல அழிவுகள் நடந்தேறின.

அந்த காலகட்டத்தில் சந்திரன் மறைந்தே இருந்தது" என்று குறிப்பிட்டு இருந்தார். பின் வரும் காலங்களில் இதை ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள், எரிமலை, வெடிப்பினால் வளிமண்டலத்தின் மேல் உருவான கந்தகம் தூசி நிறைந்த ஒரு அடுக்கு சில நாட்கள் சந்திரனை மறைத்திருந்தன என்பதை கண்டுபிடித்தனர்.

சந்திரன் சிறிது சிறிதாக அதன் உள்ளே குளிர்ச்சி அடைவதால், அதன் மேற்பரப்பில் நிலத்தட்டு அமைப்புகள் நிலையில்லாமல் இருக்கின்றன. எதிர்காலத்தில் இவை மலைகள் போன்ற உயர்வாகவும் பள்ளங்களும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இது அதிகரிக்கும்போது மேலும் அழுத்தங்கள் அதிகரித்து நிலவு சுருங்கத்தொடங்கும். ஏற்கனவே நிலவு சுருங்கிக் கொண்டிருக்கும் செயல்பாட்டில்தான் உள்ளது. அதன் நீட்சியாக அது அழிந்து போகவும் வாய்ப்புள்ளது. ஆனால் , அது நடக்க இன்னும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகலாம்.

# "என் பலம்... நான் அறிவேன்"

அந்தப் பள்ளியில் மாவட்ட அளவிலான இண்டர்-ஸ்கூல் போட்டிக்கான தேர்வு நடந்தது.

ரன்னிங் ரேஸ், லாங் ஜம்ப், தடை தாண்டும் ஓட்டம்... போன்றவற்றில் எல்லா மாணவர்களும் கூட்டமாக பெயர் பதிவு செய்தார்கள்.
ஆனால், ஒரே ஒரு பெயர் மட்டும் வேறுபட்டது.
முருகன் : குண்டு எறிதல்.

உடற்கல்வி ஆசிரியர் கிருஷ்ணன்,
'டேய் முருகா... நீ ஒல்லியா இருக்கே!.. உன்னால அந்தக் குண்டையே தூக்க முடியாது. வேற எதாவது போடு."
முருகன் அமைதியாக சொன்னான்.
"சார்... நான் இதுக்குத்தான் வர்றேன்."

"அடேய்! பெரிய ஸ்கூலிலிருந்து வர்றவங்க எல்லாம் ஏற்கனவே பரிசு வாங்கினவங்க.... அனுபவம் இருக்கு. நீ போய் அவமானம் வாங்கிக்காதே."
அப்போதும் முருகன், "சார்... ஒரு சான்ஸ் குடுங்க சார்."
அடுத்த நாளிலிருந்து... மாலை வேளையில் மைதானத்தில் கடும் பறிசியில் ஈடுபட்டான் முருகன்.
முதலில் குண்டைத் தூக்க முடியாமல் இருந்தவன், அதைத் தள்ளிக் கொண்டும், இழுத்துக் கொண்டும் நடந்து, ஓடி, பயிற்சி செய்தான்.
மற்றவர்களெல்லாம் இவனைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருந்தனர்..

ஆசிரியர் கிருஷ்ணன் தூரத்திலிருந்து கவனித்தார். முருகனிடம் முன்னேற்றம் வந்திருப்பதைக் கண்டு வியந்தார்.
போட்டி நாள் வந்தது.
பிற பள்ளிகளிலிருந்து வந்திருந்த மூத்த மாணவர்கள், கட்டுமஸ்தான உடம்புடன் நிற்க, அவர்களுடன் நம்பிக்கையுடன் நின்றிருந்தான் முருகன்.
முதல் முயற்சி... சாதாரணம்.
இரண்டாவது முயற்சி... கூட்டம் கவனிக்க ஆரம்பித்தது.
மூன்றாவது முயற்சி... முருகன் கண்களை மூடி, ஒரு ஆழ்ந்த மூச்சு விட்டான்.
"எல்லோரும் போகிற பாதை இல்லை... இது என் பாதை" என்று உள்ளத்தில் சொல்லியபடி குண்டை எறிந்தான்.
அது...அனைவரையும் தாண்டி... முன்னே சென்று விழுந்தது.
கைதட்டல், ஆரவாரம்.
முடிவில், முருகன் — முதல் பரிசு.
அதே ஆசிரியர் கிருஷ்ணன் அவன் தோளில் கை வைத்தார். "டேய்... உன்னை நான் தவறாக மதிப்பிட்டுட்டேன்."
"பரவாயில்லை சார்... நான் எனக்கான சரியான பாதையைத் தேர்ந்தெடுத்துட்டேன்." என்றான்.

"கரெக்ட்... எல்லோரும் ஓடுகிற பாதையில் நாமும் ஓட வேண்டிய அவசியமில்லை. நமக்கான பாதையை நாமதான் உருவாக்கிக் கொண்டு ஓடணும் !"



முகில் தினகரன்
கோயமுத்தூர்




# பணி நிறைவு

மாலை மணி 5..... அந்த அலுவலகமே பரபரப்பாகக் காட்சி தந்தது. எல்லோரும் பேசிக் கொண்டிருந்தாலும் ஏதோ ஒரு மௌனம் தெரிந்தது.

பல வருடங்களாக அங்கு பணியாற்றிய நந்தினி என்று பணி ஓய்வு பெறப் போகிறாள்.

ஏப்பா.... கிப்ட் எங்க வச்சிருக்கீங்க? என்று கேட்ட நித்யாவிடம் அங்க பீரோல இருக்கு பாரு. கிப்ட் ரேப்பர் சுத்தி இருக்கு. அதை எடுத்து இப்பவே வெளியில் வெச்சிரு என்று பதில் சொன்னாள் கீதா.

கொஞ்சம் ஸ்வீட்டும் பூவும் வாங்கிட்டு வரேன் என்றவாறே வண்டியைக் கிளப்பினாள் ராஜி.

நந்தினியக் கொண்டு போய் விட அவங்க வீட்டுக்கு யாரெல்லாம் வரீங்க? சொன்னாத்தான் வண்டி ஏற்பாடு பண்ண முடியும் என்று லதா கணக்கெடுத்துக் கொண்டிருக்க ...
திரும்பி வர லேட் ஆயிருமே வர முடியுமான்னு யோசிக்கிறேன்....

வீடு தூரம் பா ரொம்ப நேரமாயிரும்...
என்று ஆளுக்கு ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வழியாக பதினைந்து பேர் போவதென முடிவானது.

பட்டியலில் கல்பனாவின் பெயரைப் பார்த்ததும் வானதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஏ... கல்பனா நீயும் போறியா?
திரும்பி வர லேட்டாகும். அவ்வளவு தூரத்திலிருந்து நீ மட்டும் எப்படித் தனியா வருவ? அதோட லேட்டாப் போனா உன் ஹஸ்பண்ட் திட்டுவாரே?
என்ற வானதியிடம்...

இல்ல வானதி நானும் வந்துடறேன்.... என்ற கல்பனாவை ஆச்சரியமாகப் பார்த்து...

என்னப்பா.. நந்தினி உன்னோட நல்லாக் கூட பேச மாட்டாங்க. அவங்களோட க்ளோசா இருக்கறவங்களே வர்றதுக்கு யோசிக்கிறாங்க. ஆபீஸோட செண்ட் அப் பண்ணிடலாம்னு பேசிக்கிறாங்க.
நீ ஏன் ரிஸ்க் எடுக்கற என்று வானதி கேட்க....

வானதி.... ஒரு இருபது வருஷம் இருபத்தைந்து வருஷம் வேலை பார்த்துட்டு இந்த ரிட்டயர்மெண்ட் நாள்ல எல்லாருக்குமே ஒரு எக்ஸைட்மெண்ட் இருக்கும். இத்தனை நாளும் அவங்க ஆபீஸ் போவோம் அப்படிங்கற தைரியத்திலேயே சந்தோஷமா இருந்திப்பாங்க. ஒண்ணு நல்லா யோசிச்சு பாரு வானதி. இன்னைக்கு நைட் அவங்க தூங்கும் போது அவங்களுக்குள்ள நாளைக்கு என்ன செய்யப் போறோம்னு ஒரு குழப்பம் இருக்கும்.

நாம நாளைக்கு நந்தினிய மறந்துவிட்டு நம்ம ஆபீஸ் வேலைல மூழ்கிருவோம். ஆனா ரிட்டயர்மெண்ட் ஆன நந்தினிக்கு ஒரு வெறுமை இருக்கும். சொல்லத் தெரியாத குழப்பம் இருக்கும். ஃபினான்சியிலா என்ன செய்யப் போறோன்னு ஒரு யோசனை இருக்கும்.

இந்த ரிட்டயர்மெண்ட் பார்ட்டி அப்படிங்கறது வெறும் சம்பிரதாயம் இல்லை. நாங்க எல்லாம் கூட இருக்கோம் அப்படின்னு சொல்ற ஒரு சகோதரத்துவம்.

நீ உடனே கேட்கலாம் நாம நாளைக்கு எல்லாத்துக்கும் அவங்களோட போய் நிற்க முடியுமா? நிக்கப் போறோமா அப்படின்னு..

கண்டிப்பா இல்ல தான்..... ஆனா இந்த நெகழ்ச்சியான நேரத்துல நாம இருக்கோம்னு போய் அவங்கள வீட்ல விடுற இந்தச் சின்ன சந்தோஷம் அவங்களுக்கு ஒரு பெரிய பலத்தைக் கொடுக்கும். நாளைக்கு விடியும் போது நமக்காக இத்தனை பேர் இருக்காங்க அப்படிங்கற நினைப்பே ஒரு பெரிய சந்தோஷம்.

எல்லா நாளும் தான் சீக்கிரம் போறோம். எப்படியும் ஹஸ்பண்ட் திட்டப் போறாரு. இருந்தாலும் நம்மளால முடிஞ்ச ஒரு சின்ன சந்தோஷத்தை அவங்களுக்குக் கொடுப்போமே. இன்னைக்கு ஒரு நாள் நாம கூட போறது அவங்களுக்கு அவ்வளவு சந்தோஷத்தையும் பலத்தையும் கொடுக்கும் என்ற கல்பனாவை அணைத்துக் கொண்டாள்.

நேரமாகுது..வாங்கப்பா என்ற குரல் கேட்க...
வாப்பா போலாம் என்றவாறே இருவரும் கிளம்பினர்.






-தமிழ்நிலா

# விக்கிரமாதித்தன் கதைகள் 7

.A.S.GOVINDA RAJAN

## ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்களின் கதை





ஒரு ஊரில் ஒரு குடும்பத்தைச் சார்ந்த நான்கு சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வெளியூர் சென்று நல்ல வித்தை கற்று அதன் மூலம் நல்ல சம்பாதிக்க வேண்டும். பிறகு ஓராண்டு கழித்து எல்லோரும் ஓரிடத்தில் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்து பிறகு பிரிந்து சென்றனர். ஒரு வருஷம் கடந்தது. அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஒன்று கூடினர். மூத்தவன் நான் ஒரு நூதன வித்தையை கற்றுள்ளேன். எந்த ஒரு பொருளையும் அதை ஒரு மனித வடிவத்திற்கு என்னால் மாற்ற முடியும் என்றான். இரண்டாமவன் இது ஆச்சர்யமாக இருக்கிறது. நான் கற்ற வித்தை அப்பேர்ப்பட்ட மனித உருவத்திற்கு உயிர் கொடுத்து அதை அசைக்க வைக்க முடியும். மூன்றாமவன் அதைவிட ஆச்சர்யமானது. அப்படி ஒரு மனிதப் பிறவியை என்னுடைய திறமையால் பேச வைக்க முடியும் என்றான். கடைசியாக நாலாமவன் நீங்கள் கற்றுக் கொண்ட வித்தைபோல் எனக்கு ஏதும் தெரியாது. நான் நிறைய பொருள் சம்பாதித்திருக்கிறேன். உங்கள் திறமையால் தோன்றும் ஒரு மனித பிறவிக்கு என்னால் போதிய வசதிகள் உணவு, உடை, வீடு கொடுத்துக் காப்பாற்ற முடியும் என்றான்.

இவ்வாறு அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும்போது மூத்தவன் அருகிலிருந்த ஒரு மரத்தின் கிளையை முறித்து, தன்னுடைய திறமையால் அதை ஒரு பெண் உருவத்திற்கு மாற்றி விட்டான். மற்ற வரும் இதைக்கண்டு அதிசயித்தனர். அப்போது இரண்டாமவன் அதன் மேல் மந்திரம் ஜபித்து ஜலம் தெளித்தான் அந்த பெண் உருவத்திற்கு உயிர் கொடுத்தான். அந்த அழகான பெண் உருவம் உயிர் பெற்றதனால் அசைய ஆரம்பித்தது. இதைக்கண்ட மூன்றாமவன் இப்போது என்னுடைய திறமையால் அவளைப் பேச வைக்கிறேன் என்று அவளுடைய காதில் ஒரு மந்திரத்தை ஓதினான். அவள் இனிய குரலில் பேசியதும் அந்த மூவரும் மிகவும் குதூகலமடைந்தனர். அப்போதே அந்த மூவரிடையே சண்டை தொடங்கிவிட்டது. அந்தப் பெண்ணை கைப்பிடிப்பது யார் என்பது பற்றி விவாதம். மூத்தவன் தான் மனித உருவம் கொடுத்ததால் அவள் தனக்கே உரியவள் என்று வாதிட்டான். இரண்டாமவன் தான் அவளுக்கு உயிர் கொடுத்தால் அவள் அவனுக்கே உரியவள் என்றான். மூன்றாமவன் அவளை பேச வைத்ததால் அவள் அவனுக்குத் தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடினான். கடைசியாக நாலாமவன் நீங்கள் கற்றுக் கொண்ட வித்தை போல் எனக்கு ஏதும் தெரியாது. நான் நிறைய பொருள் சம்பாதித்திருக்கிறேன் உங்கள் திறமையால் தோன்றும் மனித பிறவிக்கு என்னால் திருப்தியாக வசதிகளுடன் வாழ்வு கொடுக்க முடியும். ஆதலால் அவளை மணந்து வாழ்வதற்கு நான் தான் தகுதி வாய்ந்தவன் என்ற கூறினான். இவ்வாறு அந்த கதையை கூறிவிட்டு அந்த வேதாளம் மன்னன் விக்ரமாதித்யனிடம் இந்த நான்கு பேரில் அந்தப் பெண்ணை மணக்க யாருக்கு தகுதி உண்டு? சரியான விடையை சொல் என்றது. அதற்கு மன்னன், முதல் மூன்று பேர்களும் அவளுக்கு உருவம், உயிர், பேசும் திறன் கொடுத்ததால் அவர்கள் தந்தை போல் ஆகின்றனர். ஆதலால் அவர்கள் அவளை மணக்க தகுதியற்றவர்கள். நாலாவது சகோதரன் அவளுக்கு வாழ்வளிப்பதற்கு போதுமான செல்வம் இருப்பதால் அவன் தான் அவளை மணம் புரிய தகுதி உள்ளவன் என்றான். மறதியின் காரணமாக மன்னன் மௌனம் காக்கத் தவறி வேதாளத்திற்கு பதில் கூறியதால் அந்த வேதாளம் அவனிடமிருந்து விடுபட்டு மீண்டும் மரத்திலேறிவிட்டது.

விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தின் மீது ஏறிக்கொண்ட வேதாளத்தைப் பிடிக்கச் சென்று, பெரும் போராட்டத்திற்கு பிறகு வசமாகப் பிடித்துக் கொண்டான். தோளில் வேதாளத்தை சுமந்தபடி குகையை விட்டு நடக்கத் தொடங்கினான். அவனது பராக்கிரமத்தை பார்த்து வியந்தாலும் வேதாளம் தான் தப்பித்து கொள்வதற்கு வழி தேடிய வண்ணமே இருந்தது. அதனால் வேதாளம் மீண்டும் ஒரு கதையை விக்கிரமாதித்தனுக்குச் சொல்லத்துவங்கியது.

தொடரும்...

# இந்தியாவில் Cycle License வரலாறு

**Licence Raj காலத்து 'மிதிவண்டி அனுமதி'**

**70 வருஷத்துக்கு முன்னாடி cycle ஓட்டணும்னா license வேணும், ₹2 tax கட்டணும், police check பண்ணுவாங்கனு சொன்னா இன்னைக்கு யாரும் நம்ப மாட்டாங்க. ஆனா அதுதான் உண்மை. அதோட முழு கதை இதோ:**

---

## 1. ஆரம்பம்: ஏன் Cycle-க்கு License? 1880s - 1947

**British காலம்:** Cycle இந்தியாவுக்கு 1890-களில் வந்தது. முதலில் Christian missionary-களும், British அதிகாரிகளும் மட்டும் ஓட்டினாங்க.

1900-க்கு பிறகு Indian elites, அரசு ஊழியர்கள் cycle use பண்ண ஆரம்பிச்சாங்க. Traffic அதிகமாக, நகரங்களில் Municipal Corporations ஒரு விஷயம் செஞ்சுது: Cycle Tax.

**காரணங்கள் 3:**

முதலாவது Revenue. நகராட்சிக்கு வருமானம். Bombay, Calcutta, Madras Corporation-கள் 1910-லிருந்தே cycle tax வசூலிச்சாங்க.

இரண்டாவது Theft Control. Frame number பதிவு பண்ணி திருட்டு cycle-ஐ trace பண்ண.

மூன்றாவது Traffic Control. அந்த காலத்துல car-ஐ விட cycle தான் அதிகம். Bombay-ல 1950-ல் 2 லட்சம் cycle இருந்தது.

## 2. Licence Raj: 1950-1970 — Cycle License உச்சம்

சுதந்திரம் வந்த பிறகு "Licence Raj" system வந்தது. எல்லாத்துக்கும் அரசு அனுமதி வேணும். தொழிற்சாலை தொடங்க, scooter வாங்க, ஏன் cycle ஓட்ட கூட.

Bombay City Cycle Licence 1956 எப்படி இருந்தது:

சட்டம் The Bombay Police Act, 1951.

வழங்கியது Bombay Municipal Corporation + Local Police Station.

Fee Rs. 2/- per year. 1956-ல் ₹2 என்பது இன்னைக்கு ~₹200 value.

Valid 1st April to 31st March. ஒவ்வொரு வருஷமும் renew பண்ணணும்.

Proof ரெண்டு இருக்கும். ஒண்ணு paper licence card. இன்னொன்னு tin plate with number. அதை cycle-ல முன்னாடி மாட்டணும்.

**Details:** Owner name, address, cycle make - Hercules, Raleigh, frame number எல்லாம் பதிவு ஆகும்.


**Penalty:** Licence இல்லாம மாட்டினா fine, police station கூட்டிட்டு போவாங்க.

"In the old days dominated by the Licence Raj, it was an offence to wheel down the roads on a bicycle without a valid permit... It came in the form of a small tin plate with a number inscribed and a hole punched in the middle"

வேறு கட்டாய விதிகள்:

Bell/மணி இல்லாட்டி fine.

Light after dusk: சூரியன் மறைஞ்ச பிறகு மண்ணெய் விளக்கு கட்டாயம். "Riding without light after dusk was an offence"



BOMBAY CITY

No. 35217

CYCLE LICENCE

(BOMBAY MUNICIPAL CORPORATION)

THE BOMBAY POLICE ACT, 1951

Name of Holder : ARVIND V. DESHPANDE

Address : 22, WALTON ROAD, COLABA, BOMBAY - 5

Make of Cycle : HERCULES

Cycle No. (Frame) : A 58732

Licence No. : 35217

Date of Issue : 14th APRIL, 1956

Valid up to : 31st MARCH, 1957

Fee Paid : Rs. 2/- (TWO ONLY)

This licence must be produced on demand by a Police Officer.

NOT TRANSFERABLE

BOMBAY POLICE COLABA S.I. COLABA POLICE STATION

For Police Inspector, Colaba Police Station.

Brake: Working brake இல்லாட்டி பிடிப்பாங்க.

Double-riding: இரண்டு பேர் போக தடை. Madras-ல 1952-ல் இதுக்கெல்லாம் Saidapet court-ல fine கட்டியிருக்காங்க.

## 3. எந்தெந்த நகரங்களில் இருந்தது?

Cycle license பான்-இந்தியா இல்ல. Municipal law. பெரிய நகரங்களில் மட்டும்.

**Bombay:** 1980 வரை இருந்தது. BMC Act 1888-ன் கீழ் வசூல்.

**Madras:** 1970கள் வரை. Corporation office-ல் queue-ல நின்னு வாங்கணும்.

**Calcutta, Delhi, Bangalore:** எல்லா இடத்திலும் similar system.

**சின்ன டவுன்:** பல இடங்களில் இல்லை.

## 4. முடிவு: ஏன் License System நிறுத்தப்பட்டது? 1970-1990

**Traffic மாற்றம்:** 1970-க்கு பிறகு scooter, car அதிகமாச்சு. Cycle % குறைஞ்சது.

**Administrative burden:** லட்சக்கணக்கான cycle-க்கு வருஷா வருஷம் license கொடுக்குறது, tin plate அடிக்குறது Corporation-க்கு செலவு.

**Collection கம்மி:** பல பேர் license எடுக்காம ஓட்டினாங்க. Police-க்கு எல்லாரையும் check பண்ண முடியல.

**Policy shift:** 1991 Economic Liberalization-க்கு பிறகு Licence Raj முழுசா ஒழிஞ்சது.

1980-களின் இறுதிக்குள் பெரும்பாலான நகரங்கள் cycle license-ஐ நிறுத்திட்டாங்க.

## 5. இன்னைக்கு நிலைமை: 2026

"In India, there is no legal requirement for a bicycle license. Unlike motorized vehicles... bicycles fall under the category of non-motorized vehicles and do not require registration, insurance, or a driving license"

Motor Vehicles Act 1988-ல் cycle சேராது. அதனால RTO license, RC, insurance எதுவும் தேவையில்லை.

## 6. Licence Raj-ன் மற்ற 'விநோத' License-கள்

Cycle மட்டும் இல்ல, இதுக்கெல்லாம் license இருந்தது:

**Radio License:** 1984 வரை. AIR-க்கு வருஷம் ₹15 கட்டணும். Post office-ல stamp ஒட்டுவாங்க.

**Dog License:** Bombay-ல நாய் வளர்க்க ₹5 license. Rabies control-க்காக.
TV License: Doordarshan காலத்துல TV வச்சிருந்தா license.

Cart License: மாட்டு வண்டி, குதிரை வண்டிக்கு கூட tax.

## 7. Vintage Collectible ஆன Cycle License

நீங்க அனுப்பின 1956 Bombay license மாதிரி documents இப்போ collector item. eBay, OLX-ல ₹2000-5000 வரை போகுது. "Licence Raj nostalgia" என்றே ஒரு market இருக்கு.

**நிஜ சம்பவம்:** 1950-ல் Colaba-ல இருந்த Arvind V. Deshpande என்றவர் Hercules cycle-க்கு ₹2 கட்டி வாங்கின license இது. அவர் தினமும் Colaba Police Station-ஐ தாண்டி போகும்போது police license check பண்ணியிருப்பாங்க.

---

**Bottom Line:** வரலாறு சொல்லும் பாடம்

**Transport evolution:** 1950-ல் cycle = main transport. 2026-ல் cycle = fitness/hobby. அதனால் law மாறியிருக்கு.

**State vs Citizen:** அரசு எல்லாத்தையும் control பண்ணின காலம் அது. இன்னைக்கு "Minimum Government, Maximum Governance" நோக்கி போறோம்.

**Nostalgia:** உங்க தாத்தா cycle-ல tin plate மாட்டி, மண்ணெய் விளக்கு வச்சு, police-க்கு பயந்து ஓட்டின கதை கேளுங்க. அதுதான் real 'Licence Raj' experience.

Fun fact: 1956-ல் ₹2 license fee. அதே வருஷம் 1 litre petrol = ₹0.85. அதாவது 2.3 litre petrol காசு கொடுத்து தான் cycle ஓட்டியிருக்காங்க.

இன்னைக்கு நாம helmet கூட போடாம cycle ஓட்டுறோம். 70 வருஷத்துல எவ்வளவு மாறியிருக்கு பாருங்க.

தகவல்: **Sundararaman**

# தினம் ஒரு தலைவர்கள் — பசந்த குமார் பிஸ்வாஸ் வரலாறு

பசந்த குமார் பிஸ்வாஸ் (6 பிப்ரவரி 1895 - 11 மே 1915) ஜுகந்தர் குழுவில் ஈடுபட்ட ஒரு இந்திய சுதந்திர ஆதரவு ஆர்வலர் ஆவார் , அவர் டிசம்பர் 1912 இல், டெல்லி-லாகூர் சதி என்று அறியப்பட்ட வைஸ்ராயின் அணிவகுப்பில் குண்டுவீச்சு நடத்தியதில் பங்கு வகித்தார் . வங்காளத்திலும் முழு நாட்டிலும் ஆரம்பகால சுதந்திர ஆதரவு ஆர்வலர்களில் பிஸ்வாஸும் ஒருவர் . அவர் வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணராக இருந்தார், மேலும் ஜுகந்தர் தலைவர்களான அமரேந்திரநாத் சட்டோபாத்யாயா மற்றும் ராஷ் பிஹாரி போஸ் ஆகியோரால் புரட்சிகர இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டார் .

ஆரம்ப கால வாழ்க்கை

பசந்தா குமார் பிஸ்வாஸ், இன்றைய மேற்கு வங்காளத்தின் நாடியா மாவட்டத்தில் உள்ள ஒரு வங்காள இந்து பிரபுத்துவ மகிஷ்ய குடும்பத்தில் , மோதிலால் பிஸ்வாஸ் மற்றும் குஞ்சபாலா தேவி ஆகியோருக்கு 1895 பிப்ரவரி 6 அன்று போராகச்சா கிராமத்தில் பிறந்தார் .




அவரது மூதாதையர் (தாத்தா), திகம்பர் பிஸ்வாஸ், பணப்பயிரை கட்டாயமாக பயிரிடுவதற்கு எதிராக இண்டிகோ கிளர்ச்சியின் ( நீல் பித்ரோஹா, 1859 ) தீவிரத் தலைவராகப் புகழ் பெற்றார், மேலும் சுதந்திரப் போராட்ட வீரர் மன்மதநாத் பிஸ்வாஸ் அவரது உறவினர் ஆவார். சமூக சீர்திருத்தவாதி மற்றும் தொழிலதிபர் ககன் சந்திர பிஸ்வாஸால் நிறுவப்பட்ட அருகிலுள்ள மாதவ்பூர் கிராமத்தில் உள்ள எம்.ஐ. பள்ளியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடங்கினார் , அவரது உறவினர் மன்மதநாத் பிஸ்வாஸுடன். 1906 ஆம் ஆண்டில், பசந்தா முராகச்சா பள்ளிக்கு மாற்றப்பட்டார் , அங்கு அவர் நுழைவுத் தேர்வு வரை படித்தார் . முராகச்சா பள்ளியின் தலைமை ஆசிரியரான கீரோத் சந்திர கங்குலியின் வழிகாட்டுதலின் கீழ் , பசந்தா தனது சுதந்திரப் போராட்டப் பயணத்தைத் தொடங்கினார். இந்தப் பள்ளியில் மாணவராக இருந்தபோது, போராகச்சா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நடந்த சுதேசி போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். 1907 ஆம் ஆண்டு, தனது படிப்பை விட்டுவிட்டு, 1910 ஆம் ஆண்டு உத்தர்பராவில் உள்ள ஒரு சுதேசி துணிக்கடையில் வேலை செய்தார், ஆனால் அதை விட்டுவிட்டு இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவர் பூரிக்குச் சென்று , இறுதியில் பனாரஸுக்குச் சென்று , அங்கு ராமகிருஷ்ணா மிஷனில் தங்கினார் . அடுத்த ஆண்டு அவர் டேராடூனில் ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்தார் , அவரால் பணியமர்த்தப்பட்டார். போஸ் அவருக்கு ஆயுதங்கள் மற்றும் குண்டுகளில் பயிற்சி அளித்தார், மேலும் அவரை அன்பாக பிஷே என்று அடிக்கடி அழைத்தார் .



நாடியாவின் போராகச்சாவில் உள்ள பசந்த குமார் பிஸ்வாஸின் பிறந்த இடத்திற்கு அருகில் அவரது நினைவுச்சின்னம்

புரட்சிகர நடவடிக்கைகள்

பசந்த குமார் பிஸ்வாஸ், ஜுகந்தர் குழுவில் உறுப்பினராக இருந்தார் , அவரது அமைப்புத் திறமைகளுக்கு பெயர் பெற்றவர் மற்றும் கல்கத்தா ஜுகந்தர் அலுவலகத்திற்கும் சந்தன்நகரில் உள்ள 'சக சதிகாரர்களுக்கும்' இடையே ஒரு முக்கியமான இடைத்தரகராக இருந்தார் . டேராடூனில் ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்த பிறகு, அவர் அரசியல் ரீதியாகப் பயிற்றுவிக்கப்பட்டார் மற்றும் அவரது பணியை நிறைவேற்றுவதற்கான நடைமுறை பயிற்சிகளைக் கற்றுக்கொண்டார். 1912 அக்டோபரில் போஸால் லாகூருக்கு அழைத்து வரப்பட்டு, அங்கு தனது பஞ்சாபி கூட்டாளிகளுடன் தங்கினார். லாகூரில் அவர் ஒரு பிரபலமான மருந்தகத்தில் ஒரு கம்பவுண்டராகப் பணியாற்றினார். இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த லார்ட் ஹார்டிங்கின் மீது குண்டு வீசும் சதியில் பிஸ்வாஸ் பங்கேற்றார் . 1912 டிசம்பர் 23 அன்று, டெல்லி இந்தியாவின் தலைநகராக பதவியேற்றதைக் குறிக்கும் ஒரு மாநில ஊர்வலத்தில் லார்ட் ஹார்டிங்க் டெல்லியின் சாந்தினி சவுக் வழியாகச் சென்றபோது, இது அவரால் மேற்கொள்ளப்பட்டது. பெண்கள் உடையில், பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வைஸ்ராயின் பாதையை நோக்கிய ஒரு கூரைக்குச் சென்றார். அவர் மற்ற பார்வையாளர்களுக்கு லட்சுமிபாய் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார் - இது ஜான்சியின் பிரபலமான ராணியைக் குறிக்கிறது . ஊர்வலம் பிஸ்வாஸ் காத்திருந்த கூரை வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, ஒரு குண்டு கீழே விழுந்து வைஸ்ராயின் பின்னால் வெடித்தது. ஹார்டிங்க் பலத்த காயமடைந்தார், அவருக்குப் பின்னால் இருந்த வேலைக்காரன் தனது குடையாணியைப் பிடித்திருந்தான். தனது வேலை முடிந்தவுடன் பசந்தா தெருவில் இறங்கி தனது சேலையைக் கழற்றி கூட்டத்திற்குள் மறைந்தார். அவர் பஞ்சாபிற்குத் திரும்பினார், அங்கு அவர் தனது புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொண்டார். மாநிலத்தின் தீவிர விசாரணை மற்றும் இலாபகரமான வெகுமதி இருந்தபோதிலும், பத்திரத்தின் ஆசிரியர்கள் பல மாதங்களாக தெளிவற்றவர்களாகவே இருந்தனர்.



ATTENTAT CONTRE LORD HARDINGE, VICE-ROI DES INDES

பிஸ்வாஸ் 1914 பிப்ரவரி 26 அன்று நாடியாவின் போராகச்சாவில் தனது தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்யச் சென்றபோது கைது செய்யப்பட்டார்.

1913 மே 17 அன்று லாகூரில் உள்ள லாரன்ஸ் கார்டனில் குண்டு வீசியதாகவும், அதில் ஒரு பியூன் கொல்லப்பட்டதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. டெல்லி-லாகூர் சதி வழக்கு என்று அழைக்கப்பட்ட இந்த வழக்கு விசாரணை 1914 மே 23 அன்று டெல்லியில் தொடங்கியது; அமீர் சந்த் , அபாத் பெஹாரி மற்றும் பாய் பால்முகுந்த் ஆகியோருக்கு விசாரணையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது, மேலும் பசந்தா பிஸ்வாஸ் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது, ஆனால் ஆரம்பத்தில் அவருக்கு பதினேழு வயது மட்டுமே என்பதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

வைஸ்ராய் ஹார்டிங் மீது பிஸ்வாஸால் படுகொலை முயற்சி லாகூர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது . அரசர் தனது மேல்முறையீட்டை வென்றார், பிஸ்வாஸுக்கு தூக்கிலிட தண்டனை விதிக்கப்பட்டது.

பசந்த குமார் பிஸ்வாஸ் 1915 மே 11 அன்று பஞ்சாபில் உள்ள அம்பாலா மத்திய சிறையில் இருபது வயதில் தூக்கிலிடப்பட்டார் , மேலும் 20 ஆம் நூற்றாண்டில் இந்திய புரட்சிகர போராட்டங்களின் போது தூக்கிலிடப்பட்ட இளையவர்களில் ஒருவரானார்.

நாடியாவில் உள்ள ஒரு பள்ளியில் பசந்தா பிஸ்வாஸின் சிலை ஜப்பானின் டோக்கியோவில் உள்ள ஒரு பூங்காவில் ராஸ்பிஹாரி பாசுவால் பசந்தா பிஸ்வாஸின் சிலை நிறுவப்பட்டுள்ளது . மற்றொரு சிலை நதியாவின் கிருஷ்ணாநகரில் உள்ள ரவீந்திர பவன் முன் அமைந்துள்ளது . டெல்லியின் சிவில் லைன்ஸில் உள்ள ஒரு பள்ளிக்கு அவரது நினைவாக "ஷாஹீத் பசந்த் குமார் பிஸ்வாஸ் சர்வோதய வித்யாலயா" என்று பெயரிடப்பட்டது. பின்னர் அது ராஜ்கியா பிரதிபா விகாஸ் வித்யாலயா என மறுபெயரிடப்பட்டது . மக்களவை சபாநாயகர் மீரா குமார் இந்திய நாடாளுமன்ற அருங்காட்சியகத்தில் பசந்தா குமாரின் புகைப்படத்தை நிறுவியுள்ளார் .

இந்திய அரசியல்வாதியும் மேற்கு வங்க அரசாங்கத்தில் தற்போதைய அமைச்சருமான உஜ்ஜல் பிஸ்வாஸ் , பசந்தா பிஸ்வாஸின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

அமைச்சர் கடந்த 30 ஆண்டுகளாக பிப்ரவரி மாதத்தில் தனது கிராம வீட்டில் பசந்தா மேளா என்ற மூன்று நாள் கண்காட்சியை ஏற்பாடு செய்து வருகிறார் .

# ஜனநாயகன் பட லீக் விவகாரம்: 9 பேரின் ஜாமீன் மனு தள்ளுபடி



நடிகர் விஜய்யின் 'ஜனநாயகன்' படம் கடந்த மாதம் 3-ம் தேதி சட்டவிரோதமாக இணையதளத்தில் வெளியானது.
படத்தயாரிப்பு நிறுவனமான கே.வி.என்.புரொடக்ஷன்ஸ் அளித்த புகாரின் அடிப்படையில், சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.
இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட ஸ்ரீநாத், சஞ்சய், பாலகிருஷ்ணன், மணிகண்டன், ருத்ரன், ராஜேஷ், பிரசாந்த், செல்வம் மற்றும் ரஜினி ஆகியோர், ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர்.
இதற்கிடையே, இந்த மனுக்கள் நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன் விசாரணைக்கு வந்தது.
காவல்துறை மற்றும் படத்தயாரிப்பு நிறுவனம் சார்பில் ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.
இந்நிலையில், அனைத்து தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி, குற்றச்சாட்டுகளின் தீவிரம், தற்போதைய புலன் விசாரணை நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, 9 பேரின் ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.



ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவர் கேப்ரியல்லா. நடிப்பை தாண்டி இவருடைய நடனத்திற்கு தனி ரசிகர் பட்டாளம் உள்ளது.
ஈரமான ரோஜாவே 2 சீரியலில் கதாநாயகியாக நடித்து நல்ல வரவேற்பை பெற்றார். மேலும் தற்போது சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் மருமகள் சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.
இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் பிரபலங்களில் ஒருவர் நடிகை கேப்ரியல்லா. தன்னுடைய லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் தொடர்ந்து பதிவிட்டு வரும் இவர், தற்போது இமாச்சல பிரதேசத்திற்கு வெகேஷன் சென்றுள்ள புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

# தமன்னா இல்லன்னா ஆலியா...விஜய் வர்மா



நடிகை தமன்னாவும், பிரபல பாலிவுட் நடிகர் விஜய் வர்மாவும் தி லஸ்ட் ஸ்டோரிஸ் என்ற படத்தில் நடித்த போது இருவரும் காதலிக்க தொடங்கினர். காதலர்களாக பல இடங்களில் டேட்டிங் செய்ததுடன் திருமணம் வரை இவர்களது காதல் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது.

திடீரென இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தனர். சமீபகாலமாக விஜய் வர்மா நடிகை ஆலியா குரோசியை காதலித்து வருவதாக தகவல்கள் வெளியானது. பல இடங்களில் ஒன்றாக சுற்றி வருவதை பார்க்க முடிந்தது.

இந்தநிலையில் மும்பை உணவகம் ஒன்றில் விஜய் வர்மாவும், ஆலியா குரேசியும் ஒன்றாக காணப்பட்டனர். இருவரும் உணவகத்தில் இருந்து வெளியே வரும் காட்சிகள் வைரலாகி வருகிறது. ஆலியா குரோஷி மும்பையை சேர்ந்த பாடகி, நடிகை மற்றும் பாடலாசிரியர் ஆவார். ஷாருக்கானின் ஜவான் படத்தில் திரைக்கதை குழுவில் ஒரு பகுதியாக இருந்தார். தனி இசை ஆல்பம் மூலம் ஆலியா குரோஷி 'ஜல்லி' என்ற பெயரோடு அழைக்கப்படுகிறார்.


# சோனியா அகர்வாலின் நகம்பட்டு 'காய்ச்சல்'



தமிழ் திரை உலகில் பிரபல நடிகராக திகழ்ந்தவர் ரவி கிருஷ்ணா. செல்வராகவன் இயக்கத்தில் வெளியான 7ஜி ரெயின்போ காலனி என்ற படத்தில் ரவி கிருஷ்ணாவும் சோனியா அகர்வாலும் இணைந்து நடித்திருந்தனர். படம் திரைக்கு வந்து நல்ல வரவேற்பு பெற்றிருந்தது.

மேலும் படத்தில் ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால் ஆகியோரின் கெமிஸ்ட்ரி ரசிகர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. படத்தில் நடித்த அனுபவம் குறித்து ரவி கிருஷ்ணா அளித்த பேட்டியில் கூறியதாவது:- படத்தில் இடம் பெற்ற ஜனவரி மாதம் பாடல் படப்பிடிப்பின் போது சோனியா அகர்வால் நகங்களால் என் முதுகை கீற வேண்டியிருந்தது. இதனால் என் முதுகு வீங்கி எனக்கு அதிக காய்ச்சல் ஏற்பட்டது. செல்வராகவனிடம் பணியாற்றுவது எளிதான காரியம் இல்லை.

காலை 5.30 அல்லது 6 மணிக்குள் அனைவரும் படப்பிடிப்பு தளத்தில் இருக்க வேண்டும். செல்வராகவன் படங்களில் சோம்பல் என்பதே இல்லை. இரவு பகலாக படப்பிடிப்பு நடந்தது.



# நான் விஜய் வெறியன் இசை அமைப்பாளர் சாய் அபயங்கர்

தமிழ் திரை உலகில் பிரபல இசை அமைப்பாளரான சாய் அபயங்கர் அளித்து உள்ள பேட்டியில், நான் விஜய்யின் ரசிகன் என்பதை விட அவரது வெறியன்.
விஜய்யின் சச்சின் போன்ற காதல் படங்களுக்கு இசை அமைக்க வேண்டும், அவருக்காக ஹிட் பாடல்களை கொடுக்க வேண்டும் என்பது என் மிகப்பெரிய ஆசை.
ஆனால் விஜய் அரசியலில் ஈடுபட்டு சினிமாவில் இருந்து விலகியது எனக்கு மிகுந்த மன வருத்தம்.



பருத்திவீரன் படத்தின் மூலம் ஒட்டுமொத்த தமிழ் சினிமாவை திரும்பி பார்க்க வைத்த கதாநாயகி ப்ரியாமணி. இவர் தற்போது கோலிவுட் முதல் பாலிவுட் வரை படங்கள், வெப் தொடர்கள் என நடித்து கலக்கிக்கொண்டிருக்கிறார்.
இவர் நடிப்பில் அடுத்ததாக தமிழில் ஜனநாயகன் திரைப்படம் வெளிவரவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நடிகை ப்ரியாமணி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது தனது போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்வார்.
அந்த வகையில், தற்போது அழகிய புடவையில் எடுத்துக்கொண்ட அசத்தலான போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

# தயாரிப்பாளரான நடிகர் ரியோ ராஜ்



ஜோ, ஸ்வீட்ஹார்ட், லவ்மேரேஜ், ஆண்பாவம் பொல்லாதது உள்பட பல படங்களில் நடித்திருப்பவர் ரியோராஜ்.
அவர் நடிப்பில் வெளியான படங்கள் வெற்றிப் படங்களாக அமைந்த நிலையில் ரியோராஜ் தயாரிப்பாளராக அறிமுகமாகி பிரவுன் மணி என்ற படத்தை தயாரிக்கிறார். கதிரவன் சம்பத் இயக்கத்தில் உருவாகி வரும் படம் பிரவுன் மணி. படத்தில் ராம்நிஷாந்த் கே.எஸ்.கவி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

தேவ் பிரகாஷ் ரீகன் படத்திற்கு இசை அமைத்துள்ளார். சக்தி சுப்பிரமணியன் ஒளிப்பதிவு செய்கிறார். லைவ் சவுண்ட் முறையில் படம் உருவாகி வருகிறது. ரியோராஜின் ரிவர்ரூட் ஸ்டூடியோஸ் மற்றும் ரெட்ராக் ஸ்டுடியோஸ் இணைந்து படத்தை தயாரித்துள்ளது. படத்தின் முதல் தோற்றத்தை நடிகர் ரியோராஜ் வெளியிட்டுள்ளார்.

குடும்பம் மற்றும் நண்பர்கள் உறவை மையமாகக் கொண்ட இந்தப் படம், இரண்டு நண்பர்களின் உணர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு நிறைந்த பயணத்தை சுவாரஸ்யமாகச் சொல்லும் குடும்ப பொழுது போக்கு படமாகி உருவாகியுள்ளது. நகைச்சுவை, உணர்வு மற்றும் அனைவரையும் ஈர்க்கக்கூடிய வகையில் படம் உருவாகியுள்ளது. ஆடியோ வெளியீடு மற்றும் திரையரங்கு வெளியீடு குறித்த தகவல்கள் விரைவில் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

# ஒரே வாரத்தில் ரூ.11 கோடி சம்பாதித்த நடிகை

அமெரிக்கன் பை படத்தில் நடித்த ஷானன் எலிசபெத் ஒன்லி பேன்ஸ் கணக்கை தொடங்கி உள்ளார். தமிழ் திரை உலக பிரபலங்களான தர்ஷா குப்தா, அபிராமி வெங்கடாசலம் உள்பட பலர் சமீபத்தில் சந்தா சேவையை தொடங்கி வருமானத்தை பெருக்கி வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 16-ந்தேதி தனது கணக்கை தொடங்கிய ஷானன் எலிசபெத் ஒரு வாரத்தில் ரூ.11 கோடி வருமானத்தை பெற்றுள்ளார். ஹாலிவுட் திரை உலகில் 2000-ம் ஆண்டில் பிரபல கவர்ச்சி நடிகையாக இருந்த ஷானன் எலிசபெத் கூறும் போது, ஹாலிவுட் படங்களின் கட்டுப்பாடு என்னை சலிப்படைய செய்துள்ளது.

ஒன்லி பேன்ஸ் தளம் இதுவரை யாரும் பார்த்திராத ஒரு கவர்ச்சியான பக்கத்தை வெளிப்படுத்தவும், ரசிகர்களுடன் நெருக்கமாக இருக்கவும் உதவுகிறது. என் விருப்பப்படி கருத்துக்களை உருவாக்கவும், சுதந்திரமாக இருக்கவும் அனுமதிக்கிறது. இதுவே என் எதிர்காலம் என நான் உறுதியாக நம்புகிறேன்' என்றார்.



நடிகை காஜல் அகர்வால் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் பிரபலம் ஆவார். தனது லேட்டஸ்ட் போட்டோஷூட், குடும்பத்துடன் எடுத்துக்கொள்ளும் புகைப்படங்கள், தனது படங்களின் வீடியோ மற்றும் போஸ்டர்ஸ் ஆகியவற்றை இன்ஸ்டாவில் பதிவு செய்வார். குறிப்பாக இவர் வெளியிடும் போட்டோஷூட் புகைப்படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும்.

இந்த நிலையில், தற்போது வெள்ளை நிற புடவையில் நடத்திய கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். 40 வயதை எட்டிய நடிகை காஜல் அகர்வாலா இது? இந்த வயதிலும் இவ்வளவு இளமையாக இருக்கிறாரே! என பலரும் இந்த புகைப்படங்களை பார்த்து ஆச்சரியப்பட்டு வருகிறார்கள்.




## ஓடிடி-யில் வெளியாகும் 'ஓ பட்டர்பிளை'



ஆண்ட்ஹில் சினிமா மற்றும் பாலம்பூர் டாக்கீஸ் இணைந்து தயாரித்துள்ள படம் 'ஓ பட்டர்பிளை'. விஜய் ரங்கநாதன் எழுதி இயக்கி உள்ள இப்படத்தில் நிவேதிதா சதீஷ், சிபி, நாசர், லட்சுமி பிரியா, சந்திர மௌலி, கீதா கைலாசம் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். கணவன், மனைவிக்குள்ளான காதல் மற்றும் திகில் கலந்த கதைக்களத்தில் உருவாகி உள்ள இப்படத்திற்கு வைசாக் சோமநாத் இசையமைத்துள்ளார். இந்த படம் மார்ச் மாதம் வெளியான நிலையில் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இந்த நிலையில், 'ஓ பட்டர்பிளை' படம் வருகிற 8 -ந்தேதி முதல் சன் என்எக்ஸ்டி ஓடிடி தளத்தில் கண்டு மகிழலாம்.

## நல்ல கதைக்காக எதையும் செய்யலாம்



தமிழ் சினிமாவில் நகைச்சுவை, குணச்சித்திர கதாபாத்திரங்களில் கலக்கி வருபவர், எம்.எஸ். பாஸ்கர். 'பார்க்கிங்' என்ற படத்தில் வில்லத்தனத்திலும் மிரட்டினார். அந்த படத்துக்காக தேசிய விருதும் பெற்றார்.

சினிமாவில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக பயணித்து வரும் எம்.எஸ்.பாஸ்கர், சமீபத்தில் திரைக்கு வந்த தனுசின் 'கர' படத்தில் முதியவர் வேடத்தில் நடித்திருக்கிறார். 'இவரா...' என யூகிக்க முடியாத அவரது தோற்றம் அனைவரையுமே கவனிக்க வைத்திருக்கிறது.

இதுகுறித்து எம்.எஸ்.பாஸ்கர் கூறும்போது, "என்னை பொறுத்தவரை டைரக்டர் சொல்வதை செய்கிறேன். நல்ல கதைக்காக எதையும் செய்யலாம். அப்படித்தான் அந்த வயதான முதியவர் தோற்றத்தில் நடித்தேன். என் குரலையும் மாற்றிக் கொண்டேன்.

நான் யார்? என்று ரசிகர்கள் அடையாளம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அந்த கதாபாத்திரத்தை ரசித்தாலே போதும். அதிலேயே நான் நிறைவு கொள்வேன். அப்படித்தான் சினிமாவில் பயணிக்கிறேன்", என்றார்.

## மொத ராத்திரி திரைப்படம்!

நல்ல கதையம்சத்துடன் கூடிய இந்த எண்டர்டெயினர் திரைப்படத்தின் தலைப்பை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார்!

இந்திய சினிமாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்று மைத்ரி மூவி மேக்கர்ஸ். 'புஷ்பா', 'குட் பேட் அக்லி' போன்ற பிளாக்பஸ்டர் எண்டர்டெயின்மெண்ட் திரைப்படங்களை தொடர்ந்து தயாரித்து வருகிறது. திரைத்துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் பல படங்களை தயாரித்து வரும் இந்நிறுவனம் அடுத்ததாக தனது கிரியேட்டிவ் ஸ்பெக்ட்ரத்தில் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளது.

இந்நிறுவனம் தமிழில் தயாரிக்கும் மூன்றாவது படமான புரொடக்ஷன் நம்பர் 3 தற்போது 'மொத ராத்திரி' என தலைப்பிடப்பட்டுள்ளது. நல்ல கதையம்சம் கொண்ட எண்டர்டெயின்மெண்ட் திரைப்படமான இதன் முதல் பார்வை மற்றும் தலைப்பை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் சமூகவலைதள பக்கத்தில் வெளியிட்டார். ராஜா கருப்பசாமி இயக்கும் இந்தப் படத்தில் ரிஷிகாந்துடன் 'சிறை' மற்றும் 'யூத்' படங்கள் மூலம் கவனம் ஈர்த்த அனிஷ்மா அனில்குமார் நடிக்கிறார். வழக்கத்திற்கு மாறான ஒரு திருமணம், ஒரு இரவு, இரண்டு அறிமுகமில்லா நபர்கள், ஆச்சரியங்கள், பல பொய்கள் என ஓர் இரவு எல்லாவற்றையும் மாற்றுகிறது என்பதுதான் 'மொத ராத்திரி'.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பாளர் நவீன் யெர்னேனி பகிர்ந்து கொண்டதாவது, "பிரம்மாண்டமான எண்டர்டெயின்மெண்ட் கதைகளை மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் அதே சமயம், அனைத்து தரப்பு பார்வையாளர்களையும் கவரும் வகையிலான வலுவான கதைகளையும் தயாரிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறோம். திறமையான புதியவர்களுக்கு எங்கள் நிறுவனத்தில் எப்போதும் வாய்ப்பு உண்டு. 'மொத ராத்திரி' திரைப்படத்தின் கதையை இயக்குநர் ராஜா கருப்பசாமி சொன்னபோதே இதுபோன்ற தனித்துவமான என்கேஜிங் கதைகளை பெரிய திரையில் கொண்டு வர வேண்டும் என முடிவு செய்தோம். இளம் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப குழுவினருடன் இணைந்து பணியாற்றுவது உற்சாகமாக உள்ளது. இதுபோன்ற உற்சாக அனுபவம் திரையரங்குகளில் பார்வையாளர்களுக்கும் கிடைக்கும் என நம்புகிறோம்" என்றார்.

இயக்குநர் ராஜா கருப்பசாமி பகிர்ந்து கொண்டதாவது, "மைத்ரி மூவி மேக்கர்ஸ் போன்ற பெரிய நிறுவனத்தில் இயக்குநராக அறிமுகமாவது எனக்கு ஸ்பெஷலான ஒன்று. புது ஐடியா மற்றும் திறமையானவர்கள் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கை எனக்கு பொறுப்பு, மகிழ்ச்சியை ஒருசேர கொடுத்தது. படைப்பு சுதந்திரத்துடன் எனக்கு விருப்பமான தொழில்நுட்பக் குழுவினருடன் பணிபுரிய அனுமதித்த தயாரிப்பாளர்களுக்கு நன்றி. உணர்வுப்பூர்வமான, அதே சமயம் என்கேஜிங்கான திரையரங்க அனுபவத்தை ரசிகர்களுக்கு 'மொத ராத்திரி' திரைப்படம் நிச்சயம் தரும். என் மீது நம்பிக்கை வைத்து வாய்ப்பு கொடுத்த தயாரிப்பாளர்கள் நவீன் யெர்னேனி மற்றும் ஒய் ரவி சங்கர் இருவருக்கும் நன்றி" என்றார்.

என்கேஜிங்கான கதை, புது திறமையாளர்கள் மற்றும் பிரம்மாண்டமான தயாரிப்பு நிறுவனம் என 'மொத ராத்திரி' திரைப்படம் புதுமையான அதேசமயம் எண்டர்டெயின்மெண்ட் கதைக்களத்தை ரசிகர்களுக்கு தர இருக்கிறது. படம் குறித்தான அடுத்தடுத்த அப்டேட் விரைவில் வெளியாகும்.

ரிஷிகாந்த், அனிஷ்மா அனில்குமார், சேத்தன், ஏ. வெங்கடேஷ், பக்ஸ், அப்துல் லீ, ஷெல்லி கிஷோர், சங்கீதா பாலன், பானுபிரியா, சுமித்ரா தேவி. எல், வர்ஷினி கார்மேகம், கார்த்திகேயன், வேலன், கௌஷிக் கபிலன் மற்றும் பலர் நடிக்கும் இப்படத்திற்கு பரத் சங்கர் இசையமைக்க உள்ளார்.




ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சீரியல் அயலி. இந்த சீரியலில் இந்திராணி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை வித்யா மோகன்.

இவர் வள்ளி சீரியல் மூலம் சின்னத்திரையில் நடிகையாக அறிமுகமானார். இந்த சீரியலில் இவருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதன்பின் தற்போது அயலி சீரியலில் வலுவான கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

நடிகை வித்யா மோகன் தனது சமீபத்திய புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிடுவார். அந்த வகையில் அவர் வெளியிட்டுள்ள சில புகைப்படங்களை பார்க்கலாம் வாங்க.



### காதல் நீதானா?

முதல் சந்திப்பில்
முற்றும் மறந்தேன்
காதலில் விழுந்தேன்

பார்வைகள் சந்திப்பு
பற்றிக்கொண்டதுநெருப்பு

பேசிட ஆயிரம் வழிகள்
ஆனால் என்னிடம்
இருந்ததோ
இரண்டே
விழிகள்.



**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி





மக்கள் கைகள்
தரும் நம்பிக்கையே
உழைப்பின் உயர்வானது.

2.உழைப்பில்
வந்த வியர்வைகளே
ஆயுள் ரேகைகளில்
நீர்வீழ்ச்சிகளாக
பிரவாகம்
எடுக்கிறது.



**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.

நீ அடிக்கடி கோயிலுக்குச்
செல்வதால் உன்னைச்
சுற்றுவது எனக்கு
மிகவும் வசதியாகத்தான்
இருக்கிறது!
யார் உன்னை வரைந்தாலும்
நீ அழகாகவே இருப்பாய்!
ஆனால் நீ என்னைக்
காதலித்ததால் தான்
நான் அழகாக இருக்கிறேன்!
உன்னை வரையத்தான்
எனக்குத் தெரியவில்லை
கவிதையாக்கியாவது
ரசித்துக் கொள்கிறேன்!
எனக்குள் காதலை
விதைத்துக் கனவுகளை
நிறைவேற்றியவள் நீ!
எதையெதையோ பிடித்துக்
கொண்டிருந்த என்னை
உன்னைப் பிடிக்க வைத்து
விட்டாய்!
நீ ஆடுவது
வேட்டையென்றறிந்தும்
நான் தப்பிக்க
நினைத்ததேயில்லை!
ஏனெனில் காதல்
எத்தனை அழகென்று
உன்னைப்
போலவே
எனக்கும்
தெரியும்!




**முத்து ஆனந்த்**
வேலூர்



### மயிலிறகால் செதுக்கி...

வரலாற்று நதியில்
நீண்ட நெடுநாளாய்
'வள்'ளரசுகளாகி,
வடுவாகிப்போன
வல்லரசுகளே...
வலிமைக்கு வளம்
பெருக்கத் தெ ரியாமல்
வஞ்சனை,சூது
வாய்ச்சொல் வீரம்
வடிகட்டிய வக்கிரம் என்று
கனம் குறைந்து
களங்கம் நிறைந்து
கலிமுத்திக் குறுகிப்
போனவர்களே...
கூர்மதி ஆற்றலால்
குவலயத்துக்கு
கிரீடம் சூட்டி உயர்த்துவதாய்
சொல்லி, நிஜத்தில்
உத்தம பூமியின்
உள்ளொளிக்கு
உலை வைத்து உருக்குலைந்த
வல்லாதிக்க வல்லூறுகளே...
அறிவியலின் ஆன்மாவை
அநியாயமாய் அசுத்தப் படுத்தி
அகிலம் முழுக்க
அருவருக்க வைத்த
ஆபத்தின் குறியீடுகளே...
இரண்டு உலகப் போரிலும்
இதயம் தாங்காத
எத்தனையோ இழப்புகளை
எதிர் கொண்ட பின்பும்
இரக்கமே இல்லாமல்
எந்திரமாய் இயங்கி
இருட்டுப் பள்ளத்தில்
ஏனோ தானோவாய் வீழ்ந்து
உள்விழி இழந்து உலர்ந்து
போனவர்களே...அகிலத்தின்
அழிவுக்கும் இழிவுக்கும்
ஆதரவாய் இருப்பது தான்
ஆறறிவு என்று
அரைகுறையாய்ப் புரிந்து
ஆயிரம் ஆயிரம்
பாதகங்களை
அடுக்கடுக்காய்
அரங்கேற்றும் அரக்கர்
குலத்தின் அசலான
பிரதிகளே...வருத்தம்
தரும் உங்களின் ஊனப்
பக்கங்களை இடைவெளியே
இல்லாமல் இன்னும்
எழுதிக் கொண்டே
இருக்கலாம்... முணுமுணுப்பு
முரண்களின் முகாரியால்
யாது பயன்? காலச்
சக்கரத்தால் காலாவதியாகிப்
போன கற்கால
கரிச்சிந்தனைகளை யெல்லாம்
நெருப்பில் சுட்டெரித்து
நேர்மறை வளர்பிறைக்கு
விருப்ப மோகத்தில்
விரைந்தியங்கி
வாசல்கள் திறப்போம்...
ஆதியும் அந்தமும்
அன்புதான் என்று
ஆழ்ந்த ஞானத்தில் புதுஅர்த்த
சாஸ்திரம் படைப்போம்...
பிரபஞ்சத்தில் விரிந்து பரந்து
நிறைந்து கிடக்கும்
வளங்களை யெல்லாம்
உயிர்கள் அனைத்துக்கும்
ஊறு எதுவும் வராதபடி
ஒழுக்க நெறி நின்று
உயில் எழுதி வைப்போம்...
இனி போரென்னும் பொல்லா
அரக்கனால்
பிழை எதுவும் இங்கே
சிற்றளவும் வராதபடி
சிந்தனைகளை சீர்
வடிப்போம்... இத்தோடு
இன்னொரு புது விதி
வகுப்போம்...
பூமிப்பந்து பிசிறின்றி சுழல
வேண்டும்...
வானளவு உயர்ந்தாலும்
வல்லரசுகள் வேண்டாம்...
வேண்டவே வேண்டாம்
நானிலம் முழுவதும்
நல்லரசுகள் மலர்ந்து
நனி வளம் செழிக்கட்டும்...
நலம் தரும் நாகரீகங்கள்
வலம் வந்து தழைக்கட்டும்...
மாசில்லா மனித நேயம்
மயிலிறகு செதுக்கலில்
மண்ணில் என்றென்றும்
மணந்து பரவட்டும்!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

### "இன்னுமா சுரண்டல்?"

பசித்த வயிறு அலறும் போது
பண முதலை சிரிக்கிறது!
அது சிரிப்பல்ல சுரண்டல்
சத்தம்!
ஏழ்மையின் சோகச் சந்தம்!

வெயிலில் ஊறும் வியர்வை
வெள்ளி நாணயமாகும்!
ஆனால் அது
உழைத்த கைகளுக்குள்
விழாது என்றும்!

மண்ணை உழுது
நெல் மணியை
உண்டாக்குபவன் வீட்டில்
மட்டும் வறுமை
இருள் தங்குகிறது!

நீதியின் தராசு முள்
நேராக நிற்கவில்லை
ஒரு பக்கம் செல்வம்
மற்றொரு பக்கம்
செத்த கனவுகள்!

இன்னுமா சுரண்டல்?
இன்னும் எத்தனை உயிர்கள்
உயிரோடு புதைய வேண்டும்
உள்ளோ சுகத்திற்காக?

மௌனக்குரல்கள் ஓர் நாள்
முழக்கமாய் மாறும்?
அன்று சுரண்டிய கைகள்
சுண்டி போகும்!

அந்த நாளுக்காய்
இன்றே எழுந்திரு!
இல்லையேல்
நாளையும் இதே கேள்வி
தொடரும்...
"இன்னுமா
சுரண்டல்?"
எனக் கேட்டு!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

பாம்பு கடித்து ஏறிய விஷம்
கூட இறங்கிவிடும்

விண்வெளிக்குச் சென்ற
ஏவுகணை கூட திரும்ப
பூமிக்கு இறங்கிவிடும்

எரிவாயு பெட்ரோல் விலை
உயர்வை காரணம் காட்டி

ஏற்றப்பட்ட உணவுப்
பொருள்களின் விலை
மட்டும்
மீண்டும்
இறங்கியதாக
சரித்திரம்
கிடையாது



**நாகை பாலா**



### "கம்ப்யூட்டர் துணையுடன்"

மௌனமாக இருந்த மனசுக்கு
புதுமொழி கற்றுக் கொடுத்த
மாயக்கண்ணாடி
கம்ப்யூட்டர்!

எழுதத் தெரியாத
எண்ணங்களுக்கு
எழுத்து கற்றுத் தந்த
ஏகலைவன் சுண்டுவிரல்
கம்ப்யூட்டர்!

காகிதம் தேடி அலைந்த
காலம் போய்
கீபோர்டில் கனவுகள்
மலர்கின்றன...
தடுமாற்றம் இல்லாமல்
கண்ணுக்குள் சிந்தனைகள்
ஒளிர்கின்றன...

ஒரு சொல் தட்டினால்
உலகம் திறக்கிறது,
ஒரு கிளிக் செய்தால்
அறிவு பெருகுகிறது!
தூரங்களை அருகாக்கும்
துணைக் கோள்
கம்ப்யூட்டர்!

ஆனாலும் நினைவில் கொள்
மனிதனே! உன் மனமே
முதல்வன் கம்ப்யூட்டர் ஒரு
கருவி தான்! உன் உணர்ச்சி
தான் உயிர், இது வெறும்
வழிப்பாதை!

கம்ப்யூட்டர் துணையுடன்
வளர்ந்தாலும் கற்பனை உன்
உள்ளத்தில் பிறக்கட்டும்!
இயந்திரம் உதவியாய்
இருந்தாலும்
இயற்கை உணர்ச்சி
இயல்பாயிருக்கட்டும்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



### மன்னிப்பை யாசிப்பவன்.!

சாலையோர
தட்டுவண்டிக்கடையில்...
விரல்விரலாய் கீறி.. தூள்
உப்பும்.. மிளகாய்தூளும்
விரவிய.. மாங்காய்
பத்தைகளை.. கண்களில்
நீர்க்கசிய.. கொடூரப்பசிக்காரனாகவும்...
குறும்புக் குழந்தையாகவும் மாறி மாறி.. சுவைப்பவனை..
அசிரத்தையாக பார்க்காதீர்கள் பாவம் அவன்..

நாகரீக விசித்திர வண்ணக் கனவுகளுக்காக..
விளைச்சல் கனம் தாங்காமல்.. தாழ்ந்து தவழும்
கிளைகளையுடைய மாந்தோப்பையும்...
கோவணாண்டி யானாலும்.. சம்சாரியாய்
மானத்தோடு முன்நகர்ந்த ஏர்கலப்பையையும்..
'சம்காரம்'செய்துவிட்டு.. தப்பித்து நகர்புகுந்த
பாவியாகவும் அவன் இருக்கக்கூடும்.!*



**க. குமாரகுரு,** மயிலாடுதுறை

# "நூல் விமர்சனம்"

"மௌனத்தை மொழிபெயர்க்கையில் பிழைகளும் நேரலாம்."
(தன்முனைக் கவிதைகள் பகுப்பாய்வு நூல்)
ஆய்வாளர் முனைவர் வே.புகழேந்தி.
தொகுப்பு முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் ராஜூ ஆரோக்கியசாமி.
ஓவியா பதிப்பகம் 8–13–11, பில்டிங் சொசைட்டி 2வது தெரு, வத்தலக்குண்டு – 624 202. திண்டுக்கல் மாவட்டம். தமிழ்நாடு, இந்தியா.
அலைபேசி: 76675 57114.
முதல் பதிப்பு:–செப்டம்பர் 2025.
பக்கங்கள்: 198.
நூலின் விலை: ₹300.
email: oviyapathippagam@gmail.com
oviyapublication@gmail.com

"பதிப்புரை"

தமிழில் தன்முனைக் கவிதைகளில் புதிய புதிய முயற்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இது இந்தக் கவிதை இயக்கத்தின் மிகமுக்கியப் பங்களிப்பாகப் பார்க்கப்படுகிறது. உலகம் முழுவதுமுள்ள படைப்பாளர்கள் ஆர்வமுடன் தன்முனை முயற்சியில் ஈடுபடுவது இந்த இயக்கத்திற்குக் கிடைக்கும் பெரும் வரவேற்பைக் குறிக்கிறது.

இந்தத் தொடர் முயற்சியில் மிகமுக்கியப் பங்களிப்பாக மொழிபெயர்ப்பும் இருக்கிறது. ஆங்கிலம், ,இந்தி, கன்னடம் என மும்மொழிகளில் ஒருவரே பலரின் கவிதைகளை மொழி பெயர்ப்பதும், இந்த மொழிபெயர்ப்புக் கவிதைகளை அப்படியே நூலாகவெளியிடாமல் ஓர் ஆய்வுக் கண்ணோட்டத்தில் தன்முனைக் கவிதையை அணுகுவதும், அதை ஓர் ஒப்பீட்டு நோக்கில் ஒப்பிலக்கியமாக எழுதியும் நூலாக வெளியிடுவது நூலின் பன்முகத் தன்மையைக் காட்டுகிறது. இதற்கென மெனக்கிட்டு மொழி பெயர்த்தும், ஆய்வுரை மற்றும் ஒப்பீடு செய்தும் எழுதிய முனைவர் வே.புகழேந்தி பாராட்டுக்குரியவர்.

இந் நூலுக்காக பெரும் உழைப்பைக் கொடுத்திருக்கிறார். பெங்களூருவில் வசிக்கும் இனிய நண்பர் முனைவர் வே.புகழேந்தி. இந்த அற்புதமான முயற்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற தன்முனைக் கவிதைகளின் நிறுவனர் கா.ந.கல்யாணசுந்தரம், ராஜூ ஆரோக்கியசாமி இருவருக்கும் வாழ்த்துகள்! தன்முனைக் கவிதைகளின் முதல் மூன்று தொகுப்புகளை வெளியிட்ட "ஓவியா பதிப்பகம்" இந்நூலினை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

ஆக, "மௌனத்தை மொழிபெயர்க்கையில் பிழைகளும் நேரலாம்" என்ற தலைப்பில் தன்முனைக் கவிதைகளின் ஆகச் சிறந்த தொகுப்பாக வெளிவருகின்ற இந்த நூலினை அனைவரும் வாங்கிப் படியுங்கள். -தமிழ்ச்செம்மல் வதிலைபிரபா, வெளியீட்டாளர், ஓவியா பதிப்பகம். "வாழ்த்துரை."

தன்முனைக் கவிதைகள் குழுமத்தின் முப்பெரும் விழாவில் பெங்களூரு நகரில் வசிக்கும் முனைவர் வே.புகழேந்தி அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட 62 கவிஞர்களின் தன்முனை ஆய்வுக் கட்டுரை நூல் - மௌனத்தை மொழிபெயர்க்கையில் பிழைகளும் நேரலாம் - எனும் தன்முனைக் கவித்தொகுப்புப் பகுப்பாய்வு நூலை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஆங்கிலம், இந்தி, கன்னடம் என மூன்று மொழிகளில் தன்முனைக் கவிதைகளை மொழிபெயர்த்த முதல் ஆய்வு நூல் இதுதான். ஆய்வாளரின் சிறந்த முயற்சிக்கு மனமார்ந்த பாராட்டுகள். இந்த நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தன்முனை ஆய்வும் வெகு சிறப்பு. மேலும் தன்முனைகள் அனைத்தும் மனத்தை வருடும் வாழ்வியல் கவிதைகள். அனைத்து கவிஞர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். நூலினை சிறப்பாக வடிவமைத்த ஓவியா பதிப்பகம் - தமிழ்ச்செம்மல் வதிலைபிரபா அவர்களுக்கு இனிய வாழ்த்துகள். நூல் தொகுப்பில் அரும்பணியாற்றியிருக்கும் கவிஞர்கள் கா.ந.கல்யாணசுந்தரம், ராஜூ ஆரோக்கியசாமி இருவருக்கும் இனிய வாழ்த்துகள். பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இனிய வாழ்த்துகள்.

அன்புடன், -முனைவர் தாழை இரா.உதயநேசன் வேந்தர் அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுநர் / தலைவர் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பு அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை குழுமங்கள் 6643, *Locust Grove Dr., Indianapolis, Indiana - 46237, USA*

1.கவிச்சுடர் கா.ந.கல்யாண சுந்தரம் 'கவிதை வாசல்' 62, பத்தாவது தெரு, ஜெயச்சந்திரன் நகர், பள்ளிக்கரணை, சென்னை - 600 100 Cell: 94432 59288.

*The person on whoose head coconut is broken, does not eat of it. -African proverb:*

தென்னையப் பெத்தா இளநீரு...
பிள்ளையப் பெத்தா கண்ணீரு...
பெத்தவன் மனமே பித்தம்மா...
பிள்ளை மனமே கல்லம்மா...
-கவிஞர் கண்ணதாசன்.

மழையால் தணிந்திடுமோ மேகத்தின் தாகம்? நிழல்தான் தீர்த்திடுமோ விருட்சத்தின் தாபம்? மனித - வருடலால் மாய்ந்திடுமோ தென்றலின் வேட்கை? அளிகள் அளித்திடுமோ மலர்களுக்கு வாடகை?

இளவேனில் முதல் முதுவேனில் வரை இளநீர் விற்பனைக்கு விழுவதில்லை திரை. கத்தியுடன் தேவை அவனுக்கு கட்டாந்தரை மரநிழலே அவன் இருப்பிடத்தின் வரையறை. கருத்த உடலவன், சிறுத்த கண்களவன் மருத்துவமனை முன் வெட்டி விற்பவன் உலர்ந்த வாயுடன் ஊர் தாகம் தீர்ப்பவன் நோயாளிகள் வயிற்றில் பால் வளர்ப்பவன் மிதி வண்டியை அவன் மிதிக்க விதி வண்டியோ அவனை நசுக்க வாய்க்கும் வயிற்றுக்கும் போதாத வருமானம் வாழ்க்கைப்படகை ஓட்டிட படவேண்டும் அவமானம். இளநீர் விற்பவனை இழிவாக பார்த்திடாதீர். ஓர் இளநீரைப் பருகிவிட்டு 'ஃபோன் பே' வசதி உண்டா? எண் கேட்காதீர். 'மால்' களில்பேசாத பேரங்களை அவனிடமும் பேசாதீர். 'பார்' களில் 'பேரர்' களுக்கு கொடுக்கும் 'டிப்ஸ்' களை நினைத்துப் பாருங்கள். மறக்காமல் 'ஸ்ட்ரா' வாங்கி இளநீர் பருகுங்கள். 'எக்ஸ்ட்ரா' சில்லறை ஏதுமிருந்தால் 'வைத்துக்கொள்' என சொல்லிப் பாருங்கள்.

தாகம் தணிக்கும் மாந்தனவன்; வெயிலை விரட்டும் வேந்தனவன். சித்திரக்காரனின் ஓவிய அறிவால், அய்யனார் கையை அலங்கரிக்கும் அரிவாள். வாடிக்கையாளர் தாகத்தை தணிக்கும் இளநீர் விற்பவனின் கை அரிவாள். இந்த இளநீர் விற்பவனால் மிதிப்பட்டு மிதிப்பட்டு, காய்களை சுமந்து, சுமந்து ஓடாய் தேய்ந்துப் போகிறது துவிச் சக்கர வண்டி. இக்காட்சியை வேடிக்கை பார்க்கிறது தினம் இளநீர் மண்டி. மிதிவண்டி நகர்ந்தபோதும் அவனது வாழ்க்கையானது நகர மறுக்கிறது.

ஊராரின் தாகம் தீர்ந்தபோதும் அவனது தாகம் தீராமல் இருக்கிறது. காலச்சக்கரம் மட்டும் தவறாமல் சுழல்கிறது.

மிதிவண்டியில் விற்பனை நகரவேயில்லை வாழ்க்கை தீராத தாகத்துடன் இளநீர் விற்பவன். -முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்.

*Sales on a bicycle*
*Life never crawls with an unquenchable thirst the tender coconut hawker...*
*-Dr.K.N.Kalyanasundaram.*
@@@@@@@@@

2.கவிஞர் முனைவர் வே.புகழேந்தி *No.47, Vivek Mansion, Vijay Vittal Nagar, Near Madhusudan Hospital, SIRUGUPPA - 583 121. Bellary District, Karnataka Cell: 97393 55307 email: pugazhendhiv2011@gmail.com*

*"There is no tool for development more effective than the empowerment of women." -Kofi Annan*

"பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு அபிவிருத்தி அடையாது." -ஜவஹர்லால் நேரு.

கொடிது, கொடிது; பாலினபேதம் பாவித்தல் கொடிது அதனினும் கொடிது கருவில் பாலினம் அறிந்து சிசுவினை வதைக்கும் அநாகரீக வழக்கம் கொடிது பெண் சிசுவின் கொலைகள் ஆகவேண்டும் அரிது கல்வி அறிவுடன் அனைவரையும் நேசிக்கும் பண்பையும், பிறர்க்கு உதவிடும் குணத்தையும, இனிக்கப் பேசிடும் இயல்பையும் போதித்து அவர்தனை வளர்த்தல் மேலானது.

குழந்தைகளை பாலின பேதம் பாராமல் நடத்துதல், குடும்ப உறுப்பினர் அனைவரின் கடமையாகும். குடும்பத்தின் குத்து விளக்காம் மருமகளை, 'இம்முறையும் பெண்தானா?' என்னும் கூராயுதத்தால் குத்தி கிழிக்காமல் அன்புடன் நடத்தி, பெண் குழந்தைகளையே வரிசையாய் பெற்றெடுப்பதற்காக அவளைக் குத்திக் காட்டாமல், ஏளனமாய்ப் பேசாமல் கனிவுடன் கலந்து ஆலோசித்தல் அத்தையரின் கடமை மட்டுமல்ல, மத்த அனைவரின் கடமையும் ஆகும். மகப்பேறு மருத்துவ மனைகளில் அடிக்கடி பிறந்து மடிகின்றன 'இம்முறையும் பெண்தானா?" என்னும் கொடிய வினாக்கள். -முனைவர் வே.புகழேந்தி.

*It often takes birth and dies in maternity hospitals the deadly question of "Baby girl... again this time..?" -Dr..V.Pugazhendhi.*
@@@@@@@@@

கவிஞர் கொள்ளிடம் காமராஜ் "ஸ்ரீசத்ய சாய் இல்லம்." 51, ராஜா நகர் பிக்சாண்டவர் கோவில் - அஞ்சல். நெ.1.டோல்கேட், திருச்சிராப்பள்ளி - 621 216. *"The world is a book and those who do not travel, read only one page." -Augustine of Hippo*

புத்தகங்கள் என்பது வெறும் தாளும் மையும் மட்டுமல்ல... அதற்குள் எழுதியவனின் ஆன்மா இருக்கிறது. செடியில் வேருக்கும் விழுதுக்கும் உள்ள தொடர்பு போன்றது புத்தகங்களுக்கும் வாசிப்பவனுக்கும் உள்ள தொடர்பு. -muththamizh.in.net.

விலைமதிப்பற்ற நூல்களை, விலை கொடுத்து வாங்கிப் படிப்பதன் வாயிலாக எழுத்தாளர்கள், கவிஞர்களின் ஏற்றமிகு வாழ்வுக்கு வழி வகுப்போம். அடிக்கடி மேற்கொள்ளும் பயணங்களின் துணையாக அவற்றை அரவணைப்போம். புத்தகங்களை படிக்க நூல்நிலையம் செல்லும் பழக்கத்தைப் புதுப்பித்துக் கொள்வோம்.

பயண அனுபவங்களை விவரிக்கும் நூல்கள் அல்லது கட்டுரைகள் நம்மை வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லும். நெடுந்தூர தொடருந்து பயணத்தில் சன்னல் இருக்கை கிடைக்கப் பெற்றவன் பாக்கியவான் ஆவான். இயற்கைக் காட்சிகளை இடையூறின்றி கண்டு களிக்கவும், படிக்க நேரமுண்டோ, இல்லையோ, எங்குச் சென்றாலும் கையிலோர் புத்தகம் எடுத்துச் செல்வீர் தோழர்களே. புத்தகத்தைப் போன்ற சிறப்பான நண்பனை எங்கும் காண்பதரிது. பயணத்தின்பொழுது படியுங்கள். ஹேர் கட்டிங் சலூன்களில் படியுங்கள்.

அடிக்கடி மேற்கொள்கிறேன் தொடருந்துப் பயணம் அவை சோர்வளிக்காததன் காரணம் புத்தக வாசிப்பில் முழுகவனம்..! -கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்.

*I often undertake train journeys The reason why they don't tire me is full attention is focussed on reading books. -Kavicharal Kollidam Kamaraj.*

ஆம்..! வாசகர்களே..! இம் மூன்று கவிஞர்களின் "தன்முனைக் கவிதைகளும் அவர்களின் தன்முனைக் கவிதைகளுக்கான பகுப்பாய்வு விமரிசனங்களைப் போன்று மீதமுள்ள 59 கவிஞர்களின் தன்முனைக் கவிதைகளும் அவற்றிற்கான மிகச் சிறப்பானப் பகுப்பாய்வு விமரிசனங்கள் "ஆங்கிலம், இந்தி, கன்னடம்" எனும் மும்மொழிகளால் நன்முறையில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது. வாங்கிப் படியுங்கள். கண்டிப்பாக அறுசுவை இலக்கிய விருந்துண்டு மகிழ்வீர்கள். ஆகச் சிறந்த இத் தன்முனைக் கவித்தொகுப்புப் பகுப்பாய்வு நூலுக்கு நன்முறையில் தத்தம் பங்களிப்பை நல்கிய ஒவ்வொரு இலக்கிய ஆளுமைக்கும் நன்றி கலந்த என் இதயப்பூர்வ நல்வாழ்த்துகள்..!

**-கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ், திருச்சிராப்பள்ளி - 621 216.**




## "இனியொரு சுதந்திரம் வேண்டும்"

இனியொரு சுதந்திரம்
வேண்டும்!
இரத்தம் சிந்தாத
புரட்சியாய்... இறுக்கம்
இல்லாத மூச்சாய்...
இமைப்பொழுதும் பயமின்றி
வாழ்வதாய்... இனியொரு
சுதந்திரம் வேண்டும்!

சங்கிலிகள் காணாமல்
போனாலும் சிந்தனைகள்
இன்னும் கட்டுக்குள்ளேயே!
அதைக் களைவதே கனவு,
அதற்காகத்தான் இந்த
விடிவு!

சொல்லும் உரிமை
சுருங்காத சோலைகள்
விரியட்டும்! சிந்திக்கும்
மனம் சுவர் தாண்டி
சிறகு விரித்துப்
பறக்கட்டும்!

பசியின் பிடியில்
கதறும் குழந்தையும்
கற்கும் நாளே
உண்மைச் சுதந்திரம்!


மண்ணின் மணமும்
மனிதன் மனமும்
மாசில்லாது மலர்ந்திட...
மதம், மொழி, நிறம் எல்லாம்
மனித நேயத்தில்
கரைந்திட....

கை கோர்த்து நடக்கும்
காலம் வேண்டும்
கை குலுக்கி வாழும் நாளே
உண்மைச் சுதந்திரம்!

இனியொரு சுதந்திரம்
வேண்டும்... கொடி ஏற்றும்
நாளுக்காக அல்ல,
கொள்கை
உயர்த்தும்
நாளுக்காக!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## சித்திரை நிலவே

சித்திரை நிலவே சித்திரை
நிலவே நிம்மதி தந்து சாந்தி
மலரவே...

சிலிர்க்கும் இரவில் அழகாக
ஒளிந்தாய் சிதைந்த
மனங்களின் சோகம்
போக்கினாய்

பாவங்கள் எல்லாம் நிழலாய்
தொடரவே... சிவமான
ஒளியில் ஆன்மாவை
நனையவே...

சிறு தவறுகள் காற்றோடு
போகவே... சிந்தையின்
ஆழம் தெளிவாகத்
தெரியவே...

சிறகுகள் இன்றி கனவுகள்
பறக்கவே... சிங்கார
வாழ்வு செம்மையாக
மலரவே...

சித்திரை நிலவே
சித்திரை நிலவே...
சித்திரை ஒளியில் புதிதாய்
எழுவாய்...
சீரான
வாழ்வு
இனிமையாய்
தருவாய்



**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## நான் அவனில்லை !

காலை எழுகிறீர்கள்...
நடைப்பயிற்சி உடற்பயிற்சி...

தன் மனைவி, மகள்
மட்டுமன்றி... அண்டை
வீட்டாரிடமும் காலை
வணக்கம் சொல்லுதல்....

செய்தித்தாள் படித்தல்...
மகளின் படிப்பை பற்றி
கேட்டறிதல்...
சமையலறையில் மனைவிக்கு
ஒத்தாசை செய்தல்...
எல்லாம் இனிதாய் நடந்து
கொண்டுதான் இருந்தது....
உங்களிடம் ஒரு கைப்பேசி
வரும்வரை...
இப்போது உங்கள் கையில்
கைபேசி மட்டுமே...
இப்போது நீங்கள் முன்பிருந்த
மனிதரே இல்லை !
காலை வணக்கம்
கைபேசியில், உடற்பயிற்சியை
பார்த்து ரசிப்பது கைபேசியில்,
மகளிடம் படிப்பை பற்றி
கேட்பதும், மனைவியிடம்
விசாரிப்பதும்
கைபேசியில்...
எல்லாம் மாற்றி
விடுகிறது ஒரு
கைபேசி !



**எம்.பி. தினேஷ்.**
கோவை


## தீமையைச் செய்தால் திருத்து!

நேரிசை வெண்பா!

நன்மைக்(கு) எதிராய்
நலஞ்செய்யாத்தன்மைத்தே
நன்மையென்ற போர்வையில்
நஞ்சுபோல்...
புன்மைத்தே!
தீமைகளைக்கண்டிப்போம்
தேரா திருப்பாரின்
தீமையைச்செய்தால்
திருத்து!

தீமைசெய்ய அஞ்சிடுவோம்
தேர்ந்தேநாம்
வாழ்ந்திடுவோம்
சேமமாய்ச் சூழ்ந்திடுவோம்
சேர்ந்தேதான்.. ஆமைபோல்
ஏமப் புணையாக
ஏற்றமாய்க்காண்பமே
தீமையைச் செய்தால்
திருத்து!

**முனைவர் இராம.வேதநாயகம்.**



## சுபநிகழ்ச்சிகள்....

மாதம்... ஆண்டு...என
உறவுகள் புதுப்பித்துக்
கொண்ட... தமிழினம்..

இப்போது முகம்
பார்த்துக் கொள்வது...
சுபநிகழ்ச்சிகளில் தான்....

வயிற்றில் குழந்தை
ஆணா? பெண்ணா?...என
பரிதவிக்கும்...தாயினைப்
போல அல்லாடிக்கொண்டு
இருக்கின்றன... அரசியல்
கட்சிகள்..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



பிறக்கும் போது தனியாக
தான் வந்தேன்—என்
மரணம் கூட தனியாக தான்
இருக்கப் போகிறது—ஆனால்
வாழும் போதாவது
உன்னோடு மட்டும்
வாழாத வாழ்க்கையெல்லாம்
வாழ பேராசையடி!

உன்னை நினைக்கும்
பொழுதுகளில் எல்லாம்
எனை மயங்க வைக்க
அந்த உறக்கம் ஏனோ
வருவதே இல்லை!

விலகியிருந்த போது தான்
கூடியிருந்ததன் அருமை
புரிந்தது விலகியிருந்த
விரக்தியின் நாட்களிலேயே
சிந்திக்க தொடங்கி விட்டேன்
உன்னை மீண்டும்
எப்போது சந்திப்பேன் என்று!

அளந்து பார்க்க ஆசையடி?
உன் பேரழகை!

வளைவான உன் இடுப்பழகை
உனக்கே தெரியாமல்
கண்டு இரசிக்கிறேன்
ஏண்டா அப்படி பார்க்குற என
அப்பாவியாய் கேட்கிறாய்
எப்படி சொல்வேனடி?
அளந்து பார்க்க என்று!

ஏண்டா அப்படி பார்க்குற
என்றாள் நீ பார்க்கணும்ன்னு
தான் அப்படி பார்க்குறேன்
என்றேன்!

இன்றைய மேகச்சூழல்
சற்றே சரியில்லை
மின்னல் வெட்டுமா?
இடி இடிக்குமா? மழை
வருமா?
என ஆயிரத்தெட்டு
கேள்விகளை கேட்டு
நண்பன் எனை
வறுத்தெடுத்தான்
அவள் வீதி வந்தால்
எல்லாமும் வருமென்றேன்!

காத்திருப்பவர்களுக்கே
காத்திருப்பின் வலி புரியும்
தவிக்க விடுபவர்களுக்கு
ஒரு போதும் புரியாது!

தேவதையொருத்தி
சுவாரஸ்யமான
கதையொன்றை கேட்டாள்
நான் காயப்பட்ட
சோகக்கதைகளை எல்லாம்
எப்படி சொல்ல?!

உன் துன்பத்தில் இன்பம்
காணும் நபர்களிடமெல்லாம்
ஒரு போதும் உன்
கவலைகளை கொட்டி தீர்த்து
ஆறுதல் தேடாதே!

ஏழு ஜென்மமும் போதாதடி
உன் பேரழகை இரசிக்க?!

கடவுளே இன்னும் ஆயிரம்
ஜென்மமாவது
கடனாக கொடு!

விலை கொடுத்து
வாங்க முடியுமா என்ன?

புன்னகை மட்டுமே சிந்தும்
உன் மௌனத்தின் அழகை!

உன் மீதான கிறக்கம்
இறங்காத வரை
எப்படி வரும் உறக்கம்?!

யாரிடமும் அதிகம் பழகாதே
அதிகம் பேசாதே
அதிகம் அன்பு வைக்காதே
மரியாதையை இழப்பாய்
மௌனமாய் இரு
எல்லோரிடமிருந்து சற்று
விலகியே இரு!



**லி.நௌஷாத் கான்**

யுகங்களின் பதிவுகளை
மீட்டெடுத்துக்
கொண்டிருந்தோம்
ஒரு முழு நிலவொளி நாளில்.

என் பரிசாய் ஒற்றை ரோஜா.
கூடவே படகும்.
பேசி முடித்ததும்
பயணத்திற்காய்.

முதல் வார்த்தை
இன்னும்
பேசப்படாமல்.. நம்
உதடுகளைப் பூட்டி
சாவியை கடல் கொண்டு
போனது.. திறக்க ஓர்
உபாயமுண்டெனச் சொல்லி.

ரகசிய வார்த்தையை
சொல்லிப் பார்க்கலாமா
இதழ்களைச் சேர்த்து..
வானமும் நிலவும் காத்துக்
கிடக்கின்றன
இது வரை எழுதப்படாத
அந்தக் கவிதைக்காய்.



**ரிஷபன்**

## கருணைமுரண்கள்

வற்றிட்ட மார்போடு வயிறு ஒட்டி
வாட்டுகின்ற பசியோடு குழந்தைக் காகப்
பெற்றவளோ பால்வாங்கக் கையை ஏந்த
பெருங்குரலில் வசைபாடித் துரத்தி விட்டு
நற்தெய்வப் பக்தியெனும் பெயரைத் தாங்கி
நன்கொடையின் புத்தகங்கள் கையில் ஏந்தி
பொற்சிலைக்குப் பால்முழுக்கு செய்வதற்கே
பொருள்கேட்டுச் செல்கின்றார் நேயம் மிக்கோர் !

வேண்டாதக் குப்பையெனத் தெருவின் ஓரம்
வீசிவிட்ட அனாதைசிசு பிச்சை கேட்டே
நீண்டகையை வெறுத்தேசித் துரத்தி விட்டு
நிறம்பலவாய் நன்கொடையின் புத்த கத்தைக்
காண்பவரின் முன்நீட்டி அனாதை யர்க்கே
கட்டுகின்றோம் இல்லமெனக் கனிவாய்க் கூறி
மூண்டெழுந்த இரக்கத்தின் பெயரைத் தாங்கி
முழுவேடம் போடுகின்றார் கருணை மிக்கோர் !

பட்டினியின் மயக்கமொடு பாதை யோரம்
பரிதாபக் கோலமுடன் பிச்சை கேட்டே
வட்டிலேந்தி இருப்போரைக் கண்ணால் பார்த்தும்
வாய்க்குணவு அளிக்காமல் வசைகள் பாடி
கொட்டுமழை போல்இரக்கப்பெயரைத்
தாங்கிக்கொடுக்கின்றோம் அன்னதானம்
என்று சொல்லிக் கட்டுகளாய்
நன்கொடையின் புத்தகங்கள்கரமேந்திச்
செல்கின்றார் அன்பு மிக்கோர் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## உயரம்

அகன்று பரந்து உயர்ந்த
அடர் நீல மலைகள்
அமைதியாகப்
பணியாற்றுகின்றன,
கார் மேகத்தை உசுப்பியும்
மழை நீர் வடித்தும்
மரங்களைப் பாதுகாத்தும்
மாயப் புல்வெளிகளை
இடையிடையே
அமைத்தும்!
தாமிருப்பதை
சற்றும் பறை
சாற்றாமல்!



**கே. பி. ஜனார்த்தனன்**




## தாய் மொழி போற்றுக!

தாய் தமிழ்
பயின்றிடுவோம் பிழையின்றி!
பேசுவோம் நழுவலின்றி!
எழுதுவோம் வழுவின்றி!


பயனுற கற்போம்
பல மொழி
நயம்பட பயில்வோம்
நலமாய் பேசுவோம்

தாய் மொழி போற்றுவோம்!
தமிழில் பேசும்
வழமை காப்போம்!

எம் மொழியும்
சம்மதம்;
எனினும் நம்
மொழி; தமிழ்
தாய் மொழி;
தமிழ்



**சசிகலா விஸ்வநாதன்**



## கத்திரி வெயில்

இயற்கையின் நியதி

வெட்டப்பட்ட மரங்களின்
உள்ளச் சூடு
கொட்டுகிற நீரில்
வெளியாகும்

பருவ கால மாற்றத்தில்
தாங்க முடியாத்
தகிக்கும் வெயில்

குடிக்கின்ற தண்ணீரும்
தென்னை தரும் இளநீரும்
இதமாய் உள்ளிறங்கும்

சுழலும் மின்விசிறியும்
சுற்றி வரும் காற்றும்
போட்டியிட்டுத் தோற்றுவிட
சூரியன் பிரசவிக்கும்
சூட்டில் சுதந்திரமாய்
வியர்வை ஊற்றெடுக்கும்

கம்பங்கூழும் மோர்
மிளகாயும் அமிர்தமாய்
மாறிப் போகும் தேநீர் பெற்ற
விடுமுறையில்
தேகம் முழுதும் சூடாகும்

முத்திரை பதிக்கும்
கத்திரி வெயில் முழுவதுமாய்
நம்மை மாற்றி விடும்


நித்திரை மறந்து
கதிரவனும் நித்தமும்
வானில் உலா வரும்

வீசும் குப்பை பிரித்தெடுத்து
தூசை நாமும் குறைத்து
விட்டு வெட்டும் மரங்கள்
நிறுத்தி பசுமை போற்ற
முயன்றிடுவோம்

காலத்தை
நாமும்
தூற்றாது
கடமையாய்
மரத்தை
வைத்திடுவோம்.



**தமிழ்நிலா**



## ஆத்திச்சூடி தன்முனைக் கவிதைகள்

1. அறம் செய்ய விரும்பு
*********
திரும்பத் திரும்பக் காத்திடும்/
விரும்பிச் செய்திடும் தர்மம்/
விளம்பரம் வேண்டி
வழங்குவோர்/
வள்ளல் ஆவதோ கடினம்/
*********
2. ஆறுவது சினம்
*********
சினம் தணிந்து
சிந்திக்கிறான்/ தனிமையில்
மனம் வருந்துகிறான்/
பிரிந்தனர் அண்ணன்
தம்பிகள்/ எதிரே குறுக்கு
நெடுக்கு கம்பிகள்./
********
3. இயல்வது கரவேல்
*********
யாசித்து வரும்
உள்ளங்களுக்கு/
யோசித்து வழங்கினாலும்
தேவலை/ பொருளை
மறைத்து விரட்டினால் /
இறையருளை இழப்பாய்
மானிடனே!/
*********
4. ஈவது விலக்கேல்
*********
அறம் செய்ய விரும்புபவனை/
புறம் கூறி தடுத்தல் பாவம்/
பொருளின்றி புரியும்
தர்மமெது?/ பிறர் தானத்தைத்
தடுக்காதது./
*********
5. உடையது விளம்பேல்
**********
ஊடகங்களுக்கு
அளிக்கிறான் பேட்டி/
தன் முதுகைத் தானே தட்டி/
ஔவையாரின் ஐந்தாம்
ஆத்திச்சூடி/ நினைவு கூறுதல்
நலம் அடிக்கடி/
*********
6. ஊக்கமது கைவிடேல்
*********
இரண்டு நாட்களில்
வெளி வருகிறான்
இடிபாடுகளில்
சிக்கியவன்/ சரிந்து
விழுந்த கட்டடம்/
சரியவில்லை அவன்
மனவுறுதி/
*********
7. எண் எழுத்து இகழேல்
*********
கணித இலக்கியத்தைப்
பயில்வது/ பள்ளிப் பருவத்தில்
ஏற்புடையது/ எண்ணும்
எழுத்தும் நயனங்கள்/
என்னும் உறுதி
கொள்ளுங்கள்/
**********
8. ஏற்பது இகழ்ச்சி
*********
யாசகனின் பாத்திரம்
நிறைவதில்லை/
மனிதர்களாலும்
மழைகளாலும்/
'ஏற்பதனால் என்றென்றும்
இகழ்ச்சி'/ ஏற்பதனால்
இதனை, உனக்கு மகிழ்ச்சி/.
********
9. ஐயம் இட்டு உண்
**********
பிச்சை, பிரசாதம்,
அன்னதானம்/
எதுவாயினும் ஈதலே
பிரதானம்/ பகிர்ந்தளித்த பின்
புசித்தல்/ பரமாத்மா நீயாகிட
வழிவகுக்கும்
*********
10. ஒப்புரவு ஒழுகு
*********
ஊரோடு ஒத்துப் போதல்/
வேரோடு பகைக் களைய
உரமிடும்/ உலக நடையறிந்து
நடந்தால்/ இயற்கையும்
உன்னுடன் உடன்படும்/
*********
11. ஓதுவது ஒழியேல்
*********
கண்டதைப் படித்து
பண்டிதனானேன்/
ஓயாமல் ஒழியாமல்
ஓதுகிறேன்/ வாசித்தலும்,
வாசித்ததைச் சுவாசித்தலும்/
வாசக சாலையின்
வாடிக்கைகள் தானே?/
**********
12. ஔவியம் பேசேல்.
*********
உள்ளத்தில் கள்ளமின்றி
உறவாடி/ அமுதத் தமிழில்
உரையாடுவோம்/
அழுக்காறு இன்றியே
மனந்திறந்து/
அளவளாவுதல் தமிழன்
பண்பன்றோ?/



**முனைவர் வே. புகழேந்தி,**
பெங்களூரு.

காய் கனிந்தால்தான் ருசி இருக்கும்
கண்ணி மலந்தால்தான் மகிமை இருக்கும்

கண்ணும் கண்ணும் பேசும்போதுதான் காதல் வளரும்
உடல் சேரும்போதுதான் உயிர் பிறக்கும்

தேவையான கனி ருசிக்கும்போது திரவியமா
இனிக்கும்
என் பிள்ளை ருசிக்கும்போது தேனா இனிக்கும்

பினையாய் பின்னியிருக்க பிரியா விடை பெற்று
வெள்ளையன் வெளியேற வீர மகன் பிறப்பானோ
விடியலை தருவானோ...!!



**பொன்.கருணா.** நவி மும்பை



## பாவேந்தர் புகழ்பரப்ப இன்றே வாரும்!


தீப்போலே வந்தவர்தான் பாவின் வேந்தர்
தீந்தமிழால் உணர்வுகளை ஊட்டும் ஏந்தல்
பாப்புனையும் ஆற்றலாலே உலகை ஈர்த்தார்
பாடாத பொருளில்லை; புகழை வார்த்தார்
பூப்போலே மணம்கூட்டும் அவரின் பாட்டு
புரியாத பகைவர்க்கோ வரிகள் வேட்டு
காப்போலே அடர்ந்தபல கருத்துச் சொன்னார்
காலத்தால் அழியாமல் கதிராய் நின்றார்!

மானுடத்தின் பெருமைகளை உரக்கச் சொல்வோம்
மாற்றங்கள் விதைத்திடவே விதைகள் செய்வோம்
ஊனுடம்பைக் காத்தலொன்றா வாழ்க்கை ஆகும்
உள்ளத்தின் உறுதியன்றோ உந்தும் நம்மை
தானுண்டு தன்னலத்தால் சுருங்க வேண்டாம்
தரணிக்கே வழிகாட்டும் பார்வை வேண்டும்
தேனுண்ட சுவையின்போல் நாவில் கொஞ்சும்
தேற்றிவிடும் பாடல்கள் அடைவோம் தஞ்சம்

நம்பிக்கை கொண்டிங்கே வாழ்வோம் நாமே
நாளெல்லாம் புத்தெழுச்சி கொள்வோம் நாமே
வெம்பித்தான் வாழாமல் வெற்றி கொள்ள
வெல்லுகின்ற சூத்திரத்தை விரைவில் கற்போம்
தும்பிக்கை ஆனைப்போல் தூணாய் நிற்க
துவளாமல் உழைப்பாலே உச்சம் செல்வோம்
நம்பிடுவோம் தமிழாலே மேன்மை சேரும்
நம்பாவேந்தர் புகழ்பரப்ப இன்றே வாரும்!



**கவிஞர் மு.வா.பாலாஜி, ஒசூர்.**


























## ATTENTION

## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

## ஆட்கள் தேவை

**ஆண்கள் மட்டும்**

வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**


தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**

தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com










GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
1. முன்பணம் ₹ 1,00,000/-
2. 50% பணம் செலுத்தினால் பத்திரப்பதிவு செய்யப்படும்.
3. மாதம் குறைந்தபட்சம் ₹.2500/- முதல் செலுத்தலாம்
4. முழு தொகையும் செலுத்திய பின்பு உரிய நபரிடம் பத்திரம் ஒப்படைக்கப்படும்.
5. பத்திரப்பதிவு
6. பட்டா COPY
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
அரக்கோணம் பாராஞ்சி
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெனிமுக்கு வுரனன்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379

ADVERTISE WITH US
7789941009

ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services (Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services (Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply (Skilled & Unskilled Stafffor Industries, Apartments, Offices
WHY CHOOSE US?
- Experienced & Professional Team
- 24/7 Reliable Support
- Affordable & Transparent Pricing
- Customized Service Plans

ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1, Moovarasampet Main Road, Madipakkam, Chennai-600091.
+91 93632 98980 ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com

WANTED
ஆட்கள் தேவை
சமையல் வீட்டுவேலை
குழந்தை நோயாளி
தங்கி தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families

உ முருகன் துணை
A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are HIRING
PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS: THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81

Sanjay Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennal  Real Choice Chennal  Real Choice Chennal

THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit /No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

எலாவூர் மிக அருகில் சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997

# WANTED
- சமையல்
- வீட்டுவேலை
- குழந்தை பராமரிப்பு
- நோயாளி கவனிக்க உண
- இடம் (Accomodation/Place)
- சென்னை

தொடர்புக்கு: 9380476241 / 9790766391

---

# ADVERTISE WITH US

CONTACT US
9438610756

---

## WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889

---

Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

---

# டீலர்கள் தேவை
## மைலேஜ் பூஸ்டர்
## 20% ~ 30%

2

மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33

போன் 63746 73041

---

Seek Strive Succeed

## Annai Violet Arts & Science College

(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)

Key Features
- Modern Infrastructure | Extensive Library
- Expert Faculty | Result-Oriented Curriculum
- Well-Equipped Labs | Competitive Exam Preparation
- Sports & Skill Development | English Training
- Prime Location | Strong Security
- Seminar Hall | Personalized Student Support
- Inter-College Competitions | Scholarships
- Counseling & Mentoring | Industrial Visits
- Interactive Learning | Strong Placement Support
- Community Radio Station

Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate

BANK LOAN AVAILABLE

Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College

Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students

UG & PG COURSES

SHIFT I
- B.C.A
- B.B.A
- B.Sc COMPUTER SCIENCE
- B.Sc BIOCHEMISTRY
- B.Sc MICROBIOLOGY
- B.A TAMIL
- B.A ENGLISH
- B.A ECONOMICS
- B.COM (GENERAL)
- B.COM (ACCOUNTING & FINANCE)
- B.COM (CORP. SECRETARYSHIP)
- M.A ENGLISH
- M.COM
- M.Sc BIOCHEMISTRY

SHIFT II
- B.Com (GENERAL)
- B.Com (ISM)
- B.Sc PHYSICS
- B.Sc CHEMISTRY
- B.Sc COMPUTER SCIENCE
- B.Sc VISUAL COMMUNICATION
- M.Sc COMPUTER SCIENCE
- M.Sc MICROBIOLOGY

CERTIFICATE COURSE
- DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT)
- CERTIFICATE COURSE IN MEDICAL CODING
- PHOTOSHOP • COREL DRAW • TALLY PRIME

UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE

ADMISSIONS OPEN

Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in | www.violetcollege.in

---

## keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

---

# நிலம் தேவை
## தெற்கு சென்னை

திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு

1 to 2 ஏக்கர்

தொடர்புக்கு:
Ph. 6384617773

---

துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce

நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.

பொது மேலாளர்:
7092069555 / 7092047555

---

# WANTED
## FEMALE TELECALLER

- EXP : FRESH / EXPERIENCED
- SKILL : GOOD COMMUNICATION SKILL
- LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
- AGE : 18 YRS -60 YRS
- SALARY – 10,000 & ABOVE
- LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE

PadmaMedia House
Call/Whatsapp
94386 10756

---

# WANTED:
## செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107

Call now for more details and interview.

APPLY NOW

---

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business

Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 | +91 96770 88843
info@sevenstarslogistics.com | www.sevenstarslogistics.com

---

SUN SHINE PROPERTY ™
(Property & Developers)

லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை

மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft

முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

---

# EMI 50%
50% OFFER
PLOT FOR SALE

SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை

SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.

OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.

CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

---

PLOTS FOR SALE
SRI DEVELOPERS

மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை

EMI Available | BANK LOAN Available

CONTACT: 8220711499, 8870158259

---

# PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில் வீட்டு மனைகள் விற்பனைக்கு

BANK LOAN AVAILABLE

Contact: 9841495210

---

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை

## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com

---

# WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM

CALL US
7550093245 / 7358696451

---

# WANTED
## OFFICE BOY

GUINDY

CALL US
7550093245 / 7358696451

---

# WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN

EGMORE, MOUNT ROAD


CALL US
7550093245 / 7358696451

---

# WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106



# பல்சுவை களஞ்சியம்




# கிழக்கே போகும் ரயில்




என்னடா இது பாரதிராஜா படத்தின் தலைப்பா என்று யோசிக்கிறீர்களா?
ஆம் உங்களுக்கு அறிமுமான ஒரு ரயில் வண்டி பற்றிய சுவாரஸ்யமான வரலாறுதான் இந்த கிழக்கே போகும் ரயில் கட்டுரை . நீங்கள் அனைவரும் இந்த ரயிலை ஒரு முறையாவது பார்த்து இருப்பீர்கள் , திரைப்படத்தில். நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் தங்களின் திரைப் பயணத்தில் 100-வது படம் ஒரு கனவு படமாக இருக்கும். நடிகர் கமலுக்கு ராஜபார்வை. ரஜினிக்கு ராகவேந்திரா, பிரபுவுக்கு ராஜகுமாரன் வரிசையில் விஜயகாந்த்க்கு நூறாவது படமாக கேப்டன் பிரபாகரன் அமைந்தது. ஆம், புரட்சிக் கலைஞர் விஜயகாந்த்தை கேப்டன் என அவருக்கான அடையாள அடை மொழி. அதற்கு காரணம் இதர நடிகர்கள் பலருக்கும் அவர்களின் நூறாவது படங்களை விட கேப்டன் விஜயகாந்த்தின் நூறாவது படம் வெற்றிகரமான வெள்ளி விழா கண்ட படத்தை உங்களில் பலரும் பார்த்து இருப்பீர்கள். ஆம், சந்தனக் கடத்தல் வீரபத்திரனை பிடிக்க சத்தியமங்கலம் செல்கிறேன் என கிளம்பும் விஜயகாந்த்தை வீரபத்திரன் மன்சூரலிகான் ஆட்கள் வரும் வழியிலேயே தீர்த்துக் கட்ட கிளம்பி வருவார்கள். ரயில் வண்டியில் வரும் வழியிலேயே அதிரடி சரவெடி சண்டை காட்சியில் புகுந்து விளையாடுவார் கேப்டன் விஜயகாந்த்.வைகை நதியை கடந்து செல்லும் ரயில் வண்டி சண்டை அத்தனை பிரபலம். ஆம் அந்த ரயில்தான் தேனி மாவட்டம் போடியில் இருந்து மதுரை வழியாக சென்னை செல்லும் ரயில்.

விஜயகாந்த் நடித்த நூறாவது படமான கேப்டன் பிரபாகரன் சூப்பர் ஹிட்டாக அமைந்திட அடுத்து அவருடைய 125 -வது படமான "உளவுத்துறை ' படத்திலும் இந்த ரயில் வண்டி இடம் பெறும். பாலாவின் பிதாமகன் படத்தில் நடிகை லைலாவுடன் நடிகர் சூர்யா, மனோபாலா, கருணாஸ் கூட்டணி வரும் கன்னடத்து பைங்கிளி சரோஜா தேவியின் சோப்பு டப்பா பரிசு காமெடி காட்சிகளும் இந்த ரயில் வண்டியில்தான்.

200 வருடங்களுக்கு மேலாக இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் பல நவீன விஷயங்களை இந்தியாவில் அறிமுகம் செய்து வைத்தார்கள். இதோ யுனோஸ்கோ பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக அறிவித்துள்ள ஊட்டி மலை ரயில் வண்டி ஆங்கிலேயர்கள் காலத்தில், அவர்கள் இந்தியாவின் தட்ப வெப்ப சூழலை தாங்க முடியாமல் அவர்களின் வசதிக்கேற்ப தங்கும் வசதிக்காகவே உதகை மலை ரயிலும் உதக மண்டலத்தையும் தயார் செய்தனர். அதே போல்தான் மதுரை முதல் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள போடி வரை தேனி வழியாக அமைக்கப்பட்ட இந்த ரயில் பாதையும். வாஸ்கோடகாமா கடல் வழியாக கேரளத்தின் கோழிக்கோட்டில் வந்து இறங்கியது வரலாறு .மேற்கு தொடர்ச்சி மலையில் விளைந்த மிளகு மற்றும் ஏலக்காயை தங்களின் நாட்டிற்கு எடுத்து செல்ல வேண்டும் என்பதற்காகவே வாஸ்கோடகாமா வந்தார். ஆம் அந்த வகையில் ஆங்கிலேயர்களும் தங்களின் தேவைக்கு மேற்கு தொடர்ச்சி மலையில் விளைந்த மிளகு ஏலக்காயை எளிதாக தங்கள் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற காரணத்தினாமாகவே இந்த போடி முதல் தேனி வழியாக மதுரை வந்து சென்னையை அடைந்து கடல் வழியே ஏற்றுமதி செய்தனர். ஆம் அதற்காகவே மதுரையில் இருந்து தேனி மாவட்டம் செல்லும் வழியில் ஒரு குன்றினை குடைந்து ரயில் பாதை அமைத்து இருப்பார்கள் ஆங்கிலேயர்கள். மேற்கு தொடர்ச்சி மலையில் விளையும் ஏலக்காயை போடி கொண்டு வந்து சேர்க்கும் நடைமுறை இன்று வரை உள்ளது.சில வருடங்களுக்கு முன்பு வெளியான மேற்கு தொடர்ச்சி மலை திரைப்படம் கூட மலையுச்சியில் இருந்து ஏலக்காயை போடி வரை கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பே கதையாக இருக்கும். 1996-ம் ஆண்டிற்கு முன்பு வரை தேனி மாவட்டம் மதுரை மாவட்டத்துடன் ஒருங்கிணைந்த மாவட்டமாகவே இருந்து வந்தது. ஆங்கிலேயர் காலத்து போடி முதல் மதுரை ரயில் வண்டி காலையில் பத்து மணி சுமாருக்கு போடி வரை வந்து ஏலக்காயையும் பயணிகளையும் ஏற்றிக் கொண்டு மதியத்திற்கு மேல் திரும்பிச் செல்லும்.வரும் போதும் திரும்பிச் செல்லும் போதும் ரயில் வண்டியில் இருந்து எழுப்பப்படும் ஒலியே அன்றைய காலகட்டத்தில் தோட்டத்தில் வேலை செய்வோருக்கு மணி சொல்லும் சப்தம். இன்று தேனி மாவட்டம் என தனி மாவட்டமாக இருக்கும் நிலையில் தேனி மாவட்டத்தில் உள்ள மிகவும் பழமையான பாரம்பரியமான ஒரு கல்லூரிதான் CPA COLLEGE.ஆம் Cardamom Planters' Association எனப்படும் ஏலக்காய் பயிரிடுவோர் சங்கத்தின் கல்லூரி தான் இந்த கல்லூரி. ஆம் ,ஆங்கிலேயர்கள் காலத்தில் இருந்து வந்த ஏலக்காய் பயிரிடுதல் மற்றும் அறுவடை இன்று வரை உள்ளது.'எம்டன் மகன்', 'வெண்ணிலா கபடி குழு', 'நான் மகான் அல்ல', 'பாண்டிய நாடு' உள்ளிட்ட படங்களின் வசனகர்த்தாவும், 'அழகர்சாமியின் குதிரை' திரைப்படத்தின் கதாசிரியர் 'வடக்கன்' என்ற பெயரில் எடுக்கப்பட்டு 'ரயில்' ஆகி திரையரங்குகளில் ஓடிய திரைப்படம் மூலம் இயக்குநரான பாஸ்கர் சக்தி இந்த CPA கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படித்த மாணவர்தான்.
ஆங்கிலேயர்கள் காலத்தில் இருந்து கடந்த 2012 -ம் ஆண்டு மீட்டர் கேஜ் ரயில் பாதையாக இருந்து வந்த இந்த ரயில் பாதை இப்போது அகல ரயில் பாதையாக மாற்றம் செய்யப்பட்டு போடியில் இருந்து சென்னை வரை செல்லும் பயணிகள் ரயில் வண்டியாக ஓடுகிறது.

இதோ இன்று நாம் அனைவரும் தேனி நகரின் பெயரை ஆங்கிலத்தில் எழுத THENI என எழுதி வருகிறோம். ஆனால் தேனி ரயில் நிலைய வளாக பெயர் பலகையில் ஆங்கிலேயர்கள் எழுதிச் சென்ற TENI என்றே இன்றும் இருக்கிறது ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற அடையாளமாக.
Tail Peace: ரயில் RAIL என்றால் அது பலரும் தொடர் வண்டி என்றே நினைப்பார்கள். இல்லை. ரயில் என்றால் ட்ரெயின் TRAIN எனும் தொடர் வண்டி ஓடும் இரும்பு அமைக்கப்பட்ட தண்டவாளமே ஆகும். ரயில் எப்போ வரும் என்று கேட்போர் ஒரு நிமிடம் யோசித்து பாருங்கள் தரையில் கிடக்கும் தண்டவாளம் எழும்பி வந்தால் எப்படி இருக்கும்! ரயில் அங்கேதான் இருக்கும் ட்ரெயின் தான் அதன் சென்று வரும்.

# பீமன் ரெடியாகிவிட்டார்....

ஐயா ரெடிஆகிட்டாரு..
பீமன் ரெடியாகி விட்டார்
இவரு திருவீதி உலாவுக்கு வெளியேவந்துட்டா தேரோட சக்கரம் உருல ரெடி ஆகிட்டுதா அர்த்தம்...
திருநெல்வேலி ஆனிப்பெருந்திருவிழாவில் பிரம்மாண்ட திருமேனியா ஒரு மரச்சிற்பம் தேர் வீதிகளில் காலையில் உலா வருகிறதே? அவர் யார் என்ற கேள்வி நம் அனைவர் மத்தியிலும் உள்ளது தானே?
அவரை திருநெல்வேலி மக்கள் பீமன், வீமன் என்றெல்லாம் அழைக்கிறார்கள். திருநெல்வேலியில் பிரம்மாண்ட திருமேனியா பீமன் உலா வருவதற்கு காரணமா மகாபாரதத்துடன் தொடர்புடைய ஒரு செவிவழிக் கதை கூறப்பட்டு வருகிறது.
அதென்ன செவிவழிக் கதை?

*முற்காலத்தில் (மகாபாரத காலம்) பஞ்சபாண்டவர்கள் எல்லாம் வனவாசம் சென்ற காலத்தில், பாரதத்தின் தென்கோடியில் உள்ள மூங்கில் மரங்கள் அடர்ந்த வனப்பகுதியான திருநெல்வேலி பக்கம் வந்ததாகவும், அப்போது இங்குள்ள சுவாமி நெல்லையப்பர் பீமனுக்கு அருள்புரிஞ்சதாகவும், அதற்கு நன்றிக்கடனா பீமன் தான் திருநெல்வேலி ஆனிப்பெருந்திருவிழாவை முன் நின்று நடத்தி வைத்ததாகவும், அதன் அடிப்படையில் தான் பீமனின் பிரம்மாண்ட திருமேனி ஆனிப்பெருந்திருவிழாவில் உலா வருவதாகவும் செவிவழிக் கதை ஒன்று கூறப்பட்டு வருகிறது. இது செவிவழிக் கதை என்றால் அப்போ உண்மையில் இவர் யார்? அப்படிங்கிற கேள்வி நமக்கெல்லாம் வருமே? சரிதானே!

இந்த பிரம்மாண்ட திருமேனி உண்மையில் ஏகாதச ருத்திரர்களுள் ஒருவரான பீமருத்திரர் ஆவார்.

யாறிந்த பீமருத்திரர்?

சிவபுராணங்களில், பிரபஞ்சத்தைப் படைப்பதற்கு பிரம்மனுக்கு உதவியாக இருப்பதற்காக சிவபெருமான், பிரம்மாவின் நெற்றியிலிருந்து பதினொறு பேர்களை படைத்ததாக கூறப்படுகிறது. இவ்வாறு தோன்றியவர்கள் "ஏகாதச ருத்திரர்கள்" ஆவார்கள். ஏகாதச ருத்திரர்கள் பதினொரு பேர்களில் பீமருத்திரரும் ஒருவர் ஆவார்.

பீமருத்திரர் யாருனு இப்போ தெரிந்து விட்டது. அடுத்ததாக அவர் எதற்காக திருநெல்வேலிக்கு வந்தார் என்று தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா!



பீமருத்திரர் ஏன் திருநெல்வேலி வந்தார்?
இதற்கு விடை காண நாம் திருமாணிக்குழி என்ற சைவத் திருக்கோவில் வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

முற்காலத்தில் திருமால் பிரம்மசாரியாக வந்து மகாபலியிடம் மூன்றடி மண் கேட்டு அவனை அழித்ததால் ஏற்பட்ட பழி தீர திருமாணிக்குழி என்னும் ஸ்தலத்தில் சிவபெருமானை பூஜை செய்து வழிபட்டார். அப்போது பீமருத்திரர், சிவபெருமான் கட்டளைப்படி திருமால் செய்த பூஜைகளில் எவ்வித இடையூறும் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக காவல் புரிந்தார்.
இந்த திருமாணிக்குழி ஸ்தலத்தின் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் இங்கு மூலவரை நாம் நேரடியாக தரிசிப்பது இயலாது. ஏனெனில் எந்நேரமும் மூலவர் சன்னதியில் திரை போடப்பட்டிருக்கும். இங்கு இறைவனும், இறைவியும் எப்போதும் சிவசக்தியாக சேர்ந்திருப்பதாகக் கருதப்படுவதால் அவர்களை தொந்தரவு செய்யாமல் இருக்கும் பொருட்டு திரையிடப் பட்டிருப்பதாக ஐதீகம். மேலும் அந்த திரையில் திருமால் பூஜைக்கு காவலாக நின்ற பீமருத்திரர் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த தீரைச்சீலையில் உள்ள பீமருத்திரருக்கு பூஜை நடைபெற்ற பின்னரே, திரைவிலக்கப்பட்டு கருவறை லிங்கத்துக்கு பூஜை நடைபெறும் என்பதும் சிறப்பம்சம் ஆகும்.

ஆக திருமால் செய்த சிவ பூஜையில் எவ்வித இடையூறும் இல்லாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்ற பீமருத்திரர், திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் திருக்கோவிலில் திருமால் முன் நின்று நடத்திய ஆனிப்பெருந் திருவிழாவுக்கு காவலாக திருநெல்வேலி வந்தடைந்தார் என்பதும், இவரே தற்போது ஆனிப்பெருந்திருவிழாவில் பிரம்மாண்ட திருமேனியாக திருவீதிஉலா வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

திருநெல்வேலி தலப்புராணத்தில் திருமாலே முன் நின்று திருநெல்வேலி ஆனிப்பெருந்திருவிழாவை நடத்தி வைத்ததாக திருநெல்வேலி தல புராணத்தின் 56-வது சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகவே திருமாலே நடத்தி வைத்த திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் ஆனிப்பெருந்திருவிழாவில், அவருடைய சிவபூஜை காவலராக விளங்கும் பீமருத்திரர் உலா வருகிறார் என்பது சிறப்பான செய்தி ஆகும்.

# மீம்ஸ்










## விடுகதை

| | |
|---|---|
| இதயம் போல் துடித்திருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன? | கடிகாரம் |
| உருவம் இல்லாதவன் சொன்னதைத் திரும்பச் சொல்லுவான் அவன் யார்? | எதிரொலி |
| உள்ளே இருந்தால் ஓடித்திரியும் வெளியே வந்தால் விரைவில் மடியும் அது என்ன? | மீன் |
| காலைக்கடிக்கும் செருப்பல்ல காவல் காக்கும் நாயல்ல அது என்ன? | முள் |
| அமைதியான பையன் ஆனால் அடிக்காமலேயே அழுவான் அவன் யார் | ஐஸ் கட்டி |
| ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான்.. ஒருவன் நடப்பான் அவன் யார்? | கடிகாரம் |

# ஜோக்ஸ்



தம்பி தீக்குச்சியை பத்த வெச்சு ஏன் இட்லி மேல வைச்சு பார்க்கிற?

நீங்க தானே இட்லி "பஞ்சு" மாதிரி இருக்குன்னு சொன்னீங்க! அதான் தீப்பிடிக்குதானு பார்த்தேன்!

==========================
==========================

'பாடத்தைக் கவனிக்காமல் இருந்ததால உன்ன டீச்சர் அடிச்சாங்களே, அதை ஞாபகம் வச்சிருக்கியா?



நான் அதை "அடி"யோடு மறந்துட்டேன்.

==========================
==========================

வரலாறு ஏன்டா உனக்கு பிடிக்காதுன்னு சொல்ற?

சார் நான் "விஜய்"யோட ரசிகன்!

==========================

==========================

வெண்ண வியாபாரி லெட்டர் எப்படி எழுதுவாரு?

"உருகி, உருகி" எழுதுவாரு!

==========================
==========================

கணக்குப் பரீட்சையில், கணக்குப் போடாமல்

எதுக்குடா டான்ஸ் ஆடிக்கிட்டு இருக்க?

நீங்கதான் சார் சொன்னீங்க "ஸ்டெப்ஸ்" க்கு மார்க் உண்டுன்னு.

==========================
==========================

என் ஹார்ட் ரொம்ப வீக்கா இருக்கு டாக்டர்!

சுமார் எத்தனை "வீக்"கா அப்படி இருக்கு?

==========================
==========================

நெஞ்சைத் தொடும் ஒரு வார்த்தை சொல்லு

பனியன்

==========================
==========================

திருவள்ளுவர் ஒரு மிமிக்கிரி ஆர்டிஸ்ட்னு எப்படி சொல்ற?

1330 குரளு(ல்)க்கு சொந்தக்காரர் ஆச்சே! அதான்



# ஜோதிடம் அறிவோம்






எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், பாலம்பாளையத்தைச் சேர்ந்த பாலகனின் கனவில் தோன்றிய பாலமுருகன், தான் குடிகொண்டுள்ள பாலகிரி மலைக்கு வருமாறு அவனிடம் கூறியுள்ளார்.

காலையில் எழுந்தவுடன் இந்த நிகழ்வை அவன் தன் பெற்றோரிடம் கூற, அவர்கள் ஊர் மக்களுடன் பாலகிரி மலையில் பல மணி நேரம் தேடி, ஓரிடத்தில் அமர்ந்துள்ளனர். சற்று நேரத்திலேயே மலையின் உச்சியில் மயில் ஒன்று நின்றிருந்தது. அவர்கள் அங்குச் சென்று பார்த்த

போது, சுயம்பு வடிவிலான முருகன் சிலை ஒன்று காணப்பட்டது. உடனே அங்கே பச்சைப் பந்தல் போட்டு ஊர் மக்கள் அந்த முருகன் சிலையை வழிபடத் துவங்கினர். நாளடைவில் கருவறை அமைத்தனர்.

இங்கு வந்து வேண்டிய பக்தர்கள் வாழ்வில் ஏற்றம் பெற, கோயில் மேலும் விரிவடைந்தது. முருகனுக்குப் புதியதாக அழகிய சிலை வடித்து, பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினர்.

35 ஆண்டுகளுக்கு முன்னர் படிக்கட்டுப் பாதை அமைக்கப்பட்டது. நான்கு சக்கர வாகனங்கள் செல்ல மண் பாதையும் உள்ளது. மலைக்குச் செல்லும் வழியில் அழகிய தோரண வாயில் உள்ளது. அடிவாரத்தில் விநாயகப்பெருமான் வீற்றிருக்க, படிக்கட்டுகள் வழியாக மலையேறும்போது முருகனும், எதிரே

ஔவையாரும் நின்றுள்ள நிலையில் தரிசனம் தருகின்றனர்.

கிழக்கு நோக்கிய கோயிலின் முன்பு பலிபீடம், கொடிமரம் அமைந்துள்ளன. மகாமண்டபத்தில் பலிபீடமும், அலகில் நாகத்துடன் மயிலும் இருக்க, விநாயகர் தனது இரு பக்கமும் நாகருடன் காட்சிதர, எதிரே மூஷிக வாகனம் உள்ளது. நவநாயகர்கள் சந்நிதி தனியாக உள்ளது.

கருவறையில் பாலகனாகவும், அழகனாகவும் முருகன் காட்சியளிக்கிறார். வேலவன் மீது வேல் சாத்தப்பட்டுள்ளது. இவருக்கு முன்னால் சுயம்பு வடிவ முருகனின் தரிசனமும் கிடைக்கிறது. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, பிரம்மன், துர்கை ஆகியோரை தரிசிக்கலாம். வெளிச் சுற்றில் பைரவர் தெற்கு நோக்கி தனிச் சந்நிதியில் அருள்கிறார்.

திருமணத் தடை உள்ளவர்கள் பங்குனி உத்திர நாளில் திருக்கல்யாண உற்சவத்தில் பங்கேற்றால் பலன் உண்டு. ஆறு வளர்பிறை சஷ்டி வழிபாட்டில் வணங்கினால் சங்கடங்கள் அனைத்தும் தீரும், எதிர்ப்புகள் நீங்கும், வழக்கு விஷயங்களில் வெற்றி கிடைக்கும், வேதனையெல்லாம் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடும், பைரவருக்கு தேய்பிறை அஷ்டமி நாளில் மாலை 6 மணியளவில் சிறப்பு பூஜையும் நடைபெறுகின்றன. விசேஷ நாள்களில் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே இருக்கும். ஐப்பசி மாதம் கந்த சஷ்டி நாளில் காலை சிறப்பு அபிஷேக, அலங்கார பூஜைகள் விமரிசையாக நடைபெறும்.

ஈரோடு மாவட்டத்துக்கு உள்பட்ட அந்தியூரிலிருந்து பருவாச்சி வழியாகச் சென்று 10 கி.மீ. தொலைவிலுள்ள பாலம்பாளையம் அடையலாம்.

## சனியின் குணங்கள்

சனி ஒரு மனிதனை கஷ்டத்தில் பழக்கப்படுத்தும். அப்படிப் பழகியவர்களுக்கு, அது தரும் உத்வேகமும் வைராக்கியமும், துணிச்சலும் உழைப்பும் மிகப்பெரிய உயரத்திற்கு அவர்களைக் கொண்டு செல்லும். ஆனால், நிதானமான முன்னேற்றம்தான் கிடைக்கும். சோதனைக்குப்பின் தான் சாதனையைச் செய்ய அனுமதிக்கும்.

சனியைக் குறித்து நாம் அச்சப்படத் தேவையில்லை. மிகச் சரியாக நம்முடைய வாழ்க்கையில் செயல்களைச் செய்தால், சனி நமக்குப் பரிசு தரத் தயங்காது.

நாம் நன்கு உழைப்பவர்களாக இருந்தால், அந்த உழைப்பின் ஊதியத்தை சனி தருவதற்குத் தயங்காது.

ஆனால், சனியின் மாயைகளில் அகப்படக் கூடாது. அது சில நேரங்களில் தவறான வழியைக் கூடக் காட்டும். பேராசையைத் தூண்டும். அகப்பட்டால் பெருங்குழிக்குள் தள்ளி விடும்.

சனியின் குணங்கள் ஆர்ப்பாட்டம், ஆடம்பரம் அல்ல. அடக்கமும் எளிமையும் உள்ளவர்களை, எதையும் பொறுமையோடு அணுகுபவர்களை சனி மிகப்பெரிய உயரத்திற்கு கொண்டு செல்லும்.

நம்முடைய நடத்தையை, திருத்திக் கொள்ள வேண்டும். சோம்பேறித்தனமா, நிதானமா என்பதைப் பகுத்தறிந்து, சோம்பேறித்தனத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கைக்கொண்டால் சனியால் கிடைக்கும் வெற்றி நிச்சயம்.

இனி சில ஜாதகங்களில் சனி எப்படி பலன் தந்தது என்பதைப் பார்க்கலாம்.

நம்முடைய உறவினர் ஜாதகம் இது. சென்னையில் மிகப்பெரிய ஐ.டி. கம்பெனியில் பணிபுரிகிறார். மிகப்பெரிய சம்பளம். கார் அந்தஸ்து என வாழ்கிறார்.

நடப்பது சனி திசை. கும்ப லக்னம். லக்னத்திற்கு ஐந்தாம் இடத்தில் (மிதுனம்) லக்னாதிபதி சனி இருக்கிறார் . சனிக்கு வீடு கொடுத்த புதன் லக்னத்திற்கு 11-ஆம் இடத்தில் தனுசு ராசியில் இருக்கிறார். புதன் சனி பார்வை இருக்கிறது.


1. லக்கினாதிபதி சனி பூர்வ புண்ணியமான ஒன்பதால் இடத்தில் அமர்ந்திருப்பது முதல் நன்மை. லக்னாதிபதி பலம் பெறுகிறார். சனிக்கு மிதுனம் நட்பு வீடு. வீட்டுக்குரிய புதனும் தனுசிலிருந்து பார்க்கிறார்.

2. ஜீவனகாரகனான சனி லக்கினாதிபதியாகி, ஐந்தாம் வீட்டில் அமர்ந்து ஒன்று ஐந்து ஒன்பது என்ற திரிகோண இணைப்பை ஏற்படுத்துகின்றார். அவருடைய பார்வை இரண்டாம் இடத்தில் பதிகிறது. எனவே, பூர்வ புண்ணிய பலத்தினால், பொருளாதாரம், வேலை, சிந்தனை (ஐந்தாமிடம் சிந்தனை, அதிர்ஷ்டம்) என எல்லாவற்றிலும் முன்னேற்றமாக இருக்கின்றார்.

ஒரு நன்மை என்றாலும், மருந்து சாப்பிடும் பொழுது பக்க விளைவு இருப்பதுபோல சில விளைவுகளை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.



## கோரக்கர் நீராடிய அத்திரி கங்கை



கோரக்கரின் பூர்வ ஜென்மத்தில், அத்திரி என்ற முனிவருக்கு 8 சீடர்கள் இருந்தனர். அவர்களில் கோரக்கரும் ஒருவர். கோரக்கரின் குருபக்திக்காக அத்திரி மகரிஷி தாம் தவம் செய்ய அத்தி மரத்தடியில் தண்டத்தால் தட்டி, தம் கமண்டலத்தில் உள்ள நீரை தெளித்து அங்கேயே கங்கையை உற்பத்தி செய்து அதில் கோரக்கரை நீராட செய்தார்.

அத்திரி கங்கை

இன்றும், அது அத்திரி கங்கை என்றே அழைக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகில் உள்ள ஆழ்வார்குறிச்சிக்கு மேற்கே சுமார் 5 கி.மீட்டர் தொலைவில் ஆதிசிவசைலம் எனப்படும் அத்திரி மலைக்கோவில் உள்ளது.

இங்குள்ள ஆதி சிவசைல நாதரை அத்திரி முனிவர் வழிபட்டதால் 'அத்திரி பரமேஸ்வரர்' என்றும் கோரக்கரால் வழிபடப்பட்டதால் 'கோரக்க நாதர்' என்றும் பெயர்கள் கொண்டுள்ளார். இங்குள்ள ஆறுபட்டை வடிவ லிங்க ரூபமாக உள்ள அம்பிகையின் நாமமும் அத்திரி பரமேஸ்வரி என்பதே ஆகும்.

## வாழும் காலத்தில் சௌகரியமாக வாழ

கங்கை, யமுனை, பண்டைய சரஸ்வதி சங்கமத்தில் ஸ்நானம் செய்பவர் எப்பொழுதும் அழியாதவராக இருக்க வேண்டும் என்று இந்திர பகவானிடம் பிரார்த்தனையும் உள்ளது. இந்தச் சங்கமத்தில் குளித்தால், கடந்த கால, நிகழ்கால, அறியப்படாத பாவங்கள் அனைத்தும் கழுவப்படும் என்றும் மத்ஸ்ய புராணம் கூறுகிறது. இது வேறு எந்த புனித நீராட்டத்தையும் விட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திரிவேணி மிகவும் தெய்விகமானது. அந்த தெய்விகத் தருணத்துக்காக, தேவர்கள் கூட காத்திருக்கிறார்கள். எனவே இது "முக்தி ஜனனி' என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது எண்ணற்ற யக்ஞங்களைவிட அதிக புண்ணியத்தை ஏற்படுத்துவதால், இந்த இடம் "பிரயாக்' என்று அழைக்கப்படுகிறது.

சமீபத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராசாரியருடன் இணைந்து பிரயாக் கும்பமேளாவுக்கு நான் சென்றது ஒரு புதிய அனுபவம். கங்கா ஸ்துதி, கங்கா தசஹர ஸ்தோத்திரம், காசி பஞ்சகம், கங்காவதாரணம் (ராமாயணம் & பாகவதம் போன்றது), திரிவேணி மஹாத்மியம், பிரயாகா க்ஷேத்ர மஹாத்ம்யம் மற்றும் யமுனாஷ்டகம் போன்றவற்றை சங்கராசாரியர்



ஒரு பக்தரை போன்று பாடியது பரவசம் அளித்தது. இதற்கு முன் இவற்றின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இந்த ஞான குரு உலக நலம், பாரதத்தின் நீடித்த செழுமைக்காக ஒரு சங்கல்பத்தை மேற்கொண்டு பின்னர் புனித நீராடல் செய்தார். கடவுளுக்கும் வேத பண்டிதர்களுக்கும் விசேஷமான காணிக்கைகளைத் தொடர்ந்து, மாகங்கா பூஜையின் சடங்கு முறை பார்ப்பதற்கு ஒரு தெய்விக நிகழ்வாக இருந்தது. திரும்பிச் செல்லும்போது, புனிதமான, அழியாத அத்தி மரமான "அக்ஷயவடம்' தரிசனத்தை ஒருவர் தவறவிட முடியாது. காஞ்சி மடத்தின் மற்றொரு சுவாரஸ்யமான பரிமாணம், "சங்கர விமான மண்டபம்' ஆகும். இது தென்னிந்திய பாணியில் காஞ்சி மடத்தால் கட்டப்பட்ட நான்கு மாடி கோயில். இது கண்காணிப்பு, கூட்ட மேலாண்மைக்காக திரிவேணி சங்கமத்தின் கண்காணிப்பு மையமாகவும் செயல்படுகிறது. தொடக்கத்திலிருந்து இறுதி வரை இறக்குமதி செய்யப்பட்ட வாழ்க்கை முறைகளை அல்லாமல், அதன் சொந்த பலங்களை நம்பும் ஒரு கலாசார ரீதியான, வளமான சமூகத்தின் நங்கூரங்களைப் பிரதிபலிக்கிறது. பிரயாகையின் விமான நிலையம், ரயில் நிலையம், சாலைகள், குறுக்கு சந்துகள் தெய்விகத் தன்மையுடன் பிரகாசித்தன. வாழ்க்கையின் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னியல்பாக திரண்டு வந்தது, பிரயாக் கும்பமேளாவை, உலக அளவில் பாரதத்தின் நாகரிகக் கண்காட்சியாக மாற்றியது.

## வாகை சூடும் கடக ராசிக்காரர்கள்!




கடக ராசியில் புனர்பூசம் (4), பூசம், ஆயில்யம் நட்சத்திரங்கள் என்று 9 பாதங்கள் உள்ளன. இது நீர் தத்துவம் கொண்ட சர ராசி. வயது முதிர்வுக் காலத்தில், இவர்கள் தங்கள் பாசத்தில் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கட்டி தன்னுடைய சிறகுக்குள் வைத்திருக்கும் ஒரு பாசமிக்கவர். ஒரு குறிப்பிட்ட வயது வரை இவர்களின் சுகம் என்பது தாயின் கருவறை மற்றும் அன்னையின் மடி.

சூரியனை சிவன் என்றும் சந்திரனை பார்வதி என்றும் ஜோதிடத்தில் கூறப்படுகிறது. அதனால் தான் காலபுருஷ தத்துவப்படி சந்திரனுக்கு அருகில் சூரியன் அமர்ந்துள்ளார். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே வீடு. சூரியன் மேஷத்தில் உச்சமாகிறார் சந்திரன் அவரருகிலே ரிஷபத்தில் உச்சமாகிறார். சந்திரன் என்பவர் பெண் காரக உறவு என்றால் தாய், மாமியார் மற்றும் வீட்டில் உள்ள தலைவி.

கடகத்தின் சின்னம் நண்டு: நண்டின் தன்மை அது தன் எல்லா குட்டிகளையும் அரவணைப்பது போல இந்த கடக ராசிக்காரர்கள் அதிக பாசக்காரர்கள் மற்றும் அன்பால் அரவணைப்பவர்கள். நான்காம் பாவமான பாசமிக்க தாயின் ஸ்தானம் ஆகும். "நண்டானுக்கு இடம் கொடேல்' என்றொரு பழமொழிக்கு ஏற்ப இந்த லக்கினக்காரர்கள் மெல்ல தன்னை நுழைத்துக் கொண்டு, முழுவதுமாக ஆக்கிரமிக்கும் கெட்டிக்காரர்கள். 'நண்டு கொழுத்தால் வளையில் தங்காது' என்ற பழமொழி கடத்திற்குப் பொருந்தும். இந்த ராசிக்காரர்கள் வளர வளர இடம் பெயர்ந்து கொண்டே இருப்பார்கள். அதாவது தங்கள் திறமைக்கு ஏற்ப வெவ்வேறு வேலையில் மாறிக்கொண்டே இருப்பார்கள். ஆண்டுக்கொருமுறை நண்டுகள் தங்களுடைய மேலோடுகளை அகற்றி புதுப்பித்துக் கொள்கின்றன. இவர்கள் தன் திறமைகளை கற்று பல்வேறு வழிகளில் தங்களுடைய அறிவை புதுப்பித்துக் கொள்வார்கள்.

கடக ராசியினர் வணங்கும் தெய்வம்

மருத்துவர் திருத்தேவன்குடி கற்கடேஸ்வர், அருமருந்து நாயகி, அபூர்வ நாயகி மற்றும் தன்வந்திரியை வழிபட்டால் வாதம், மன நோய், மற்றும் எல்லா வித நோய்களும் தீரும். கடக ராசியினர் பௌர்ணமி அல்லது திங்கள் கிழமைகளில் பழம்பெரும் சிவன் கோயிலில் உள்ள குளங்களில் குளித்து அம்பாளுக்குப் பூஜை செய்வது நன்று.

இது தவிர சந்திரன் வழிபட்ட ஸ்தலங்கள், திருவரகுணமங்கை நத்தம், திருமணச்சேரி, பட்டீஸ்வர துர்க்கை, திங்களூர், திருவிடந்தை, திருவேள்விக்குடி மற்றும் கல்யாண கோலம் கொண்ட அனைத்து பழம்பெரும் சைவ வைணவ கோயில்களை தரிசிக்கலாம். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அபிராமி அந்தாதி ஸ்லோகத்தை உச்சரிப்பது நன்று.

## நோய்கள் நீக்கும் சிவன்!

தக்கன் என்னும் கொடியவன் தனது 27 மகள்களை அழகிய சோமன் எனப்படும் சந்திரனுக்குத் திருமணம் செய்துவைத்தார். அப்போது தக்கன் தனது மகள்களை சந்திரனிடம் ஒப்படைத்து, "27 மகள்களிடமும் சமமாக அன்பைச் செலுத்தி வாழவேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். ஆனால் சோமனோ, மிகுந்த அழகியான ரோகிணியிடம் மட்டும் அதிகப்படியான காதல் கொண்டு வாழ்ந்து வந்தார். இதனால் ஏனைய 26 பேரும் தக்கனிடம் முறையிட்டனர்.

இதைக் கேட்ட தக்கன் பெரும் சீற்றம் கொண்டு, சோமனுக்கு நாளும் ஒரு கலை குறைந்துவர சாபம் அளித்தார். அதுவே தேய்பிறையானது. சாபம் பலித்தது. எச்சமாக ஒரே ஒரு கலை மிஞ்சியிருந்த வேளையில், திருவாரூர் வந்து புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டார். தேவதீர்த்தத்தில் நீராடி, ஐந்தெழுத்து மந்திரத்தை நாளெல்லாம் நெஞ்சுருக ஓதியவாறு மடப்புரத்தில் சிவலிங்கம் ஸ்தாபித்து முறையாக வழிபட்டார்.

சிவனும் விடை மீது அமர்ந்து காட்சி அளித்து அருளினார்.

சோமனும் தனக்கு நேர்ந்த சாபத்தை மனங்கசிந்து கண்ணீர் சிந்திக் கூறிப் பணிந்து நின்றார். வேண்டியோருக்கு வேண்டியதை அளிக்கும் சிவனும், ""தக்கன் சாபத்தால் நீ தேய்ந்தாலும் பின்னர் நாளொரு கலையாக வளர்வாய்!" என்று அருளினார். அதுவே வளர்பிறையானது. சோமனின் குறையைத் தீர்த்து அருள்புரிந்ததால், இத்தல இறைவன் சோமநாதப் பெருமான் என்று அழைக்கப் பெறுகிறார்.

வரம் பெற்ற சோமன், ""பக்தர்கள் வந்து வழிபட்டு குறைகளைக் களையும் வகையில் நீங்கள் அருள்புரிய வேண்டும்" என்றார்.

சோமன் ஸ்தாபித்த சிவலிங்கமே "சோமநாதர்' .

சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும், விராட புருஷஸ்தலமாகவும், பிறந்தாலே முக்தி தருவதும், உலகத்தில் முதலில் தோன்றிய மூர்த்திதலமாகவும், நால்வரால் பாடல் பெற்றதாகவும் விளங்குவது தியாகேசர் உறையும் திருவாரூர் ஆகும்.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாட பெற்ற தலமாகவும் மடப்புரம் தலம் உள்ளது. மேற்கு நோக்கி அமையப் பெற்ற அற்புத சிவன் கோயில்.

ஞானத்தையும் யோகங்களையும் அளிக்க வல்ல அன்னையாக ஸ்ரீஞானசித்தி யோகாம்பிகை அருள்கிறார்.

"சோமநாதரை வேண்டுவோரின் துன்பங்கள் நீங்கும். மருந்துகள் முதலியவற்றால் தீராத நோய்களில் விடுபட்டு நலம் பெறுவர். கல்வி, செல்வம், புகழ், சித்தி, முக்தி உள்ளிட்ட பேறுகளை எளிதில் எய்துவர்' என்பது ஐதீகம். திங்கள்கிழமை வழிபட்டால் பக்தர்கள் கூடுதல் பலன்களைப் பெறலாம்.

இங்குள்ள சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடுவோருக்கு தோல் நோய் உள்பட அனைத்து விதமான நோய்களும் விலகுகின்றன என்பதை பக்தர்கள் உணர்கின்றனர்.





## மகாளய பட்சம் என்றால் என்ன என்று தெரியுமா?



மகாளய அமாவாசை நாளில் மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதம் பித்ருக்களை தேடி வரும். அந்த ஆசீர்வாதத்தை பித்ருக்களும் நம்மிடம் நேரடியாக எடுத்து வரக்கூடும்.

எனவே மகாளயபட்ச நாட்களில் பித்ருக்களை வழிபாடு செய்து, விஷ்ணுவின் அருளை பெறத் தவறாதீர்கள்.

மாதம் தோறும் அமாவாசை வந்தாலும் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை ஆகிய மூன்று அமாவாசைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூன்றிலும் அதிக புண்ணியத்தை தருவது மகாளய அமாவாசை ஆகும்.

அதாவது 15 நாட்கள் பித்ருக்களை வழிபட வேண்டியதை மகாளய அமாவாசை குறிக்கிறது. பவுர்ணமி தினத்துக்கு மறுநாள் பிரதமை திதியில் இருந்து மகாளய அமாவாசை வரை உள்ள 15 நாட்களும் பித்ருக்கள் பூலோகத்தில் இருக்கும் காலமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு கடந்த 8- ந்தேதி மகாளயம் தொடங்கியது. வருகிற 21-ந்தேதி வரையிலான 14 நாட்கள் பித்ருக்கள் நம்மை நெருங்கி இருக்கும் மகாளயபட்ச தினங்களாகும்.

திதி என்னவென்று தெரியாதவர்கள், மகாளய அமாவாசை தினத்தன்று தர்ப்பணத்தை மிகவும் சிரத்தையாக செய்தல் வேண்டும். தர்ப்பணத்தை மிக, மிக ஆடம்பரமாக செய்ய வேண்டும் என்பதில்லை. எளிமையாக செய்தாலே போதும், பித்ருக்கள் மனம் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள்.

இந்த 15 நாட்களில் வரும் ஒவ்வொரு திதியும், ஒவ்வொரு வகை பித்ருக்களுக்கு உகந்த தினமாக கருதப்படுகிறது. அந்த திதி சிறப்பு நாட்களை பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## பணி நிறைவு பெற்ற தலைமை ஆசிரியருக்கு பாராட்டு பணி நிறைவு வாழ்த்து




புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் மும்பாலை பட்டினம் தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்த திருமதி சீனி வேம்பரசி மதியழகன் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் புதுக்கோட்டை மாவட்ட பொருளாளர் மற்றும் மணமேல்குடி வட்டாரச் செயலாளர் திரு மு.சீனிவாசன் அவர்கள் பணி நிறைவு வாழ்த்து தெரிவித்து வணங்கினார்.



ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் உள்ள ராமநாத சுவாமி கோவில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்றாக திகழ்கிறது. இங்குள்ள அக்னி தீர்த்த கடலில் புனித நீராடி தர்ப்பணம் கொடுத்தால் முன்னோர்களின் ஆசி கிடைக்கும் என்பது நம்பிக்கை..

இதற்காக நாடு முழுவதும் இருந்து நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ராமேஸ்வரத்திற்கு வருகை தருகின்றனர்....

## பிரமோற்சவம்



பிரமோற்சவம் நாள் 1 முரளி கண்ணன் திருக்கோலம் புன்னைமரம் வாகனம் @ பத்னம் கோவில் சென்னை கேசவ பெருமாள் கோவில் சென்னை.

## ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்



ஸ்ரீ பார்த்தசாரதிபெருமாள் ப்ரஹ்மோத்ஸவம் நாள்-1 ஸ்ரீ பார்த்தசாரதிபெருமாள் புன்னைமர வாஹனம் பெரியமாடவீதிபுறப்பாடு

## ஸ்ரீ ஸ்தலசயன பெருமாள் பிரம்மோற்சவம்



ஸ்ரீ ஸ்தலசயன பெருமாள் பிரம்மோற்சவம் நாள் 8 மாலை. குதிரை வாகனம். புதிய சவாரி பாகை சமர்ப்பணம்.

## வாலாஜா வன்னிவேடு புத்த விஹாரில் புத்த பூர்ணிமா விழா: குடியாத்தம் தலித்குமார் பங்கேற்பு!



**வேலூர், மே 03:** பன்னாட்டு பௌத்த இளைஞர் சங்கம் தமிழ்நாடு கிளை சார்பில் வாலாஜா வன்னிவேடு பாலாற்றங்கரையில் அமைந்துள்ள புத்த விஹாரில் புத்த பூர்ணிமா (ஜெயந்தி) விழா நடைபெற்றது. மாநிலத் தலைவர் பொன். புருஷோத்தமன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் கே.குசேலன் வரவேற்றார். அதன் பிறகு புத்த பூஜை மற்றும் தியானம் அனுஷ்டிக்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட எழுத்தாளர். கவிஞர். யாழன்ஆதி சிறப்புரையாற்றினார். சங்கத்தின் மூத்த தலைவர் பி. லோகநாதன், பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, இந்திய குடியரசு கட்சி கொள்கை பரப்பு செயலாளர் தன்ராஜ், மாவட்ட தலைவர் எஸ். தயாளன், பி. ஏகாம்பரம், வேலூர் மாவட்ட பொருளாளர் வெங்கடேசன், கே.சுசீந்திரன், பௌத்த சமூக கல்வி அறக்கட்டளை தலைவர் இரா.சி.தலித் குமார் மற்றும் சங்க நிர்வாகிகள், உபாசகர்கள், பெண்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் சங்க பொருளாளர் எஸ்.கருணாகரன் நன்றி கூறினார்.

## செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் நடைபெற்ற திருக்குறள் பயிற்சி நிறைவு விழா: உதவி இயக்குனர் ந. நிலா பங்கேற்று சான்றிதழ் வழங்கினார்

**செய்யாறு மே 03:** செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ் நடைபெற்ற 30 வது வார திருக்குறள் பயிற்சி மற்றும் நிறைவு விழா நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருவண்ணாமலை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் ந. நிலா தலைமை தாங்கி மாணவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்கி பேசினார். தலைமையாசிரியர் ஜி .ஜெயகாந்தன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் திருக்குறள் பயிற்சியாளருமான எறும்பூர் கை. செல்வகுமார் வரவேற்றார்.





திருக்குறள் திருப்பணிகள் திட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர் பா இந்திரராசன், தொழிலதிபர் பா. ஜெயக்குமார், திருக்குறள் பயிற்சியாளர் ப. குப்பன், விஸ்டம் மெட்ரிக் பள்ளி முதல்வர் சரஸ்வதி, நரசிம்ம பாரதி ,விஸ்வேஸ்வரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருக்குறளில் உள்ள 133 அதிகாரங்களை ஒப்புவித்த மாணவிகள் மோகிதா கஜலட்சுமி ஆகியோருக்கு ரொக்க பரிசு மற்றும் நினைவு கேடயம் பரிசாக வழங்கப்பட்டது பங்கேற்பு மாணவர்கள் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது.

ஆசிரியர்கள் பாரதி தமிழ் தேனி தேன்மொழி ஆனந்தி இளவரசி மற்றும் சண்முகம் மோதிலால் சத்தியமூர்த்தி முபாரக் உள்ளிட்டோர், மற்றும் திருக்குறள் பயிற்சி மாணவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் முடிவில் கருத்தாளர் புலவர் ந. கனகசபை நன்றி கூறினார்.

## உலக பத்திரிகை சுதந்திர தினம் மே3 கனகம்பீரத்தின் அடையாளம்

**நெல்லை, மே 03:** நானிலத்தில் உள்ளோரை நாலும் தெளிந்த நல்லோராக்கும் நல் வித்தை புரிவதனால் தான் புவி முழுவதும் பத்திரிகை ஊடகத்தை உன்னத உயரத்தின் நயத்தகு நான்காம் தூண் என்று நனி சிறக்க போற்றிப் புகழ்கின்றார்...

தனித்தனி தீவுகளாய் திணறித் தவித்த மனித குலத்துக்கு திசை காட்டும் தினகரனாய் நித்தம் நித்தம் தவறாமல் மலர்ந்து அக்கம் பக்கம் முதல் அயல் தேசங்கள் வரை அயராமல் சேதிகளை அள்ளி அள்ளிக் கொண்டு வந்து அறிவுக்கு ஒளியூட்டி ஆற்றலுக்கு செறிவூட்டும் அற்புத ஊடகத்தின் அருமை பெருமைகளை அறியாதார் உண்டோ அகிலத்தில்...? வானளவு அதிகாரம் வளம் மிகுந்த பெருஞ்செல்வம் வல்லாரும் நல்லாரும் எல்லாரும் மவுனத்தில் மண்டியிடும் ஆட்சி அரியாசனம்... இவை அனைத்துக்கும் வளையாமல் குனியாமல் நெளியாமல் நிமிர்ந்து நிற்கும் வேள்வி-- வேதம் நிகர்த்த நேர்மைத் திறத்தின்--- கனகம்பீரத்தின் அசல்அடையாளம் அன்றோ அச்சு ஊடக நுட்பம்? கலிகாலக் கோளாறில் கபடக் கலப்பட நிகழாற்றின் அடியூற்றில் அவ்வப்போது களங்கங்கள் ஆங்காங்கே பற்றினாலும் பத்திரிகை ராஜ்ஜியத்தின் பாராளும் மேன்மைக்கு பங்கமில்லை எந்நாளும்... மாறும் உலகின் சக்கரச் சுழற்சியால் சிங்கத்தின் கால்களில் சின்னச் சின்ன காயங்கள் பட்டாலும் சிங்கத்தின் சிகரச்சீற்றம் ஜீவன் உள்ளவரை சிறிதளவும் குன்றாது குறையாது... நான்காம் தூணின் நல்லிருப்பும் நற்புகழும் ஞாயிறு உள்ளளவும் குன்றாது, குறையாது!

**நெல்லை குரலோன்**
**பொட்டல் புதூர்**

## ரவுசு மணி

உங்களிடம் உண்மையாக இருப்பவர்களிடம் முகமுடி அணியாதீர்கள். பிறகு எடுக்கவே முடியாமல் போய் விடும்...



V. முத்து ராமகிருஷ்ணன்

## திருச்சியில் அகிலம் வெல்வோம் அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு விழா:

**திருச்சி, மே 03:** திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கத்தில் அகிலம் வெல்வோம் அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு விழா, 'அன்பு சேவகர்' விருது வழங்கும் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா என முப்பெரும் விழாவாகச் சிறப்பாக நடைபெற்றது.

அறக்கட்டளையின் நிறுவனர் திருமதி. சுமித்ராதேவி மாதவன் வரவேற்புரை ஆற்ற, தலைவர் மற்றும் முதன்மை கப்பல் பொறியாளர் திரு. T. மாதவன் விழாவிற்குத் தலைமை தாங்கினார். தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் குத்துவிளக்கேற்றலுடன் தொடங்கிய விழாவில், மாணவிகளின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. அறக்கட்டளையின் செயலாளர் திரு. சிவ. தளபதி தமிழழகன் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்கள்: பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறைத் தலைவர் பேரா. முனைவர் ந. முருகேஸ்வரி, சிறப்பு மாவட்ட நீதிபதி திருமதி சி. கார்த்திகா, காவேரி மகளிர் கல்லூரி முனைவர் நா. சாத்தமைப் பிரியா உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். மேலும், அமைச்சர் தமிழவேள் பெ. உதயகுமார், தமிழ்ச்செம்மல் நாவை சிவம், திருக்குறள் முருகானந்தம் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.





விருதுகள் மற்றும் நலத்திட்டங்கள்: சமூக சேவையில் சிறந்து விளங்கியதற்காக: முனைவர் அருணா தினகரன் யோகா பெ. விஜயகுமார் முனைவர் R. மகேந்திரன் திரு. K. சந்திரசேகர் தமிழறிஞர் அரிமா தே.ஸ்ரீவைகை மாலா ஓவியர் P. பெருமாள் திரு. K. சிவப்பிரகாசம் ஆகியோருக்கு 'அன்பு சேவகர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து, அருவி இல்ல முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அரிமா சங்க முகமது சபி ,டாக்டர் லட்சுமி நந்தகுமார் எழுத்தாளர் ஜனனி அந்தோணி ராஜ் உள்ளிட்ட அறக்கட்டளையின் ஆலோசகர்கள், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்ட இவ்விழா, மா. தீபரோஷ்னி மற்றும் மா. ஹன்சிகா ஆகியோரின் நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது. நிகழ்ச்சியைப் பொருளாளர் திரு. Eye God தமிழரசு மற்றும் வழக்கறிஞர் மோ. கோபால்சாமி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

**SA. ராஜ்**


## வறுத்தெடுக்கிறது வெயில்; வரவேற்கும் மலைகளின் இளவரசி



திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைகளின் இளவரசி என அழைக்கப்படுகிறது. பிரசித்தி பெற்ற இந்த சுற்றுலாத் தலத்திற்கு தமிழகம் மட்டுமல்லாமல், வெளிமாநில சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், பள்ளி, கல்லூரிகளுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளதால், கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகள் குவிந்து வருகின்றனர். வழக்கமாக வார இறுதி நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும். வார நாட்களில் குறைவாக இருக்கும். தற்போது கோடை சீசன் தொடங்கியுள்ள நிலையில், வார நாட்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளது.

# சுற்றுலா: கூட்டமில்லாத சொர்க்கம் - கோத்தகிரி!

தமிழ்நாட்டில் ஒரு மலை வாசஸ்தலத்தை தேடும்போது கோத்தகிரியின் ரம்யமான இயற்கை அழகை வழங்குவதோடு, மட்டுமல்லாமல் உங்களின் பயணத்திற்கும் அதிக கூட்டம் இல்லாத ஒரு சுற்றுலா தலமாக விளங்குகிறது. பசுமையான புல்வெளிகள், பரந்த தேயிலைத்தோட்டங்கள், குளிர்ச்சியான காலநிலை ஆகியவற்றால் ஒவ்வொரு பார்வையாளர்களையும், நம்மையும் ஈர்க்கும்.



### 1. எல்க் நீர்வீழ்ச்சி

கோத்தகிரியில் பார்க்க வேண்டியசிறந்த இடங்களில் இந்த நீர்வீழ்ச்சியும் ஒன்றாகும். இதனை உயிலட்டி நீர்வீழ்ச்சி என்றும் அழைக்கப்படுகிறது. நீலகிரியின் முதன்மையான நீர்வீழ்ச்சிகளின் இதுவும் ஒன்றாகும். பசுமையான தேயிலை, காப்பி தோட்டங்களால் சூழப்பட்ட இந்த உயர்ந்த நீர்வீழ்ச்சியின் நீர் கீழ் நோக்கிப் பாய்ந்து பிரமிக்க வைக்கும் காட்சிகளை நாம் பார்க்கலாம். மழைக்காலத்தில் இந்த நீர்வீழ்ச்சி முழு வீச்சில் கொட்டும். ஆரஞ்சு பூக்களால் பள்ளத்தாக்கு பூத்துக் குலுங்குவதை பார்க்க மிக அழகாக இருக்கும்.

### 2. கேத்தரின் நீர்வீழ்ச்சி

கோத்தகிரி சுற்றுலா தலங்களில் ஒன்றான கேத்தரின் நீர்வீழ்ச்சி மைசூர் மாவட்ட ஆட்சியர் ஜி. டி. காக்பர்னின் துணைவியார் பெயரிடப்பட்டது. இது கோத்தகிரிக்கு அருகில் அமைந்துள்ளது. இது கண்கவர் நீர்வீழ்ச்சி ஆகும். 250 அடிக்கு மேல் உயரத்திலிருந்து விழும் இந்த அழகான நீர்வீழ்ச்சி நீலகிரி மலைகளின் பசுமையான பசுமைக்கு மத்தியில் ஒரு மயக்கும் காட்சியை நமக்கு வழங்குகிறது.

### 3. லாங்வுட் ஷோலா

லாங்வுட் ஷோலா என்பது பல்வேறு தாவரங்கள், பறவைகளை, வன விலங்குகளை இங்கு பார்க்கலாம். இது ஒரு வனக்காப்பகம். அமைதியான இயற்கை சூழல் நிறைந்த இடம்.

### 4. ரங்கசாமி சிகரம், தூண்

1794 மீ உயரத்தில் அமைந்துள்ளது இந்த ரங்க சாமி தூண். இது பிரபலமான இடங்களில் இது புனிதமான இடமாக கருதப்படுகிறது. இது மலையற்றத்திற்கு ஏற்ற இடமாகும்.

### 5. கோடநாடு காட்சி முனை

கோடநாட்டில் பசுமையான பள்ளத்தாக்குகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் பனிமூட்டம் சூழ்ந்த மலைகளின் பரந்த காட்சிகளை பார்க்கலாம். இயற்கையின் அழகு அதன் முழுமையாக கண்டு ரசிக்க இது ஒரு அற்புதமான இடமாக திகழ்கிறது.

### 6. நேரு பூங்கா

கோத்தகிரி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது நேரு பூங்கா. அமைதியான மற்றும் சாந்தமான சூழலையும் அழகாக இங்கு பார்க்கலாம். அங்கே பராமரிக்கப்பட்ட புல்வெளிகள், வண்ணமயமான பூச்செடிகள் பல வகையான மரங்கள், மரம் செடிகளை கொண்ட இந்த பூங்காவை சுற்றி பார்க்கலாம்.

கோத்தகிரியில் தங்கி ஒரு நாளிலும் பார்க்கலாம். 2 அல்லது 3 நாட்களிலும் பார்க்கலாம். குடும்பத்தோடு சென்று பாருங்கள்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ரூ.2,40,00 சம்பளத்தில் மேலாளர் பணி!

பணி: Deputy General Manager

சம்பளம்: மாதம் ரூ. 90,000 - 2,40,000

வயதுவரம்பு: 44-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: பொறியியல் துறையில் Electrical, Electrical & Electronics, Instrumentation & Control, Civil, Mechanical, Electronics & Tele-communication ஆகிய ஏதாவதொரு பிரிவில் 60 சதவீத மதிப்பெண்களுடன் பிஇ அல்லது பி.டெக் முடித்து 12 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சம்பளம்: மாதம் ரூ. 50,000 - 1,60,000

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: பொறியியல் துறையில் Electrical, Electrical & Electronics, Instrumentation & Control, Civil, Mechanical, Electronics & Tele-communication ஆகிய ஏதாவதொரு பிரிவில் 60 சதவீத மதிப்பெண்களுடன் பிஇ அல்லது பி.டெக் முடித்து 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Deputy General Manager(Finance)

சம்பளம்: மாதம் ரூ. 90,000 - 2,40,000

தகுதி: சிஏ, சிஎம்ஏ முடித்து 12 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 44-க்குள் இருக்க வேண்டும்.

பணி: Assistant Manager(Finance)

சம்பளம்: மாதம் ரூ. 50,000 - 1,60,000

தகுதி: சிஏ, சிஎம்ஏ முடித்து 12 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, குழு விவாதம் மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: www.ngel.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 5.5.2026

## மே மாதம் (2026)

# வார ராசிபலன்

### 03.05.2026 முதல் 09.05.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் தனாதிபதி சுக்கிரன் சஞ்சாரத்தால் பண வரத்து அதிகமாகி பொருளாதாரம் ஓங்கும். எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். சுதந்திர எண்ணம் உண்டாகும். சின்ன சின்ன விஷயங்களில் கூட மன நிறைவு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் தங்கள் வியாபாரம் தொடர்பாக பயணம் செல்ல நேரிடலாம். போட்டிகள் விலகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். பண வரத்தும் திருப்தி தரும். மேலிடம் உங்களிடம் நல்ல அணுகு முறையை நீட்டிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். பெண்களுக்கு சேமிக்கும் பழக்கம் அதிகரிக்கும்.

கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்..

### ரிஷபம்

இந்த வாரம் ராசிநாதன் சுக்கிரன் சஞ்சாரத்தால் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக எதையும் செய்வது நல்லது. அதிக முயற்சி செய்ய வேண்டி இருக்கும். பயணங்கள் ஏற்படலாம். அனைத்து தடைகளும் அகலும். தொழில், வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகலாம். பணியாளர்கள் செயல்கள் உங்களுக்கு கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணிச் சுமை காரணமாக அதிக நேரம் வேலை பார்க்க வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் மன நிறைவு ஏற்படும் வகையில் எல்லாம் நடக்கும். வாழ்க்கை துணையால் நன்மை உண்டாகும். குழந்தைகளுக்காக பாடுபடுவீர்கள். பெண்களுக்கு கடின முயற்சியின் பேரிலேயே காரியங்கள் பெற்றி பெறும். அரசியல்வாதிகளுக்கு மேலிடத்தில் இருந்து உங்களுக்கு சந்தோஷமான செய்திகள் வந்து சேரும். கலைத் துறையினருக்கு வருமானம் நன்றாக இருக்கும். .

### மிதுனம்

இந்த வாரம் ராசிநாதன் புதனின் லாபஸ்தான சஞ்சாரத்தால் குழப்பங்கள் நீங்கி மனதில் தெளிவு உண்டாகும். முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். எதிர்பார்த்த அளவு வேகம் இருக்கும். பணவரத்து தாமதப்படலாம். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சனைகள் அகலும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். உழைப்பு அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் வீண் பேச்சால் மன வருத்தம் உண்டாகலாம். வீண் பிரச்சனைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நன்மை தரும். உறவினர் நண்பர்களிடம் பழகும்போது கவனம் தேவை. பெண்களுக்கு குழப்பங்கள் நீங்கள் மனதில் தெளிவு உண்டாகும்.

கலைத் துறையினருக்கு காரிய வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம்.

### கடகம்

இந்த வாரம் ராசிநாதன் சந்திரன் சஞ்சாரத்தால் எந்த ஒரு வேலையை செய்து முடிப்பதிலும் இருந்த தடை தாமதம் நீங்கும். வீண் விவகாரங்களில் தலையிடுவதையும் மற்றவர்களுக்காக வாதாடுவதையும் தவிர்ப்பது நல்லது. வருமானம் கூடும். மன திருப்தி உண்டாகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு புதிய ஆர்டர்கள் பெறுவதில் இருந்த தாமதம் நீங்கும். வரவு இருந்த போதிலும் வியாபாரம் தொடர்பாக திடீர் முதலீடு செலவு உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பது நல்லது. மேலிடத்துடன் கனிவை அனுசரிப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை.. பெண்களுக்கு அடுத்தவர்கள் பிரச்சனைகளை தீர்க்க முயற்சிகளை மேற்கொள்வதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

### சிம்மம்

இந்த வாரம் தனஸ்தானம் வலுவாக இருப்பதால் பண வரத்து எதிர்பார்த்ததை போல இருக்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும்போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். எதிர்பார்த்த அளவு வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். கூட்டு தொழில், வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நன்மை தரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். மேல் அதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு விவேகமாக செயல்படுவது வெற்றியை தரும்.

கலைத்துறையினருக்கு எதிர்பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. அரசியல்வாதிகளுக்கு நினைக்கும் காரியங்கள் தள்ளிபோகலாம். வீண் அலைச்சல் வேலைப் பளு இருக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கூறுவதை கவனமாக கேட்டு அதன்படி நடப்பது வெற்றிக்கு உதவும்.

### கன்னி

இந்த வாரம் ராசி பலமாக இருக்கிறது. எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தகராறுகள் வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எண்ணப்படி எல்லாம் நடக்கும்.

தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உங்களது செயல்களுக்கு தடை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகி விடுவார்கள். பண வரத்து கூடும். குடும்பத்தில் இருந்த மன வருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். திருமண முயற்சி கைகூடும். பெண்கள் எந்த காரியத்தையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள்.

கலைத்துறையினருக்கு பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக நடந்து முடியும். அலைச்சல் குறையும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த காரியங்கள் தடைகளின்றி முடியும். மாணவர்களுக்கு போட்டிகள் குறையும். எதிலும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள்..

### துலாம்

இந்த வாரம் ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சாரம் இருக்கிறார். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் காரியங்கள் சாதகமாக நடைபெறும். பண தேவை உண்டாகும். அடுத்தவர்களால் தொல்லைகள் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலையில் டென்ஷனும் வீண் அலைச்சலும் இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பண வரத்து எதிர்பார்த்ததை விட குறையக் கூடும்.

கடன் விஷயங்களை தள்ளிபோடுவது நல்லது. புதிய நபர்களுக்கு பொருட்களை சப்ளை செய்யும் போது கவனம் தேவை. எதைப் பேசுவதாக இருந்தாலும் பேச்சில் நிதானம் தேவை. வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் டென்ஷன் உண்டாகலாம். பெண்களுக்கு எதிர்பார்க்கும் தகவல் தாமதப்படலாம்.

கலைத்துறையினருக்கு சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் அகலும். அரசியல்வாதிகளுக்கு சிக்கல்கள் தீர்வதில் இருந்த தாமதம் நீங்கும். .

### விருச்சிகம்

இந்த வாரம் பேச்சு திறமையால் காரிய வெற்றிகள் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சின்ன விஷயங்களால் மன நிறைவு உண்டாகும். மற்றவர்களால் அமைதியின்மை உண்டாகலாம். அடுத்தவர் பேச்சை கேட்பதை குறைப்பது நல்லது.

எந்த செயலையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கி விருத்தியடையும்.

பொருட்களை வெளியூருக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் கவனமுடன் பழகுவது நல்லது.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். திட்டமிட்டு செயல்படுவது நல்லது. பெண்களுக்கு பேச்சு திறமையால் காரியங்களை எளிதாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

கலைத்துறையினருக்கு யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. அரசியல்வாதிகளுக்கு எல்லாவித வசதிகளும் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடை நீங்கி முன்னேற்றம் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

### தனுசு

இந்த வாரம் பணம் வருவது அதிகரிக்கும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகளில் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் நன்மை உண்டாகும். தேவையான சரக்குகள் கையிருப்பு இருக்கும். துணிச்சலாக முயற்சிகள் மேற்கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். மேல் அதிகாரிகளால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். குடும்பத்தில் இருந்து வந்த இறுக்க நிலை மாறும். பெண்களுக்கு காரியங்களை துணிச்சலாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். கலைத் துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற துணிச்சலாக முயற்சிகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும்..

### மகரம்

இந்த வாரம் ராசிநாதன் சஞ்சாரத்தால் கோபமாக பேசுவதை தவிர்த்து நிதானமாக பேசி செயல்படுவது காரிய வெற்றிக்கு உதவும். எந்த விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்கள் செல்லும்போதும் வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நன்மை தரும். பண வரவு இருக்கும். குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது நன்மை தரும்.

குழந்தைகளிடம் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும். பெண்களுக்கு கோபத்தை தவிர்த்து நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும்.

கலைத் துறையினருக்கு பாராட்டுகள் வரும். வெளிநாடு பயணங்களும் இனிதே அமையும். அரசியல்வாதிகளுக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சனைகள் விலகும். திடீர்ச் செலவுகள் ஏற்படும்.

### கும்பம்

இந்த வாரம் திரிகோணம் மிக பலமாக இருக்கிறது. சில முக்கிய முடிவுகள் என்பதன் மூலம் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி காண்பீர்கள். வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாக நேரிடலாம். மற்றவர்களின் செய்கையால் கோபம் ஏற்படலாம். நிதானம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். வீடு மனை ஆகியவற்றை வாங்குவதற்கு இருந்து வந்த தடைகள் நீங்கும்.

தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு லாபம் தராவிட்டாலும் வருமானத்திற்கு குறைவு இருக்காது. தொழில் விரிவாக்கம் செய்யும் திட்டத்தை தள்ளி போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. மற்ற விஷயங்களில் தலையிடாமல் இருப்பது வீண் பிரச்சனை வராமல் தடுக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாக கோபத்தை குறைப்பது நல்லது.

பெண்களுக்கு அறிவுபூர்வமாக செயல்பட்டு சில முக்கிய முடிவு எடுப்பதன் மூலம் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த காரியம் நிறைவேறும். கலைத் துறையினருக்கு பாதுகாப்பு அவசியம்.

### மீனம்

இந்த வாரம் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். செவ்வாய் சஞ்சாரம் இடமாற்றத்தை ஏற்படுத்தும். எடுத்த காரியம் தாமதப்படுகிறதே என்ற கவலை நீங்கும்.

இரவில் நீண்ட நேரம் கண் விழிக்க வேண்டி வரலாம். தொழில் வியாபாரம் எதிர்பார்த்ததை விட குறைவான லாபம் தரும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் எப்போதும் பிசியாக காணப்படுவார்கள். செலவுகள் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் விவகாரங்களில் கொடுக்கல் வாங்கலிலும் எச்சரிக்கை தேவை. பொறுப்புகள் கூடும்.

குடும்பத்தில் இருப்பவர்களால் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். வாழ்க்கை துணையின் உடல் நிலையில் நீடித்து வந்த ஆரோக்கிய குறைபாடு பூர்த்தியாகும். பெண்களுக்கு பயணங்கள் செல்ல நேரிடலாம். எடுத்த வேலையை செய்து முடிக்க கால தாமதமாகலாம். கலைத் துறையினருக்கு வெளி நாடு வாய்ப்புகள் தேடி வரும். அரசியல்வாதிகள் உங்கள் கடமைகளைச் சரி வர செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும். அறிவாற்றலும் செயல் திறமையும் கூடும். உழைப்பு வீண் போகாது.

# கொடைக்கானலில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு: சுற்றுலா பயணிகள், உள்ளூர் மக்கள் தவிப்பு



**திண்டுக்கல், மே 3:**
திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள பங்க்குகளில் பெட்ரோல், டீசலுக்கு திடீரென தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள், உள்ளூர் மக்கள் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

கோடை விடுமுறையை முன்னிட்டு கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் குவிந்து வருகின்றனர். இதனால் சுற்றுலா இடங்கள் மட்டுமின்றி கொடைக்கானல் நகர் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) காலை முதலே கொடைக்கானலின் நுழைவு பகுதியான வெள்ளிநீர் வீழ்ச்சி அருகே டோல்கேட்டில் வாகனங்கள் நீண்டவரிசையில் காத்திருந்தன.

கொடைக்கானல் டோல்கேட்டை கடக்கவாகனங்கள் ஒரு மணி நேரத்துக்கு மேலாக காத்திருந்தன.

இதனால் மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு நூற்றுக்கணக்கான வாகனங்கள் மலைச்சாலையில் அணிவகுத்து நின்றன. சுற்றுலாப் பயணிகளின் வருகை, உள்ளூர் மக்களின் தேவை காரணமாக இங்குள்ள 3 பங்க்குகளில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதில், ஒரு பங்க்கில் முழுமையாக பெட்ரோல், டீசல் தீர்ந்துவிட்டன. எரிபொருள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் வாகன ஓட்டிகள் போட்டிப் போட்டு கொண்டு எரிபொருளை நிரப்பி வருகின்றனர். இதனால் பெட்ரோல் பங்க்குகளில் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன.

சுற்றுலா பயணிகளின் நிலைமையை கருத்தில் கொண்டு தட்டுப்பாடின்றி எரிபொருள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## க்ரைம் கார்னர்

### உளுந்தூர்பேட்டை அருகே 60 அடி ஆழ கிணற்றில் இளம்பெண் சடலம் மீட்பு!

**உளுந்தூர்பேட்டை, மே 3:**
கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டை அடுத்த பா.கிள்ளனூர் கிராமத்தில், மாயமான 19 வயது இளம்பெண் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பா.கிள்ளனூர் கிராமத்தைச் சேர்ந்த வீரமணி என்பவரின் மகள் அபிஷா (19), கூவாகம் கூத்தாண்டவர் கோயில் சித்திரை திருவிழாவுக்குச் செல்வதாகக் கூறி விட்டுச் சென்றுள்ளார். ஆனால், நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் அவரைத் தேடி வந்த நிலையில், அதே கிராமத்தைச் சேர்ந்த அஷ்ரப் அலி என்பவரது விவசாயக் கிணற்றில் பெண் ஒருவரின் சடலம் மிதப்ப தாகத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு வந்த பெற்றோர், அது காணாமல் போன தங்கள் மகள் அபிஷா தான் என்பதை உறுதி செய்து கதறி அழுதனர். உளுந்தூர்பேட்டை தீய ணைப்புத் துறையினர் 60 அடி ஆழ கிணற்றில் இறங்கி, பல மணி நேரம் போராடி உடலை மீட்டனர். இச்சம்பவம் குறித்து களமருதூர் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். திருவிழாவிற்குச் சென்ற இளம்பெண் சடலமாக மீட்கப்பட்டது கொலையா? அல்லது தற்கொலையா? என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஆன்லைனில் பணத்தை இழந்தவர் தற்கொலை

**சேலம், மே 3:**
மேட்டூர் அருகே கொளத்தூரில் ஆன்லைன் வர்த்த கத்தில் 35 லட்சம் ரூபாய் பணத்தை இழந்த நபர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் பகுதியை சேர்ந்த வர் நாராயணன்(40). இவர் சிம்கார்டு விற்பனை மற்றும் ரீசார்ஜ் கடை நடத்தி வந்தார். இவருக்கு திருமணம் ஆகி தமிழ்(32) என்ற மனைவியும் 13 வயதில் ஒரு மகளும், 6 வயதில் ஒரு மகனும் உள்ளனர். நாராயணன் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபட்டு 35 லட்சம் ரூபாய் பணத்தை இழந்து மன உளைச்சலில் இருந்துள் ளார்.

இந்நிலையில் புதனன்று காலை வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு வீட்டிலிருந்து இரு சக்கர வாகனத்தில் மேட்டூருக்கு வந்துள்ளார் மாலை அவரது மனைவி செல்போனுக்கு தொடர்பு கொண்ட போது அழைப்பை ஏற்கவில்லை. மேட்டூர் அருகே கொளத்தூரில் உள்ள அவரது நண்பர் வடிவேல் மூலம் தேடிப் பார்த்தபோது மாங்காடு வாட்டர் டேங்க் அருகில் கோபிநாத் என்பவர் விவசாய நிலத்தில் நாராயணன் விஷம் அருந்தி உயிரிழந்துள்ளார். இதுகுறித்து கொளத்தூர் போலீ சாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் நாராயணன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோத னைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக கொளத்தூர் போலீ சார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

### புதுச்சேரி சிறுமி கொலை: மே 5-இல் குற்றவாளிக்கு தண்டனை அறிவிப்பு!

**புதுச்சேரி, மே 3:**
புதுச்சேரி முத்தியால்பேட்டை சோலைநகர் பகுதியில், 2024 மார்ச்சில் 9 வயது சிறுமி கொலை செய்யப்பட்டு கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் கால்வாயில் கண்டெடுக்கப்பட்டார். இச்சம்பவத்தில் கருணாஸ் (19) என்ற இளைஞர் கைது செய்யப்பட்ட நிலையில், அவரை குற்றவாளி என நீதிபதி உறுதி செய்துள்ளார். தண்டனை விவரம் மே 5 அன்று அறிவிக்கப்படும் எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

அப்போது, குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என அரசுத் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். இந்த வழக்கில் மற்றொரு குற்றவாளியான விவேகானந்தன் (57) என்பவர், சிறையிலேயே தற்கொலை செய்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### மின்னணு சிகரெட் புகைத்த வீரருக்கு அபராதம்

**புதுடெல்லி, மே 3:**
ஐபிஎல் தொடரில் செவ்வாயன்று ராஜஸ்தான் – பஞ்சாப் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியின் போது, ராஜஸ்தான் கேப்டன் ரியான் பராக் (24) ஓய்வறை யில் வேப்பிங் என அழைக்கப்படும் மின்னணு சிகரெட் புகைத்தது வீடியோ ஆதாரத்துடன் அம்பலமாகியது. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக ஐபிஎல் நிர்வாகம் ரியான் பராக் மீது அபராதம் மற்றும் தண்டனை புள்ளிகளை விதித்து கடும் நடவடிக்கை எடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், “முல்லன்பூரில் (பஞ்சாப்) நடைபெற்ற போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் ரியான் பராக் செய்தது கேமராவில் சிக்கியது. இது விளை யாட்டின் நற்பெயருக்குக் கேடு விளைவிக்கும் நடத்தை தொடர்பான பிரிவு 2.21-இன் கீழ் (நிலை 1 குற்றம்) வரும் என்பதால் போட்டி ஊதியத்தில் 25 சத வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு ஒரு தண்டனைப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது” என அதில் கூறப்பட்டுள்ளது. பிசிசிஐ-யும் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு போட்டிக்கு இடையே புகைபிடித்த விவகாரத்தை இத்துடன் விட்டுவிடப் போவதில்லை என்றும், ஐபிஎல் தொடரின் நற்பெயரைப் பாதுகாக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அணி, அதன் அதிகாரிகள் மற்றும் வீரர்கள் மீது மேலும் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான வழிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ஆராய்ந்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது.

### தமிழ்நாடு கிரிக்கெட் வாரியத்தில் பயிற்சியாளர் வேலை

**புதுடெல்லி, மே 3:**
தமிழ்நாடு கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,”தமிழக அணியை வழிநடத்த பயிற்சியாளர் தேவைப்படுகிறது. வெள்ளைப் பந்து, சிவப்பு பந்து போட்டிகளுக்கான பயிற்சியாளர்கள் தேர்வு விரைவில் நடைபெற உள்ளது. 60 வயதுக்குக் கீழான, பிசிசிஐ லெவல் 2 பயிற்சியாளர் சான்றிதழ் அல்லது அதற்கு இணையான வேறு ஏதேனும் ஒரு சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும். இதற்காக விண்ணப்பிக்க மே 10ஆம் தேதி கடைசி நாள் ஆகும். சீனியர், ஜூனியர் தேர்வுக்குழுவுக்கும் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது” என அதில் கூறப்பட்டுள்ளது.

### மருதுபாண்டியர் கல்லூரியில் இளையோர் கபாடி போட்டி

**தஞ்சாவூர்,மே 3:**
தஞ்சை மருதுபாண்டியர் கல்லூரியில் 18 வயதுக்குட்பட்ட இளையோருக்கான மாநில அளவிலான கபாடி போட்டி நடைபெற்றது. இப்போட்டியை மருதுபாண்டியர் கல்வி நிறுவனங்களின் செயலரும், நிர்வாக அறங்காவலருமான கொ. மருதுபாண்டியன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் மா. விஜயா, துணை முதல்வர் ரா. தங்கராஜ், ஒருங்கிணைப்பாளர் ல. மதுகிருத்திகா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்போட்டியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் 32 அணிகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தின. இறுதியில், திருச்சி எஸ்.எம் பள்ளி அணி அபாரமாக விளையாடி முதலிடத்தைக் கைப்பற்றி சாம்பியன் பட்டத்தை வென்றது.

# மூளைச்சாவு அடைந்த இளைஞரின் உடல் உறுப்புகள் தானம்: 7 பேர் பயன்

**தஞ்சாவூர், மே 3:**
திருவாரூர் மாவட்டம் மருதபட்டினம் தியாகி சின்ன சாமி தெருவைச் சேர்ந்தவர் செந்தில் மகன் சேரன்(20). இவர் திருவாரூரில் ஏப். 24 அன்று இரவு 7 மணியளவில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழுந்ததால், தலையில் பலத்த காயமடைந்து, திரு வாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், பின்னர் 25 ஆம் தேதி தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யிலும் சேர்க்கப்பட்டார். மருத்துவர்களின் கண் காணிப்பில் இருந்த சேரன் செவ்வாய்க்கிழமை மூளைச் சாவு அடைந்தார். இதையடுத்து, அவரு டைய உடல் உறுப்புகளைத் தானமாக பெறுவது தொடர் பாக அவரது தந்தை செந்தில், தாய் ரேணுகா, சகோதரர் விஷால் ஆகி யோரிடம் மருத்துவர்கள் எடுத்துக் கூறினர். குடும்பத்தினர் ஒப்புதல் அளித்த பின்னர் சேரனின் உடலிலிருந்து கல்லீரல், சிறுகுடல், சிறுநீரகங்கள், கண்கள், தோல் ஆகியவை அறுவை சிகிச்சை மூலம் இரவு அகற்றப்பட்டன. இதில், ஒரு சிறுநீர கம் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை க்கும், மற்றொரு சிறுநீரகம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கும், கல்லீ ரல் திருச்சி தனியார் மருத்து வமனைக்கும், சிறுகுடல் சென்னை தனியார் மருத்து வமனைக்கும், கருவிழிகள் தஞ்சாவூர் அரசு இராசா மிராசுதார் மருத்துவ மனைக்கும், தோல் மதுரை தனியார் மருத்துவமனைக் கும் தானமாக வழங்கப் பட்டன. உடல் உறுப்புகள் தஞ்சாவூர் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலம் காவல் துறை உதவியுடன் விரை வாக அனுப்பி வைக்கப் பட்டன. இதன் மூலம் 7 பேர் பயனடைந்தனர்.

இதன் பின்னர், சேர னின் உடலுக்கு அரசு சார்பில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் எம். பூவதி தலைமையில், மருத்துவக் கண்காணிப்பாளர் சி.ராம சாமி, நிலைய மருத்துவ அலுவலர்கள் ஏ.செல்வம், முகமது இத்ரிஷ் உள்ளிட் டோர் இறுதி மரியாதை செய்தனர்.

# தமிழகத்தில் மே 8 வரை சில இடங்களில் கனமழை பெய்யவும், வெப்பநிலை குறையவும் வாய்ப்பு



**சென்னை, மே 3:**
தமிழகத்தில் இன்று முதல் மே 8-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இதன் காரணமாக அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலேயே இருக்க வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்கு ராஜஸ்தான் முதல் குமரிக்கடல் வரை, கிழக்கு ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், விதர்பா, தெலங்கானா, ராயலசீமா மற்றும் உள்தமிழகம் வழியாக, சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (மே 3) ஓரிரு இடங்களிலும், 4, 5, 6 தேதிகளில் ஒருசில இடங்களிலும், 7-ம் தேதி ஓரிரு இடங்களிலும், 8-ம் தேதி பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கி.மீ. வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று கோவை, திருப்பூர் மாவட்டங்களின் மலைப் பகுதிகள் மற்றும் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலும், 4-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

5-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும், 6-ம் தேதி நீலகிரி, கோவை மாவட்ட மலை பகுதிகள், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 7-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர் மாவட்ட மலை பகுதிகள், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலும், 8-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் இன்று அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். 5, 6 தேதிகளில் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீட் தேர்வர்கள் கவனத்துக்கு! முடி வெட்டுவதில் கட்டுப்பாடு உண்டா?

**சென்னை, மே 3:**
நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வு மே 3ஆம் தேதி நடைபெறவிருக்கிறது.

பொதுவாகவே நீட் மற்றும் ஜேஇஇ நுழைவுத் தேர்வுகளின் போது மாணவர்களிடம் காட்டப்படும் கெடுபிடிகள் பேசுபொருளாகி வரும் நிலையில், மாணவர்களும் பெற்றோர்களும் ஓரளவுக்கு அதற்கேற்ப மாறி வருகிறார்கள்.

நீட் தேர்வர்கள், வெளியில் தெரியும்படியான குடிநீர் பாட்டில் கொண்டு வரலாம்.

மத நம்பிக்கைக்கு உரிய அடையாளச் சின்னங்களை அணிந்து வருவதாக இருந்தால், முன்கூட்டியே தேர்வு மையத்துக்கு வந்து அது பற்றி தெரிவிக்க வேண்டும்.

கைவைத்த சட்டைகள் அணியலாம். சாதாரண ஆடைகள், கால்களை முழுமையாக மறைக்காத தளர்வான காலணிகளை அணிந்து வர வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

கால்களை மூடிய காலணிகளை அணிந்து வந்தால் அவற்றை தேர்வுக்கூடத்துக்கு வெளியே விட்டுவிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நுழைவுத் தேர்வ பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நடைபெற்றாலும்கூட, மாணவர்கள் பமுற்பகல் 11 மணி முதல் நுழைவுக் கூடத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள். 1.30 மணிக்கு மேல் வரும் யாரும் தேர்வுக் கூடத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பெரும்பாலும் மாணவிகளும் தலையை வெறுமனே வாரி பின்னி வைத்துக் கொள்ள லாம்.

சில தேர்வுக் கூடங்களில் சுருட்டை முடி இருப்பவர்களை தேர்வுக்கூட சோதனையாளர்கள் கூடுதலாக சோதனை செய்வதும் நிகழ்கிறது. இதற்காக சுருட்டை முடி இருப்பவர்கள் பதற்றம் அடையத் தேவையில்லை. வழக்கமான ஒன்றுதான் என்று அறிந்துகொள்ளுங்கள்.

முக தோற்றத்தையே மாற்றும் அல்லது நுழைவுக் கூட அனுமதிச் சீட்டில் இருக்கும் புகைப்படத்தில் இருப்பவர்தானா என்பதையே சந்தேகிக்கும் வகையிலான முடி திருத்தம் அல்லது முடி அலங்காரம் செய்வதை மாணவர்கள் தவிர்த்துக் கொள்ளலாம்.

மற்றபடி, மாணவர்கள் முடி திருத்தம் செய்வதில் எந்த கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுவதில்லை.

ஒருவேளை, நீண்ட சடையுடன் இருக்கும் புகைப்படம் நுழைவுச் சீட்டில் இருந்து, பாய் கட்டில் அந்த மாணவி உள்ளே நுழையும்போது நிச்சயம் சந்தேகம் ஏற்படும். இதுபோன்ற மாற்றங்களைத் தவிர்ப்பது நலம்.

## வணிகச் செய்திகள்

### வணிக சிலிண்டர் விலை அதிகரிப்பு: உணவு, தேநீர் விலை, டெலிவரி கட்டணம் மேலும் உயரும்

**புதுடெல்லி, மே 3:**
ஈரான் போர்ச் சூழலால் சர்வதேச சந்தையில் நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு ரூ.993 உயர்த்தியுள்ளது. கடந்த 3 மாதங்களில் மட்டும் வணிக சிலிண்டர் விலை 81 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதனால், ஓட்டல்களில் உணவு மற்றும் தேநீர் விலை மேலும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதால் உலக அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், 19 கிலோ எடையுள்ள வணிகப் பயன்பாட்டுக்கான எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு நேற்று ரூ.993 வரை உயர்த்தியுள்ளது. இதனால், சென்னையில் வணிக சிலிண்டர் விலை ரூ. 990.50 அதிரிகரித்து ரூ.3,237-க்கு விற்பனையாகும். தலைநகர் டெல்லியில் ரூ.2,078.50-க்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர், இனி ரூ.3,071.50-க்கு விற்பனை செய்யப்படும். மும்பையில் ரூ.2,031-ல் இருந்து ரூ.3,024 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் போர் தொடங்கியதில் இருந்து வணிக சிலிண்டர் விலை உயர்த்தப்படுவது இது 3-வது முறை. மார்ச் மாதத்தில் ரூ.144, ஏப்ரல் 1-ல் ரூ.200 என உயர்த்தப்பட்ட நிலையில், தற்போது மீண்டும் விலை அதிகரித்துள்ளது. வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை உயர்வு உணவகங்கள் மற்றும் சிறு தொழில்களைப் பெரிதும் பாதிக்கும் என அஞ்சப்படுகிறது.

# மணிப்பூரில் 23 சட்டவிரோத பதுங்கு குழிகளை அழித்த பாதுகாப்புப் படையினர்!

**புதுடெல்லி, மே 3:**

மணிப்பூரில் உக்ருல் மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் 23 சட்டவிரோத பதுங்கு குழிகளை அழித்ததோடு, தெங்னௌபால் மாவட்டத்தில் 18 வெடிகுண்டுகளை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.



லிட்டன் காவல் நிலையப் பகுதியில் உள்ள மலை கிராமங்களான மோங்கோட் செபு, ஷோங்பெல், முல்லம், சிரராராகோங் மற்றும் ரிங்கு ஆகிய பகுதிகளில் இருந்த இந்தப் பதுங்கு குழிகள் வியாழக்கிழமை (ஏப்ரல் 30) கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன. மேலும், அங்கிருந்து துப்பாக்கி மற்றும் தோட்டா போன்ற பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதனிடையே, புதன்கிழமை (ஏப்ரல் 29) அன்று நடைபெற்ற தேடுதல் பணியில், தெங்னௌபால் மாவட்டத்தில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர்.

மணிப்பூரில் நிலவி வரும் இன மோதல்களுக்கு மத்தியில், வன்முறையைக் கட்டுப்படுத்தவும் அமைதியை நிலைநிறுத்தவும் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து இதுபோன்ற தேடுதல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டு பிப்ரவரியில் உக்ருல் மாவட்டத்தில் உள்ள டாங்குல் நாகா மற்றும் குகி சமூகத்தினரிடையே வன்முறை வெடித்தது. இதில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் சுமார் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு 30-க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மிசோரமில் விடுவிக்கப்பட்ட 13 கைதிகள் மீண்டும் கைது

**ஐஸ்வால், மே 3:**

மிசோரம் மாநிலத்தில் லுங்லே மாவட்டச் சிறை உள்ளது. இங்கு அடைக்கப்பட்டிருந்த 16 தண்டனைக் கைதிகள், போலி நீதிமன்ற ஆவணங்களைப் பயன்படுத்தி கடந்த 4 மாதங்களில் மோசடியாக விடுவிக்கப்பட்டது விசாரணைக்கு பிறகு வெளிச்சத்துக்கு வந்தது.

இதையடுத்து லுங்லே மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற அதிகாரிகள், கைதிகளை விடுவிக்க அனுமதிக்கும் நீதிமன்ற உத்தரவுகளை தேடிய போது, எந்த ஆவணமும் இல்லை.

கடந்த ஜனவரியில் தொடங்கிய இந்த மோசடி கடந்த வாரம் வரை கண்டறியப்படாமலேயே இருந்துள்ளது. இது தொடர்பாக ஏப்ரல் 25-ம் தேதி காவல் துறையிடம் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் வேட்டையில் இதுவரை 13 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு கைதி இறந்துவிட்ட நிலையில் இருவர் இன்னும் தலைமறைவாக உள்ளனர்.

உண்மையானநீதிமன்றஉத்தரவுகளைப்போலவேஇவர்கள் போலி விடுதலை உத்தரவுகளை பயன்படுத்தியுள்ளனர். இதற்கு ஜெர்மையா லல்தங்துரா (22) என்ற கைதி மூளையாக செயல் பட்டதாக தெரியவந்துள்ளது.

இவர் முதலில் சக கைதிகளின் நம்பிக்கையைப் பெற்றதாகவும் பிறகு சிறைக்குள் இருந்த சிலரின் உதவியை மிகத் திறமையாகப் பயன்படுத்திக்கொ ண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரத்தில் மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பேரவைக்கு மதுபோதையில் வந்த முதல்வர் பகவந்த் மான்: பாஜக எம்.பி. குற்றச்சாட்டு

**சண்டிகர், மே 3:**

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த ராகவ் சத்தா உள்ளிட்ட 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் அண்மையில் அந்தக் கட்சியில் இருந்து விலகி பாஜகவில் சேர்ந்தனர். இதனால் பஞ்சாப் ஆம் ஆத்மி கட்சியில் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. பஞ்சாப் மாநில சட்டப்பேரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முதல்வர் பகவந்த் மான் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிலையில் பேரவைக் கூட்டத்துக்கு முதல்வர் பகவந்த் மான் மது அருந்திவிட்டு வந்ததாக காங்கிரஸ், அகாலி தளம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

இதுதொடர்பாககாங்கிரஸ்மூத்ததலைவர் சுக்பால்சிங்கைரா தனது எக்ஸ் தளத்தில், "சட்டப்பேரவையில் முதல்வர் பகவந்த் மான்போதையில்இருந்தார். அவருக்குமதுபோதைபரிசோதனை நடத்தப்பட வேண்டும். நாங்கள் (காங்கிரஸ்) அவையில் இருந்து வெளிநடப்பு செய்துவிட்டோம். மேலும், நாங்களே முன்வந்து அந்தப் பரிசோதனையை மேற்கொள்ளவும் தயாராக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் சிரோமணி அகாலி தளம் கட்சி தனது எக்ஸ் தளத்தில், "முதல்வரின் நடத்தையைச் சிரோமணி அகாலி தளம் வன்மையாகக் கண்டிக்கிறது; இந்நாளில் அவர் மது அருந்திய நிலையில் வந்திருக்கக் கூடாது. அவரை இன்றே ஒட்டுமொத்த பஞ்சாப் மாநில மக்களின் முன்னிலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்" என குறிப்பிட்டுள்ளது. பாஜக மாநிலங்களவை உறுப்பினர் ஸ்வாதி மாலிவால் தனது எக்ஸ் தளத்தில், "ஜனநாயகத்தின் ஆலயமாகத் திகழும் பஞ்சாப் சட்டப்பேரவைக்கு, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் மீண்டும் மது போதையில் வந்துள்ளார். இது மிகப்பெரிய அவமானம். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர் மது அருந்தியிருந்தாரா என்பது தொடர்பாக உடனடியாக மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# ஸ்டெல்த் தொழில்நுட்பத்துடன் தயாரிப்பு: 'மகேந்திரகிரி' போர்க்கப்பல் இந்திய கடற்படையில் இணைப்பு

**மும்பை, மே 3:**

மத்திய அரசின் 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின் கீழ், எதிரி நாடுகளின் ரேடார்களில் சிக்காத 'ஸ்டெல்த்' தொழில்நுட்பத்துடன் கூடிய 7 அதிநவீன போர்க் கப்பல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 6-வது போர்க்கப்பலான 'மகேந்திரகிரி' கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது.




மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில், இந்த பிரமாண்ட போர்க்கப்பல் இந்திய கடற்படையிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

'மகேந்திரகிரி' போர்க்கப்பல் முற்றிலும் இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு, முழுக்க முழுக்க உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அதிநவீன ஏவுகணைகள், எதிரி நாடுகளின் நீர்மூழ்கி கப்பல்களை கண்டறியும் கருவிகள் மற்றும் நவீன துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. இது இந்திய கடல் எல்லையை பாதுகாப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இந்த போர்க்கப்பல் இந்திய பாதுகாப்பு துறையில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது.

# 'தெலங்கானா ரக்ஷன சேனா': கவிதா கட்சிப் பெயர் மாறியது

**ஹைதராபாத், மே 3:**

தெலங்கானா முன்னாள் முதல்வரும், பிஆர்எஸ் கட்சியின் தலைவருமான கே.சந்திரசேகர ராவின் மகள் கவிதா. நிஜாமாபாத் மக்களவை உறுப்பினர், தெலங்கானா மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார்.



குடும்ப பிரச்சினை காரணமாக பிஆர்எஸ் கட்சியை விட்டு விலகினார். கடந்த 25-ம் தேதி தெலங்கானா ராஷ்டிர சேனா என்ற பெயரில் தனிக் கட்சி தொடங்கினார். தேர்தல் ஆணையத்தின் பதிவுக்காக 5 பெயர்களை பரிந்துரை செய்திருந்தார். இதில் தெலங்கானா ரக்ஷன சேனா என்ற பெயர் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்திடம் இருந்து நேற்று கடிதம் வந்துள்ளது.

இதனை கவிதா 'எக்ஸ்' தளத்தில் தெரிவித்துள்ளார். அப்பதிவில் டிஆர்எஸ் எனும் பெயர் மீண்டும் வந்ததற்கு கடவுளுக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

கட்சியின் இப்பெயர் குறித்து இன்னும் 30 நாட்கள் வரை யாரிடமிருந்தும் எவ்வித ஆட்சேபமும் வரவில்லை எனில், இந்தப் பெயரே கட்சியின் பெயராக அதிகாரப்பூர்வகாக அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# கேரளாவில் 2 வாரங்களில் பாம்புக்கடிக்கு 10 பேர் உயிரிழப்பு

**திருவனந்தபுரம், மே 3:**

கேரளம் மாநிலம் இயற்கை அழகு சூழ்ந்து காணப்படுவதால் 'கடவுளின் தேசம்' என அழைக்கப்படுகிறது. அதே சமயம் இந்தியாவில் மேற்கு வங்காளத்துக்கு அடுத்து விஷ பாம்புகள் அதிகம் இருக்கும் மாநிலங்களில் 2-வது இடத்தில் கேரளம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மக்கள் பாம்புக்கடியால் பாதிக்கப்படுகின்றனர். கேரளம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவி வருகிறது. கேரளாவின் பல மாவட்டங்களில் கடுமையான கோடை வெப்பம் காரணமாக நிழல், குளிர்ச்சியான சூழல் மற்றும் இரைகளை தேடி பாம்புகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

திருவனந்தபுரத்தில் பாம்புக்கடியால் சிகிச்சை பெற்றுவந்த 64 வயது முதியவர் நேற்று மருத்துமனையில் உயிரிழந்தார். பார்வை குறைபாடு கொண்டவரான அவர் இரவு உணவு சாப்பிட்ட பிறகு வீட்டை விட்டு வெளியே வந்தபோது பாம்பு கடித்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இதையடுத்து கேரளாவில் கடந்த 2 வாரங்களில் திருவனந்தபுரம், ஆலப்புழா, திருச்சூர், காசர்கோடு, இடுக்கி, கண்ணூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பதிவான பாம்புக்கடி மரணங்களின் எண்ணிக்கை 3 குழந்தைகள் உள்பட 10ஆக உயர்ந்துள்ளது. பாம்புக்கடியால் பலரும் மாநிலம் முழுவதும் பல்வேறு மருத்துமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

# நாடு முழுவதும் மே மாதம் அதிக மழைப்பொழிவு இருக்கும்: இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

**புதுடெல்லி, மே 3:**

2026 மே மாதத்தில் இந்தியா முழுவதும் வழக்கத்தை விட அதிகமான மழைப்பொழிவு இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மே மாதத்திற்கான ஒட்டுமொத்த மழைப்பொழிவு சராசரி அளவை விட 110 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, மே மாதத்திற்கான சராசரி மழைப்பொழிவு 64.1 மி.மீ ஆகும். இந்த ஆண்டு பெரும்பாலான பகுதிகளில் இயல்பை விட அதிக மழை பெய்யக்கூடும் என்பதால், இது ஆரம்ப கால வெப்ப அலைகளில் இருந்து மக்களுக்குப் பெரும் நிம்மதியை அளிக்கும். இருப்பினும், மழைப் பரவல் நாடு முழுவதும் சீராக இருக்காது என்றும், வடகிழக்கு மற்றும் இந்தியாவின் சில பகுதிகளில் வழக்கத்தை விடக் குறைவான மழையே பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை செயல்பாடுகளைப் பொறுத்தவரை, மே 5-ஆம் தேதி வரை மேற்கு வங்கம், சிக்கிம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இடி, மின்னல் மற்றும் மணிக்கு 40 முதல் 60 கி.மீ வேகத்தில் வீசும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. அதேபோல், மே 3 முதல் மே 6 வரை வடமேற்கு மற்றும் மத்திய இந்தியாவின் சமவெளிப் பகுதிகளிலும், கிழக்குக் கடற்கரை மாநிலங்களிலும் இடி மற்றும் புயல் செயல்பாடுகள் இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூடுதல் மழைப்பொழிவு நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் வெப்பத்தைத் தணிக்கவும் உதவும் என்றாலும், குறுகிய காலத்தில் பெய்யும் தீவிர மழை நகர்ப்புற வெள்ளத்திற்கும் விவசாயப் பாதிப்புகளுக்கும் வழிவகுக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# உ.பி. நீதிபதியிடம் ரூ.24 லட்சம் மோசடி

**லக்னோ, மே 3:**

உ.பி. தலைநகர் லக்னோவில் 'அல் ஃபஹத் டூரிசம் கம்பெனி' என்ற ஒரு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தின் சார்பில் ஹஜ் யாத்திரைக்கு ஏற்பாடு செய்வதாக கூறி நீதிபதி ஒருவரிடம் ஆன்லைனில் ரூ.23.99 லட்சம் வசூலித்து மோசடி செய்யப்பட்டது.

புகாரின் அடிப்படையில் போலீஸார் விசாரணை நடத்தி அந்த நிறுவனத்தை சேர்ந்த உசாமா ரஷீதி, இஜாஸ் அகமது ஆகிய இருவரை கைது செய்தனர். நிறுவனத்தின் இயக்குநர் ஆமிர் ரஷீதி உள்ளிட்ட இருவரை தேடி வருகின்றனர்.

இந்த முறைகேட்டில் 4 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பணத்தை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

# 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி தீவிரம்: என்.சி.இ.ஆர்.டி. தகவல்

**புதுடெல்லி, மே 3:**

புதிய தேசிய கல்விக்கொள்கை அடிப்படையில் 9-ம் வகுப்புக்கு புதிய பாடப்புத்தகங்களை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.) அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய பாடப்புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பல இடங்களில் இருந்து புகார் எழுந்துள்ளது. எனவே இது தொடர்பாக என்.சி.இ.ஆர்.டி. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'புதிய கல்விக்கொள்கை அடிப்படையிலான 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் போர்க்கால அடிப்படையில் அச்சிடப்பட்டு வருகின்றன. அத்துடன் நாடு முழுவதும் வினியோகிக்கப்பட்டும் வருகின்றன. மிக அதிக எண்ணிக்கையிலான பாடப்புத்தகங்கள் தேவைப்படுவதால், சில இடங்களில் அவற்றின் வினியோகத்துக்கும் தேவைக்கும் இடையே தற்காலிக இடைவெளி ஏற்பட்டுள்ளது' என கூறப்பட்டுள்ளது.

இந்த சூழலை என்.சி.இ.ஆர்.டி. உன்னிப்பாகக் கண்காணித்து, இந்த இடைவெளியைக் குறைக்கப் பணியாற்றி வருவதாகவும், பாடப்புத்தகங்களின் வினியோகம் சீரடைந்து வருவதாகவும் கூறியுள்ளது.

# 20 ஆண்டுகளாக வசித்து வந்த அரசு வீட்டை காலி செய்தார் நிதிஷ்

**பாட்னா, மே 3:**

பிஹார் முதல்வராக இருந்த நிதிஷ்குமார் கடந்த மார்ச் மாதம் ராஜினாமா செய்தார். இதைத் தொடர்ந்து அவர் மாநிலங்களவை எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில் 20 ஆண்டுகளாக தான் வசித்து வந்த முதல்வரின் அதிகாரப்பூர்வ வீட்டை நேற்று நிதிஷ் குமார் காலி செய்தார். அவரது வீட்டில் இருந்த கட்டில், மேஜை, நாற்காலிகள், ஏர் கூலர்கள் போன்ற பொருட்களை அவரது வேலையாட்கள் டிராக்டர் மூலம் அனுப்பி வைத்தனர். பல ஆண்டுகள் முதல்வராக இருந்த போதும் தனது வீட்டில் விலையுயர்ந்த பொருட்கள் எதையும் நிதிஷ்குமார் பயன்படுத்தவில்லை. அவர் தினமும் பயன் படுத்தும் பொருட்களை 3 சக்கர தள்ளுவண்டியில் அவரது உதவியாளர்கள் எடுத்துச் சென்றனர்.

பாட்னாவிலுள்ள அன்னே மார்க் பகுதியில் வசித்து வந்த நிதிஷ்குமார், தற்போது சர்க்குலர் சாலையில் 7-ம் எண்ணுள்ள வீட்டுக்கு மாறியுள்ளார். சுமார் 20 ஆண்டுகள் முதல்வராக இருந்த போதும்அவர் ஏசி போன்ற பொருட்களைப் பயன்படுத்தவில்லை. கடந்த 2014-ல் அவர் முதல்வர் பதவியை ராஜினாமா செய்து, ஜிதன் ராம் மாஞ்சியை முதல்வர் பதவியில் அமர்த்தினார்.

அப்போது சில காலம் சர்க்குலர் சாலை பங்களாவில் நிதிஷ்குமார் வசித்து வந்தார். தற்போது அதே பங்களாவுக்குச் செல்கிறார் நிதிஷ்குமார். நிதிஷ்குமாரின் இந்த எளிமையான வாழ்க்கையைப் பாராட்டி சமூக வலை தளங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

# கேரளாவில் 6-ந்தேதி ஓட்டல் உரிமையாளர்கள் வேலைநிறுத்தம் அறிவிப்பு



**திருவனந்தபுரம், மே 3:**

வணிக சிலிண்டர்களின் விலை உயர்வு தொடர்பாக எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்ட அறிவிப்புக்கு பல்வேறு அரசியல் கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், கேரள மாநிலத்தில் வணிக சிலிண்டர்கள் விலை உயர்வை கண்டித்து வரும் 6-ந்தேதி மாநிலம் தழுவிய வேலைநிறுத்தப் போராட்டம் நடத்த உள்ளதாக ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கேரள மாநில ஓட்டல் மற்றும் ரெஸ்டாரண்ட் உரிமையாளர்கள் சங்க தலைவர் ஜெயபால் கூறுகையில், "வணிக சிலிண்டர்களின் விலை 993 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 5 மாதங்களில் சிலிண்டர் விலை 1,498 ரூபாய் உயர்ந்துள்ளது. இதனால் உணவு உற்பத்தி மற்றும் விநியோகத் துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வணிக சிலிண்டர்களின் நியாயமற்ற விலை உயர்வை கண்டித்து மாநிலம் முழுவதும் வரும் 6-ந்தேதி ஓட்டல்கள் மற்றும் ரெஸ்டாரண்டுகள் மூடப்படும். மாவட்ட தலைநகரங்கள் மற்றும் எண்ணெய் நிறுவன அலுவலகங்கள் முன்பு தர்ணா போராட்டங்கள் நடத்தப்படும்" என்று தெரிவித்தார்.

## அணு ஆயுதமற்ற உலகம்: அனைவரது முயற்சியும் அவசியம்

மாஸ்கோ, மே 3:

அணு ஆயுதங்களற்ற உலகம் கட்டமை க்கப்பட வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறியுள்ளார். 11 ஆவது ஆயுதப் பரவல் தடை ஒப்பந்த ஆய்வு மாநாட்டில் வாசிக்கப்பட்ட புடினின் உரையில் அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் விதிகளையும் நோக்கங்களையும் முழுமையாகரஷ்யாபின்பற்றுகிறது.தற்போதையசிக்கலான சர்வதேசச் சூழ்நிலையில், அணு ஆயுதங்களற்ற உலகைக் கட்டியெழுப்பும் பாதையில் கூடுதல் முன்னேற்றத்தை அடைய அனைத்து நாடுகளின் முயற்சிகள் அவசியம். அதே சமயம், எந்தவொரு தரப்பினரின் பாதுகாப்பிலும் சமரசம் செய்து கொள்ளக்கூடாது என குறிப்பிட்டுள்ளார்.

## அமைதிப் பேச்சுவார்த்தை : பாக்., தொடர்ந்து மேற்கொள்ளும்

மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச்சூழலை தணிக்க பாகிஸ்தான் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் என அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தாஹிர் ஹுசைன் அந்திராபி தெரிவித்துள்ளார். போர்நிறுத்தம் ஏற்பட மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன. அம்முயற்சிகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. பேச்சுவார்த்தை மூலம் இதற்குத் தீர்வு கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். எங்களது முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம் என்று அவர் கூறியுள்ளார்.


## மிக வேகமாக வெப்பமடைகிறது: ஐரோப்பாவுக்கு எச்சரிக்கை

மற்ற கண்டங்களை விட ஐரோப்பா அதிவேகமாக வெப்பமடைந்து வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய பருவநிலை அறிக்கையில் 1980-ஆம் ஆண்டிலிருந்து, ஐரோப்பா உலகளாவிய சராசரியை விட இரண்டு மடங்கு வேகமாக வெப்பமடைந்து வருகிறது. இதன் மூலம் பூமியில் மிக வேகமாக வெப்பமடைந்து வரும் கண்டமாக ஐரோப்பா உருவெடுத்துள்ளது என கூறப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் 95 சதவீதப் பகுதிகளில் சராசரியை விட அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. மத்திய தரைக் கடல் முதல் ஆர்க்டிக் வட்டம் வரை வெப்பம் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புர்கினாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரம்

மாலி பாதுகாப்புத்துறை அமைச்சரை கொலை செய்த பயங்கரவாதிகள் அந்நாட்டின் சில நகரங்களை கைப்பற்றியுள்ளனர். பிரான்சுக்கு எதிரான ராணுவ ஆட்சி நடைபெறும் மாலி, நைஜர், புர்கினா பாசோ ஆகிய நாடுகளில் அல்-கொய்தா, ஐஎஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகள் மூலம் ஆட்சிக்கவிழ்ப்பு நடத்த மேற்குலக நாடுகள் திட்டமிட்டு வருகின்றன. இந்நிலையில் புர்கினா பாசோ முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பை பலப்படுத்தி வருகின்றது. இதற்காக ஒரு சிறப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் விழிப்புடன் இருக்கு மாறும் அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

## ‘உலகுக்கு அமெரிக்கா ஆபத்தை உருவாக்குகிறது’




உலக சுகாதார அமைப்பிற்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை இன்னும் வழங்கவில்லை என்று அந்த அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் அத னோம் குற்றம்சாட்டியுள் ளார். அமைப்பில் இருந்து அமெரிக்கா வெளியேறிய நிலையில் இந்த தொகை யை வழங்க வேண்டியது அந்நாட்டின் கடமை. ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. “இது பண த்தைப் பற்றியதல்ல. சுகா தாரப் பாதுகாப்பு என்பது உலகளாவிய ஒற்றுமை யைக் கோருகிறது. உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியேறுவதன் மூலம் அமெரிக்கா உலகிற்கு ஆபத்தை உருவாக்குகிறது எனவும் கூறியுள்ளார்.

# அமெரிக்கா உடனான போர் மீண்டும் தொடங்க வாய்ப்பு - ஈரான் ராணுவம்



தெஹ்ரான், மே 3:

அணுசக்தி விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்து தாக்குதல் தொடங்கிய போரில் தற்போது தற்காலிக சண்டை நிறுத்தம் அமலில் உள்ளது. ஆனால் அணு சக்தி தொடர்பாக அமெரிக்கா - ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடப்பதில் இழுப்பறி இருந்து வருகிறது. மேலும் ஹார்மூஸ் ஜலசந்தி விவகாரத்தில் இருநாடுகள் இடையே பதற்றம் நீடித்து வருகிறது. அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்யாவிட்டால் தாக்குதல் நடதுவோம் என்று ஈரானை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எச்சரித்தார். இதற்கிடையே புதிய சமரசர திட்டத்தை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவிடம் வழங்கியது. ஆனால் அதை டிரம்ப் நிராகரித்து விட்டார். ஈரானின் புதிய சமசரத்தில் எனக்கு திருப்தி இல்லை என்று தெரிவித்தார்.

இந்தநிலையில், ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி கூறியதாவது:-

ஹார்மூஸ் ஜலசந்திக்கான புதிய சட்டவிதிகளை ஈரான் அறிமுகப்படுத்தும், இந்த ஜலசந்திக்கான புதிய நிர்வாக நடைமுறைகளும் சட்ட விதிகளும் இப்பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் நன்மையளிக்கும் வகை யில் அமைதியையும் முன்னேற்ற த்தையும் கொண்டு வரும்.

இதன் பொருளாதார பலன்கள் ஈரானிய தேசத்தின் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்பும். இதன்மூலம் பாரசீக வளைகுடா பிராந்தியத்தை ஈரான் பாதுகாக்கும். இந்த நீர்வழியில் விரோத சக்திகளான எதிரிகள் மேற்கொள்ளும் அத்துமீறல்களை ஈரான் முறியடிக்கும்.

அமெரிக்கா எந்த ஒரு உடன்படிக்கையையோ அல்லது ஒப்பந்தத்தையோ மதிப்பதில்லை, ஏதேனும் முட்டாள்தனமான செயலில் ஈடுபட முயன்றால் அதை எதிர்கொள்ள முழுத் தயார் நிலையில் இருக்கிறோம் என்றார்.

## பாகிஸ்தான்: 13 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை!



ஆப்கன், மே 3:

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணத்தில் ஊடுருவ முயன்ற 13 பயங்கரவாதிகளைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.


தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-ஏ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பைச் சேர்ந்த இவர்கள், முகமந்த் மற்றும் வடக்கு வஜிரிஸ்தான் மாவட்டங்களில் எல்லை தாண்டி ஊடுருவ முயன்றபோது ராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, முறியடிக்கப்பட்டனர்.

இதனிடையே, பன்னு மாவட்டத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினரின் கவச வாகனத்தின் மீது அடையாளம் தெரியாத பயங்கரவாதிகள் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் காவலர் ராஸ் அலி ஷா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அருகில் இருந்த பொதுமக்களில் ஒருவரும் காயமடைந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்க ப்பட்டுள்ளார்.

## காசா சென்ற மனிதாபிமான கப்பல்களை கடத்திய இஸ்ரேல்




டெல்அவிவ், மே 3:

பாலஸ்தீன மக்களுக்கான நிவாரணப்பொருட் களுடன் காசா சென்ற சமூகக்கப்பல் குழுவை மறித்து கடத்தியுள்ளது இஸ்ரேல் ராணுவம்.

இத்தாலியின் அகஸ்டா துறைமுகத்தில் இருந்து ஏப்ரல் 26 அன்று சமூகக் கப்பல் குழு புறப்பட்டுள்ளது.

முன்பாக, ஸ்பெயின் மற்றும் பிரான்சிலிருந்து ஏப்ரல் தொடக்கத்திலேயே சில கப்பல்கள் கிளம்பியிருந்தன. கிரீஸ் மற்றும் துருக்கியிலிருந்தும் கப்பல்கள் இந்த குழுவுடன் இணைந்து கொண்டன. இதுவரை சென்றதிலேயே மிகப்பெரிய குழுவாக 50 க்கும் மேற்பட்ட கப்பல்களுடன் சென்ற பயணமாக இது கருதப்படுகிறது. மருத்துவ நிபுணர்கள், பத்திரிகையாளர்கள், பொறியாளர்கள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்கள் என உலகின் பல நாடுகளிலிருந்து 400க்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பயணத்தில் பங்கேற்றுள்ளனர்.

அயர்லாந்து குடியரசுத் தலைவர் கேத்தரின் கானலியின் சகோதரி, மருத்துவர் மார்க்கரெட் கானலி இந்த பயணத்தில் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர்களின் குழு காசாவிலிருந்து சுமார் 1,111 கிலோமீட்டர் தொலைவில், சர்வதேச கடல் பரப்பில் பயணித்துக்கொண்டிருந்த போது இஸ்ரேல் ராணுவம் தகவல் தொடர்புகளை முடக்கி டிரோன்கள், ஆயுதங்களுடன் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி கப்பலில் இருந்தவர்களை துப்பாக்கி முனையில் கடத்தியுள்ளது. மொத்தம் 58 கப்பல்களில் 22 கப்பல்கள் இஸ்ரேல் ராணுவத்தால் கடத்தப்பட்டுள்ளன.

36 கப்பல்கள் தொடர்ந்து காசா நோக்கி பயணித்துக்கொண்டுள்ளன என்று அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சர்வதேசச் சட்டத்தின் கீழ் சர்வதேசக் கடல் பரப்பில் இஸ்ரேலுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இது ஒருகடத்தல் நடவடிக்கை தான் எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்..

கடந்த 2025 ஆம் ஆண்டு இதேபோல காசாவிற்கு நிவாரணப்பொருட்களுடன் சென்ற கப்பல் குழுவைச் சேர்ந்த 450 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் நெல்சன் மண்டேலாவின் பேரன், சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா தன்பர்க், ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரிமா ஹசன் ஆகியோர் அடங்குவர்.

அவர்களில் பலர் இஸ்ரேல் சிறையில் உளவியல் மற்றும் உடல் ரீதியான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதாக குற்றம்சாட்டியது குறிப்பிட த்தக்கது.

## மத்திய கிழக்கு நாடுகளுக்கு 8.6 பில்லியன் டாலர் ஆயுதங்களை விற்க அமெரிக்கா ஒப்புதல்

வாஷிங்டன், மே 3:


இஸ்ரேல், கத்தார், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளுக்கு 8.6 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ராணுவ ஆயுதங்களை விற்பனை செய்ய அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் நிர்வாகம், மத்திய கிழக்கு நட்பு நாடுகளான இஸ்ரேல், கத்தார், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு மொத்தம் 8.6 பில்லியன் டாலருக்கும் அதிகமான ராணுவ தடவாளங்களை விற்பனை செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ வெளியிட்ட அறிவிப்பில், மத்திய கிழக்கு நட்பு நாடுகளுக்கு உடனடியாகப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய அவசரநிலை நிலவுவதை கணக்கில் கொண்டு, இந்த விற்பனைக்கான நாடாளுமன்ற ஆய்வுகளுக்கு விலக்களித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலமாக, கத்தாருக்கு 4.01 பில்லியன் டாலர் மதிப்பிலான பேட்ரியாட் வான் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு மற்றும் 992.4 மில்லியன் டாலர் மதிப்பிலான மேம்பட்ட துல்லியமாக அழிக்கும் ஆயுத அமைப்புகள் (APKWS) ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், குவைத்திற்கு 2.5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு ஒருங்கிணைந்த போர் கட்டளை அமைப்பு மற்றும் இஸ்ரேலுக்கு 992.4 மில்லியன் டாலர் மதிப்பிலான மேம்பட்ட துல்லியமாக அழிக்கும் ஆயுத அமைப்புகள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அமெரிக்க வெளியுறவுத்துறை, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு 147.6 மில்லியன் டாலருக்கு APKWS அமைப்பை விற்பனை செய்யவும் ஒப்புதல் அளித்தது. பிப்ரவரி 28 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதற்குப் பதிலடியாக, ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ராணுவ தளங்களைக் கொண்ட வளைகுடா நாடுகள் மீது தாக்குதல்களை நடத்தியது. இதன் காரணமாக தற்போது வளைகுடா நாடுகள் அதிகளவிலான ஆயுதங்களை வாங்கத் தொடங்கியுள்ளன.

## “ஈரான் முன்மொழிந்துள்ள நிபந்தனைகள் ஏற்புடையவை அல்ல” - ட்ரம்ப்



வாஷிங்டன், ஏப்.3:

மேற்காசிய போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஈரான் அரசு திருத்தப்பட்ட புதிய நிபந்தனைகளை அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளது. இரு தரப்புக்கும் இடையே மத்தியஸ்தம் மேற்கொண்டு வரும் பாகிஸ்தான் மூலம் இது அமெரிக்காவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளதாவது:

இரண்டு தரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் உள்ளது. இருந்தாலும் போரை முடிவுக்கு கொண்டு வர ஈரான் முன்மொழிந்துள்ள நிபந்தனைகள் ஏற்புடையவை அல்ல. அது எனக்கு திருப்திகரமாக இல்லை. அவர்களின் அரசு தலைமை ஒருங்கிணையாமல் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். மேற்காசிய போர்: கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தின. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்தச் சூழலில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையே கடந்த 11, 12-ம் தேதிகளில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. எனினும் அமைதி முயற்சிக்காக காலவரையின்றி போர் நிறுத்தம் அமல் செய்யப்படுவதாக அதிபர் ட்ரம்ப் கடந்த வாரம் அறிவித்தார். இதனால் இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு தரப்பும் முரண்படுவதால் தொடர்ந்து பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் வணிக எரிவாயு சிலிண்டரின் விலை நேற்று ஒரே நாளில் ரூ.990 உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

## பூமியை சுற்றி வரும் ராக்கெட், நிலவின் மீது மோத தயாராக உள்ளது.. எப்போது?



நியூயார்க், மே 3:

விண்வெளியில் ஆய்வு பணிகளை மேற்கொள்வதற்காக விண்கலங்களை ஏற்றிக்கொண்டு ராக்கெட்டுகள் செல்லும். அப்படி அனுப்ப கூடிய ராக்கெட்டுகள் விண்கலங்களை இலக்கு பகுதியில் விட்டு விடும். ஒரு சில ராக்கெட்டுகள் விண்ணிலேயே எரிந்து சாம்பலாகி விடும்.

இதனால், விண்வெளியில் குப்பைகள் சேர்வது தடுக்கப்படும். பெரிய பாதிப்புகளும் இராது. எனினும், சில ராக்கெட்டுகள் பூமிக்கு திரும்பி வரும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கும். அந்த வகையை சேர்ந்த ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ரக ராக்கெட் ஒன்று நாசாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து, கடந்த 2025-ம் ஆண்டு ஜனவரி 15-ந்தேதி 2 லேண்டர்களுடன் நிலவுக்கு புறப்பட்டு சென்றது.

2 லேண்டர்களும் நிலவை அடைந்து விட்டன. எனினும், அப்போது ஒரு லேண்டர் நிலவின் மீது மோதி விட்டது. புளூ கோஸ்ட் என்ற மற்றொரு லேண்டர் நிலவில் வெற்றியுடன் தரையிறங்கி உள்ளது. 2 வாரங்கள் செயல்பட்டு, நிலவில் சூரியன் மறையும் புகைப்படம் ஒன்றை எடுத்து அனுப்பியது. எனினும், நிலவில் சூரியன் மறைந்ததும் தன்னுடைய ஆற்றலை அது இழந்தது.

இந்த நிலையில், லேண்டர்களை இறக்கி விட்ட அந்த ராக்கெட்டின் மேல் பகுதி, தன்னுடைய வேலையை முடித்து விட்டு பூமிக்கு திரும்ப வேண்டும். ஆனால், அது உயர்மட்ட சுற்று வட்டப்பாதையில் சிக்கி கொண்டது. பூமிக்கு திரும்பவேயில்லை. இதனால் ராக்கெட்டுக்கு என்ன ஆனது? என விஞ்ஞானிகள் தொடர்ந்து அதனை கண்காணித்து வந்தனர்.

இதுபோன்று 1,053 முறை கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டதில், பல முறை பூமி மற்றும் நிலவு ஆகியவற்றின் சுற்று வட்டப்பாதைகளை அது கடந்து சென்றது கவனிக்கப்பட்டது. ஆனால், எதன் மீதும் மோதும் வகையில் நெருங்கி செல்லவில்லை.

இந்த நிலையில், இந்த மோதல் விரைவில் நடக்க போகிறது என விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர். இதுபற்றி, சுற்று வட்டப்பாதை தொடர்பான தனியார் பகுப்பாய்வாளரான பில் கிரே ஆய்வு செய்து வருகிறார். அதன் பயணம் மற்றும் வருங்காலத்தில் அதற்கு என்ன நடக்கும்? என்பது பற்றி கணித்துள்ளார்.

இதன்படி, ஆகஸ்டு 5-ந்தேதி மதியம் 1.14 மணியளவில் அது நிலவின் மீது மோதும். அப்போது மணிக்கு 8,700 கி.மீ. அல்லது ஒலியின் 7 மடங்கு வேகத்தில் அது இயங்கும் என தெரிவித்து உள்ளார்.

இதனால், யாருக்கும் அச்சுறுத்தல் இல்லை என கூறிய அவர், எனினும் விண்வெளியில் இதுபோன்ற குப்பைகள் சேராமல் அதனை கவனத்துடன் அகற்றுவது பற்றிய தேவையை நமக்கு உணர்த்தியுள்ளது என கூறுகிறார். அந்த ராக்கெட்டின் மேல் பகுதி, இதுவரை 26 நாட்களில் பூமியை ஒரு முறை சுற்றி வந்துள்ளது.

# 13 மொழிகளில் இன்று 'நீட்' நுழைவுத் தேர்வு 22.80 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர்



# சுங்கச்சாவடியில் தானாகவே கட்டணம் வசூலிக்கும் முறை.. குஜராத்தில் அறிமுகம்

# அமெரிக்கா உடனான போர் மீண்டும் தொடங்க வாய்ப்பு

## ஈரான் ராணுவம்

# நாளை முதல் கத்தரி வெயில்! கோடை மழைக்கு வாய்ப்பு?



## சத்தீஷ்கார்: கண்ணிவெடி அகற்றும்போது சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்து 3 வீரர்கள் பலி


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 03.05.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ-பேப்பர்